# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2011
ரூ. 7.00




## கார்ப்பரேட் கொள்ளை-ஊழல்

### மறைந்துள்ள உண்மைகள்!

# கோவை என்.டி.சி. தொழிற்சங்கத் தேர்தல்:

# பு.ஜ.தொ.மு. மாபெரும் வெற்றி!



பு.ஜ.தொ.மு.வின் வெற்றியை கொண்டாடி மகிழும் தொழிலாளர்கள்

**த**மிழகத்திலுள்ள என்.டி.சி. எனப்படும் தேசியப் பஞ்சாலைக் கழகத்துக்குச் சொந்தமான 7 மில்களிலும் (கோவை-5, கமுதி-1, காளையார்கோவில்-1) டிசம்பர் 18-ஆம் தேதியன்று தொழிற்சங்க அங்கீகாரத்துக்காக நடைபெற்ற தேர்தலில், கோவை மண்டல பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் (புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியுடன் இணைந்தது) பெருவெற்றி பெற்றிருக் கிறது.

மொத்த வாக்குகளில் முதலிடத்தை தொ.மு.ச.வும் (2 பிரதிநிதிகள்), இரண்டாமிடத்தை பு.ஜ.தொ.மு.வும், (ஒரு பிரதிநிதி), மூன்றாமிடத்தை சி.ஐ.டி.யு.வும் (ஒருவர்), நான்காம் இடத்தை ஐ.என்.டி.யு.சி.யும் (ஒருவர்) பெற்றிருக்கின்றன. ஏ.ஐ.டி.யு.சி., எச்.எம்.எஸ்., பி.எம்.எஸ்., மற்றும் ம.தி.மு.க., அ.தி.மு.க. சங்கங்கள் உள்ளிட்ட 8 சங்கங்கள் தோல்வியடைந்தன.

இந்தத் தேர்தல் 36 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக நடத்தப்பட்டிருக்கும் தொழிற்சங்கத் தேர்தல். 1974- இல் தேசியப் பஞ்சாலைக் கழகத்தின் ஆலைகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இங்கு தொழிற்சங்கத் தேர்தலே நடந்ததில்லை. ''செக் ஆஃப்'' முறையில் தொழிலாளிகளிடம் சந்தாவை மட்டும் வசூலித்துக் கொண்டு, தொழிலாளிகளை நாட்டாமை செய்து கொண்டிருந்த இந்தச் சங்கத் தலைமைகளுக்கு நிர்வாகமும் மனமகிழ்ச்சியுடன் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

என்.டி.சி. மத்திய அரசு நிறுவனமாக இருந்த போதிலும், இங்கு தொழிலாளர்களின் நிலைமை மிகவும் கொடூரமானது. 20 ஆண்டுகளாக வருடாந்திர ஊதிய உயர்வே கிடையாது. 28 ஆண்டுகள் பணியாற்றிய நிரந்தரத் தொழிலாளியின் மொத்த சம்பளமே 9000 ரூபாய்தான். ஆனால், அதிகாரிகளுக்கோ 6-ஆவது ஊதியக் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு அதிகாரிகளுக்குரிய ஊதியம். புதிதாக வேலைக்குச் சேரும் அதிகாரிக்குத் துவக்கச் சம்பளமே ரூ.40,000-க்கு மேல்.

இந்த அநீதிகளை எதிர்த்து சங்கத் தலைமைகள் எதுவும் போராடியதில்லை. மாறாக, ''நிர்வாகத்திடம் பகல் ஷிப்டு வாங்கித்தர 1000 ரூபாய், குவார்ட்டர்ஸுக்கு ரூ.5000, விருப்ப ஓய்வு வாங்கித்தர ரூ.50,000, இவையன்றி நிர்வாகத்திடம் முன்பணமோ கடனோ பெற வேண்டுமானால் அதற்கு ஒரு ரேட் ...'' என்று 36 ஆண்டுகளாகத் தொழில் நடத்தி வந்தார்கள், இந்தத் தொழிற்சங்க புரோக்கர்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் மீது சதித்தனமாகத் திணிக்கப்பட்டிருந்த இந்தக் கட்டப் பஞ்சாயத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், தேர்தலை நடத்த வைப்பதற்கும் பு.ஜ.தொ.மு. தொடர்ந்து போராடியது. நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, தேர்தல் நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தியது.

தேர்தல் நடத்தப்பட்டால் பு.ஜ.தொ.மு. வெற்றி பெற்றுவிடும் என்ற அச்சத்தினாலும், 36 ஆண்டுகளாக வழக்கத்தில் இல்லாத ஜனநாயக உரிமையைத் தொழிலாளி வர்க்கத்துக்கு வழங்கினால் நேரக்கூடிய அபாயம் குறித்த கவலையினாலும் உறக்கம் இழந்த தொழிற்சங்கத் தலைமைகள், தேர்தலுக்கு உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை வாங்க அரும்பாடுபட்டனர்.

தேர்தலை நிறுத்துவதற்கு இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் பு.ஜ.தொ.மு. முறியடித்தது. அதன் பின்னர் நடைபெற்றிருப்பதுதான் இந்தத் தேர்தல். எனவே, இத்தேர்தலில் பு.ஜ.தொ.மு பெற்றிருக்கும் வெற்றியினைக் காட்டிலும், தேர்தலை நடத்த வைத்துத் தொழிலாளிகளின் ஜனநாயக உரிமையை மீட்டுக் கொடுத்ததுதான் பு.ஜ.தொ.மு.-வின் முதன்மையான வெற்றி.

இரண்டாவது வெற்றி, தற்காலிகத் தொழிலாளர்கள் 300 பேருக்கு வாக்குரிமை பெற்றுத் தந்ததாகும். என்.டி.சி.யின் 7 மில்களிலும் பணியாற்றும் நிரந்தரத் தொழிலாளர்கள் சுமார் 2600 பேர். தற்காலிகத் தொழிலாளர்கள் 2600 பேர். இவர்களில் பலர் 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர்கள். இவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை கோரிப்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

## ஸ்பெக்ட்ரம்:

# கொள்ளையே கொள்கை!

ஸ்பெக்ட்ரம் கொள்ளையில் விற்கப்பட்ட பொருள் என்ன, வாங்கப் பட்ட பொருள் என்ன என்பது குறித்துப் புரிந்து கொள்வது பெரும்பான்மை மக்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஆயிரம் ரூபாய்க் காகிதத்தைக் கண்ணால் பார்த்திராத மக்களைக் கொண்ட நாட்டில், கோடிக்கு எத்தனை பூச்சியங்கள் என்பதைக்கூட நிச்சயமாகச் சொல்லத் தெரியாத மக்களைக் கொண்ட நாட்டில், கொள்ளையடிக்கப்படும் தொகை எத்தனை கோடியாக இருந்தால்தான் என்ன? ஒரு விதத்தில் பார்த்தால், கொள்ளையின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, அதுவே திருடர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாகி விடுகிறது.

இத்தனை பிரம்மாண்டமான கொள்ளை நடந்திருந்தபோதும், அதனைத் தமது அரசியல் ஆதாயத்துக்குக்கூடப் பயன்படுத்த முடியாத நிலையிலேயே பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. கூட்டு நாடாளுமன்றக் குழுவுக்காகக் கூச்சல் போடுவதைத் தவிர, வேறு எதையும் செய்யக்கூடிய நிலையில் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இல்லை. கூட்டு நாடாளுமன்றக் குழு விசாரணைக்கு பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்களைக் கொண்டு வந்து நிறுத்துவதன் மூலம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று எதிர்க்கட்சிகள் திட்டமிட்டிருந்தன போலும்! இதனைப் புரிந்து கொண்ட பாரம்பரியமிக்க தொழில்முறைத் திருடர்களான காங்கிரசு கட்சியினர் விவகாரத்தையே தலைகீழாகத் திருப்பிவிட்டார்கள். 2001 முதல் தொலைத் தொடர்புத் துறையில் நடந்தவை அனைத்தையும் விசாரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் உத்தரவைப் பெற்றதன் மூலம், ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்த சி.பி.ஐ.-யின் விசாரணை வலயத்துக்குள் பா.ஜ.க. உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சிகள் அனைத்தையும் கொண்டு வந்து விட்டனர். ராடியா-பா.ஜ.க. பிரமுகர்கள் தொடர்பு குறித்த விவரங்களை ஒவ்வொன்றாகக் கசியவிடுவதன் மூலம் தன்னிலை விளக்கம் அளிக்கும் நிலைக்கு பா.ஜ.க.-வைத் தள்ளியிருக்கின்றனர்.

கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், தங்களுக்கிடையிலான முரண்பாட்டை எந்த எல்லை வரை தள்ளிச் செல்வதை அனுமதிக்கலாம் என்பதை ஆளும் வர்க்கங்களே தீர்மானிக்கின்றன. ஸ்பெக்ட்ரம் கொள்ளையின் தொகையைக் காட்டிலும், நீரா ராடியாவின் டேப் மூலம் அம்பலமாகியிருக்கும் விசயங்கள் ஆளும் வர்க்கத்துக்கு கவலையளிக்கின்றன. ஓட்டுக்கட்சித் தலைவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், அதிகார வர்க்கம், ஊடகங்கள், நீதிபதிகள் ஆகியோருக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான உறவு பற்றியும் மென்மேலும் அம்பலமாவது நீண்டகால நோக்கில் நன்மை பயப்பதல்ல என்பதால், இந்த லாவணிக் கச்சேரியை அதிக இரைச்சலின்றி முடித்துக் கொண்டு, அடுத்த கொள்ளைக்கு அணியமாவதற்கே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆ.ராசா மீதும், பெய்ஜால் போன்றவர்கள் மீதும் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக ஒரு வழக்கு, ராடியாவின் மீது ஒரு அந்நியச் செலாவணி வழக்கு என்று இந்தப் புலன் விசாரணை முடிக்கப்படுமானால், ஸ்பெக்ட்ரம் கொள்ளையின் ஆதாயத்தைப் விழுங்கிய டாடா, அம்பானி, மித்தல் போன்ற கார்ப்பரேட் திருடர்கள், கவுரவமான தொழிலதிபர்களாகவும், இந்தக் கொள்ளையைச் சாத்தியமாக்கிய தனியார்மயம் எனும் கொள்ளை, நாட்டு முன்னேற்றத்திற்கான கொள்கையாகவும் தொடர்ந்து நீடிக்கும். இதனினும் பிரம்மாண்டமான பகற்கொள்ளைகளையும் பெற்றெடுக்கும். அத்தகையதோர் நிலை உருவாவதைத் தடுக்கும் முயற்சியே இந்த இதழ். •


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 3
ஜனவரி 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

# ஸ்பெக்ட்ரம் வெறும் ஊழல் இல்லை!
# கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை!!

**ஒரு கொள்கைக்குரிய கௌரவத்துடன் அழைக்கப்படும் தனியார்மயம் என்பது தரகுப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் நடத்திக் கொண்டிருக்கும் தீவட்டிக் கொள்ளைதான்.**

''பாசிசம் என்பதை கார்ப்பரேடிசம் என்ற சொல்லால் அழைப்பதே மிகவும் பொருத்தமானது. ஏனென்றால், பாசிசம் என்பது தனியார் குழும முதலாளித்துவத் தின் அதிகாரம், அரசு அதிகாரம் ஆகியவற் றின் ஒன்றிணைவைக் குறிக்கிறது'' என்று தனது கொள்கையான பாசிசத்துக்கு விளக் கம் அளித்தான் முசோலினி.

'ஜனநாயகம்' என்ற சொல்லிலிருந்து குடிமக்களின் உரிமைகள் மென்மேலும் அகற்றப்பட்டு, அவற்றின் இடத்தில் கார்ப் பரேட் அதிகாரம் கோலோச்சத் தொடங்கி யிருக்கும் இன்றைய சூழலில், முசோலினி வகுத்த இலக்கணத்திற்கு மிகவும் அண்மை யில் இருக்கிறது இந்திய அரசு. எனினும், கார்ப்பரேட் அதிகாரம்தான் ஜனநாயகம் என்ற புதிய தாராளவாதக் கருத்து உலகெங் கும் கோலோச்சுவதாலும், ஜனநாயக அங் கியைக் கழற்றி வீசாமலேயே தமது நோக் கத்ததை நிறைவேற்றிக் கொள்ள இயலும் என்று இந்திய ஆளும் வர்க்கங்கள் தமது அனுபவத்தில் உணர்ந்திருப்பதாலும், இந் திய ஜனநாயக சீரியல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு சுயேச்சையான, நடுநிலை யான அரசு அதிகாரம் நிலவு வதைப் போன்ற தோற்றம் தொடர்ந்து பேணப்படுகிறது.

ஸ்பெக்ட்ரம் கொள்ளை தொடர்பாக, அரசு அதிகாரி கள், முன்னாள் அமைச்சர் ராசா ஆகியோரது வீடுகள் சோதனையிடப்படுகின்றன. டாடா குழுமத்தின் அதிகாரத் தரகராகப் பணியாற்றி, ஸ்பெக்ட்ரம் முறைகேட்டின் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் பொதுச்சொத்தை கொள்ளையடிப்பதற்கு டாடா வுக்குத் தரகு வேலை பார்த்த நீரா ராடியா, ராசா மற்றும் அதி காரிகளின் வீடுகளும் நிறுவனங்களும் சோதனையிடப் படுகின்றன. இவர்களையெல்லாம் சி.பி.ஐ., 'துருவித் துருவி' விசாரிக்கிறது. ஆனால், ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் பல்லாயிரம் கோடிகளைச் சுருட்டியவர்களும், இந்தக் கொள்ளையைத் திட்டமிட்டு அரங்கேற்றியவர்களுமான டாடாவோ பிற தரகு முதலாளிகளோ விசாரிக்கப்பட வில்லை. அவர்களது நிறுவனங்களை சி.பி.ஐ. சோதனையிடவும் இல்லை.

எனினும், தொலைபேசி ஒட்டுக்கேட்புகள் வெளி யிடப்பட்டுவிட்டதனால் தனது உயிர்வாழும் உரிமை பாதிக்கப்பட்டுவிட்டதாக டாடா உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார். தற்போது நிலவும் சூழ் நிலை குறித்து பாரம்பரியமிக்க இந்தியத் தொழிலதிபர் கள் பெரிதும் வேதனை அடைந்திருப்பதாகவும், அவர் களையெல்லாம் அரசு உடனே சமாதானப்படுத்த வேண்டுமென்றும் இல்லையேல், தமது முதலீடுகளை யெல்லாம் வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்றுவிடு வார்கள் என்றும் எச்சரித்திருக்கிறார் எச்.டி.எஃப்.சி. என்ற பன்னாட்டு வங்கியின் தலைவர் தீபக் பரேக்.

பிரதமரும் பெரும் விசனத்துக்கு ஆளாகியிருக்கிறார். தொலைபேசி ஒட்டுக்கேட்புகள் கார்ப்பரேட் முதலாளி களுக்குத் தோற்றுவித்துள்ள அச்சத்தைப் புரிந்து கொள் வதாகவும், அதனைப் போக்குவதற்கு ஆவன செய்வதா

ஒரிசாவின் கலிங்கா நகர்ப் பகுதியில் அமையவுள்ள டாடாவின் இரும்பு உருக்காலைத் திட்டத்திற்கு எதிராக நடந்த போராட்டத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட 12 பழங்குடியினரின் சடலங்கள் எரியூட்டப்படுகின்றன. (கோப்புப் படம்)



கவும் வெளிப்படையாக அறிவித்திருக்கிறார். 'லாபியிங் செய்வது ஜனநாயக உரிமை' என்றும் அதனை முறைப் படுத்துவதற்கு ஆவன செய்வதாகவும் முதலாளிகளுக்கு உறுதியளித்திருக்கிறார், கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித். புதிய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் கபில் சிபல், ஸ்பெக்ட்ரம் கொள்ளை யின் நாயகர்களான டாடா, அனில் அம்பானி, மிட்டல் ஆகியோரை நேரில் சந்தித்து தொலைதொடர்புக் கொள்கை வகுப்பது குறித்த அவர்களது ஆலோசனை களைக் கேட்டறிந்திருக்கிறார்.

இப்படி ஊழல் நதியின் ஊற்றுமூலமான கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் சந்நிதியில் மன்மோகன் சிங் அரசு மண்டியிட்டுக் கொண்டிருக்க, அந்த ஊழல் ஊற்றி லிருந்து வழிந்தோடிய சாக்கடைகளான ராடியாவையும், ராசாவையும், இன்ன பிறரையும் சி.பி.ஐ., தூர் வாரிக் கொண்டிருக்கும் கேலிக்கூத்து பரபரப்பு செய்தியாக அன்றாடம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இது மட்டு மல்ல; ஊழல் குறித்த விவாதங்கள் அனைத்தும் தனி யார்மய-தாராளமயக் கொள்கைகளுக்கு ஆதரவான திசையில் திட்டமிட்டே கொண்டு செல்லப்படுகின் றன. இத்தகைய ஊழல்கள் தான் தனியார்மயக் கொள் கைகளுக்கும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை போடுவதா கவும், முதலாளிகளுக்குச் சோர்வை ஏற்படுத்துவதாக வும், எனவே இத்தகைய ஊழல்கள் உடனே ஒழிக் கப்பட வேண்டும் என்றும் சாமியாடுகிறார்கள் முதலா ளித்துவ அறிஞர்கள். இத்த கைய மெகா ஊழல்களைச் சாத்தியமாக்கிய தனியார் மயக் கொள்கையும், இந்த ஊழல்களால் பல்லாயிரம் கோடி ஆதாயம் அடைந்த தரகு முதலாளிகளுமே 'பாதிக் கப்பட்டவர்கள்' போலச் சித்தரிக்கப்படுகிறார்கள்.

ராடியா, கனிமொழி, ராசா போன்றவர்களின் கையில் சிக்கி இந்திய ஜனநாயகம் சிரிப்பாய்ச் சிரிப்ப தாகவும், டாடாவைப் போன்ற பாரம்பரியமிக்க கவுரவ மான தொழிலதிபர்கள் இந்த நாலாந்தர மனிதர்களிடம் விவரம் தெரியாமல் சிக்கிச் சீரழிந்து நிற்பதாகவும் சித்த ரிக்கிறார் ''சோ'' ராமஸ்வாமி. தனது தமிழ் வெறுப்பு, திராவிட வெறுப்பு, சாதித் துவேசம் ஆகியவற்றை வன் மத்துடன் வெளியிடுவதற்கான நல்வாய்ப்பாகவும் தி.மு.க.வினரின் இந்தக் களவாணித்தனத்தைப் பயன் படுத்திக் கொள்கிறார்கள், பார்ப்பன-இந்திய தேசிய வாதிகள்.

மொத்தத்தில் இந்த ஊழலின் சூத்திரதாரிகளான கார்ப்பரேட் கொள்ளையர்களை ஊழல் எதிர்ப்பாளர் களைப் போலவும், ஊழலால் பாதிக்கப்பட்டவர்களைப் போலவும் சித்தரிக்கின்ற இந்த மோசடிதான் எல்லா ஊழல்களையும் காட்டிலும் பெரிய ஊழலாகும்.

**ஊழல் நதியின் ஊற்றுமூலமான கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் சந்நிதியில் மன்மோகன் சிங் அரசு மண்டியிட்டுக் கொண்டிருக்க, அந்த ஊழல் ஊற்றிலிருந்து வழிந்தோடிய சாக்கடைகளான ராடியாவையும், ராசாவையும் இன்ன பிறரையும் சி.பி.ஐ. தூர் வாரிக் கொண்டிருக்கும் கேலிக்கூத்து அரங்கேறிக் கொண்டிருக்கிறது.**

### பொதுச்சொத்தை அம்பானி திருடினால், அது திறமை! ஆ.ராசா திருடினால், அது ஊழலாம்!

இந்தியாவின் தேர்தல் அரசியலில் ஒரு கட்சிக்கோ தலைவருக்கோ எதிரான பொதுக்கருத்தையும், அறம் சார்ந்த வெறுப்புணர்ச்சியையும் மக்கள் மத்தியில் உரு வாக்குவதில் 'ஊழல்' என்பது மிக முக்கியமான கருவி யாக இருந்துவந்திருக்கிறது. தனியார்மய, தாராளமய கொள்கைகளுக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் வலிமை யானதொரு பொதுக்கருத்தை உருவாக்குவதற்கு ஆளும் வர்க்கம் பயன்படுத்திய மிக முக்கியமான ஆயுதமும் 'ஊழல்' தான். ''அரசுத்துறை என்றால் ஊழல், தனியார் துறை என்றால் நேர்மை; அரசுத்துறை என்றால் திறமை யின்மை, அலட்சியம்; தனியார்துறை என்றால் திறமை, பொறுப்புணர்ச்சி'' என்ற கருத்தினைப் பரப்பி, அவற் றின் மீது சவாரி செய்துதான் அரசுத்துறைகளை விழுங் கும் தனது நோக்கத்துக்கு ஆதரவான பொதுக்கருத்தைத் தரகு முதலாளி வர்க்கம் உருவாக்கியது. நகராட்சி, மின் வாரியம், வட்டாட்சியர் அலுவலகம், போலீசு நிலை யம், நீதிமன்றம் முதலான அனைத்து வகையான அரசுத் துறை நிறுவனங்களிலும் ஊழலையும் அதிகாரத்திமிரை யும் அன்றாடம் அனுபவித்து வரும் மக்களும் ஆளும் வர்க்கத்தின் இந்தச் சூழ்ச்சிக்கு எளிதில் பலியாகினர், இன்னும் பலியாகிக் கொண்டும் இருக்கின்றனர்.

எனினும் கடந்த 20 ஆண்டுகளில், அதாவது தனியார் மயக் கொள்கைகள் அமலாகத் தொடங்கிய 1991-க்குப் பிறகுதான் இந்திய அரசியலில் நாம் கேள்விப்படும் ஊழல்களின் தொகைகள் 40,50 கோடியிலிருந்து ஆயி ரம் கோடிகளுக்கும் இன்று இலட்சம் கோடிகளுக்கும் உயர்ந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஹர்சத் மேத்தா, கேதன் பரேக் முதல் சத்யம் ராஜு வரை யிலான அனைவரும் தனியார்மயம் பெற்றெடுத்த தவப் புதல்வர்களே. 1990-க்கு முன் எவையெல்லாம் சட்டவி ரோதமென்றும், ஊழலென்றும் வரையறுக்கப்பட்டிருந் தனவோ, அவை அனைத்தையும் 1991 முதல் தனியார் மய, தாராளமயக் கொள்கைகள் படிப்படியாகச் சட்ட பூர்வமாக்கியிருக்கின்றன. அந்நியச் செலாவணி மோசடியைக் கட்டுப்படுத்தும் சட்டம் நீக்கப்பட்டு, மோசடி சட்டபூர்வமாக்கப்பட்டது; கருப்பை வெள்ளையாக்கும் பல திட்டங்கள் மூலம் கறுப்புப் பணம் வெள்ளையாக் கப்பட்டுவிட்டது; வரி ஏய்ப்புகளைத் தண்டிப்பதற்கு பதிலாக, முதலாளிகளுக்கான பல வரிகள் ஒழிக்கப்பட்டு

விட்டன. சட்டவிரோதமானவை அனைத்தும் சட்டபூர்வமானவை ஆக்கப்பட்டு விட்டதால், 1991-க்கு முன் முதலாளிகளின் ஊழல்களாகக் கருதப்பட்டவை அனைத்தும் இப்போது அவர்களது உரிமைகள் ஆகிவிட்டன.

டன் ஒன்றுக்கு 7000 ரூபாய் சந்தை மதிப்பு கொண்ட இரும்புத் தாதுவை டன் 27 ரூபாய்க்கு சுரங்க முதலாளிகளுக்கு விற்பனை செய்கிறது அரசு. இதனை ஊழல் என்றோ பகற்கொள்ளை என்றோ நாம் கூறலாம். ஆனால், முறையாக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு இந்த விற்பனை நடப்பதால், இது சட்டபூர்வமானதாகி விட்டது. எண்ணெய் வயல்கள், பொதுத்துறை ஆலைகள், விளைநிலங்கள் போன்ற பல இலட்சம் கோடி மதிப்புள்ள பொதுச்சொத்துக்களைப் பன்னாட்டு நிறுவனங்களும் தரகு முதலாளிகளும் கொள்ளையடித்து வருகிறார்கள். மலைகளும் ஆறுகளும் காடுகளும் காணாமல் போகின்றன. தற்போது இரும்புத்தாது வெட்டியெடுக்கப்படும் வேகத்தில், அடுத்த 30 அண்டுகளில் இந்தியாவில் இரும்புக் கனிமமே இருக்காது என்று எச்சரிக்கிறார்கள், துறைசார் வல்லுநர்கள். ஒரு மிகப்பெரும் சூறையாடலையும் பேரழிவையும் கண் முன்னே அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள் கார்ப்பரேட் கொள்ளையர்கள். நாட்டின் தொழில் வளர்ச்சி என்று இது போற்றப்படுகிறது.

இப்படி ஊர்ச் சொத்தைக் கொள்ளையடித்து அம்பானி, அகர்வால், டாடா, மித்தல் போன்ற பெரும் தரகு முதலாளிகள் தமது சொத்துகளை 40,50 மடங்கு பெருக்கிக் கொண்டு உலகப் பணக்காரர்களாக உயர்ந்திருப்பதும், அவர்கள் வெளிநாட்டுக் கம்பெனிகளையே விலைக்கு வாங்குவதும் அவர்களுடைய தொழில் திறமைக்குக் கிடைத்த சன்மானமாகப் போற்றப்படுகிறது. இந்தியா வல்லரசாவதற்கான ஆதாரமாகவும் காட்டப்படுகிறது.

இந்தக் கொள்ளைக்கே தனியார்மயம் என்று பெயர் சூட்டி, சட்டபூர்வமான கொள்கையாக மாற்றி, நிறைவேற்றித் தருகின்ற அமைச்சர்களும் அதிகாரிகளும் இதற்காக முதலாளிகளிடம் கையூட்டு பெறுவதும், இதே தனியார்மயக் கொள்கையைப் பயன்படுத்தி கருணாநிதி, சரத் பவார் முதலான அரசியல்வாதிகளும் அவர்களது குடும்பத்தினரும் பொதுச்சொத்துக்களை வளைப்பதும் மட்டும்தான், ஊழல் என்ற பெயரில் மக்கள் முன் நிறுத்தப்படுகிறது.

**நேற்று ''ட்ராய்'' தலைவராக இருந்த பெய்ஜால் இன்று நெஸ்லே நிறுவனத்தின் இயக்குநர். நேற்று ஐ.எம்.எஃப். அதிகாரியாக இருந்த மன்மோகன் சிங் இன்று பிரதமர். ஒழுக்கசீலர் மன்மோகனுக்கும் அயோக்கியன் பெய்ஜாலுக்கும் என்ன வேறுபாடு? சங்கிலிக்காக பெண்ணின் கழுத்தை மட்டும் அறுக்கும் 'நல்லவனுக்கும்', கற்பழித்துக் கழுத்தறுக்கும் 'அயோக்கியனுக்கும்' உள்ள வேறுபாடுதான்!**

தற்போது ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து நடைபெற்று வரும் விவாதங்களையே எடுத்துக் கொள்வோம். இதில் ''அரசின் சொத்தான அலைக்கற்றைகளை ஏன் தனியார் முதலாளிகளுக்கு விற்க வேண்டும்?'' என்ற கேள்வி எழுப்பப்படுவதில்லை. மாறாக, அதற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை, அவ்வாறு விற்பனை செய்வதற்கு கையாளப்பட்ட வழிமுறை, பின்பற்றத் தவறிய நெறிமுறைகள், வேண்டியவர்களுக்கு சலுகை வழங்கிய அமைச்சர்கள் - அதிகாரிகளின் முறைகேடுகள் ஆகியவற்றை மையப்படுத்தியே ஊழல் குறித்த இந்த விவாதம் சுழன்று கொண்டிருக்கிறது.

அதாவது, அரசு சொத்துகளை முதலாளிகளுக்குத் தாரை வார்க்கின்ற தனியார்மயக் கொள்கை என்பது பொருளாதார ரீதியில் மிகவும் சரியான, அப்பழுக்கற்ற, அறிவுபூர்வமான கொள்கை போலவும், அதனை அமல்படுத்துகின்ற அரசியல்வாதிகள் மன்மோகன் சிங்கைப் போல, மோடி, புத்ததேவ், நிதிஷ் குமாரைப் போல தனிப்பட்ட முறையில் சொத்து சேர்க்காத உத்தமர்களாக நடந்து கொள்ளும் பட்சத்தில், இந்தியா வல்லரசாவது உறுதி என்பது போலவுமே சித்தரிக்கப்படுகிறது.

### முதற்பெரும் ஊழல் - தனியார்மயமே!

தனியார்மயம் என்பது இந்தியாவை வல்லரசாக்குவதற்காக மன்மோகன், அலுவாலியா, சிதம்பரம் முதலான பொருளாதார மேதைகள் இராப்பகலாகக் கண்விழித்து ஆராய்ந்து கண்டுபிடித்த கொள்கை அல்ல.

முன்பு இந்தியாவிலும் வேறு பல நாடுகளிலும் அரசுத் துறை ஏற்படுத்தப்பட்டதற்கும், தொலைபேசி, மின்சாரம், ரயில்வே, சுரங்கங்கள், துறைமுகங்கள் போன்ற கேந்திரமான துறைகளிலிருந்து முதலாளிகள் விலக்கி வைக்கப்பட்டிருந்ததற்கும் குறிப்பான காரணங்கள் உண்டு. இத்தகைய துறைகளை நிர்மாணம் செய்வதற்குத் தேவைப்படும் மூலதனம் அதிகம், இலாபம் குறைவு என்ற காரணத்தினால் முதலாளிகளே இவற்றை அரசின் தலையில் கட்டி விட்டு, அந்தச் சேவைகளை மட்டும் சலுகை விலையில் அனுபவித்தனர். மேலும், இத்தகைய உயிர்நாடியான துறைகளை முதலாளிகளின் முழுக்கட்டுப்பாட்டில் விடுவதனால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் காரணமாகக் காட்டித்தான், அரசு இத்துறைகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இத்தகைய துறைகளைத் தனியாருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் விற்பது என்று முந்தைய கொள்கையைத் தலைகீழாக மாற்றிய போது, இதனால் நாட்டின் தற்சார்புக்கும் இறையாண்மைக்கும் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை சீர்தூக்கிப் பார்த்து இந்தக் கொள்கை மாற்றத்துக்கு எந்தக் கட்சியும் விளக்கமளிக்

கவில்லை. ஏனென்றால், தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற இக்கொள்கை டில்லியில் உருவாக்கப் பட்டதல்ல; அது வாஷிங்டனில் உருவாக்கப்பட்டது.

அது, அமெரிக்காவின் தலைமையிலான உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் முதலான நிறுவனங்கள், பன்னாட்டு நிதிமூலதனத்தின் தேவைக்கு ஏற்ப உருவாக் கிய கொள்கை. இந்தியா போன்ற நாடுகளின் மீது அவர் களால் விதிக்கப்பட்ட ஆணை. பிரதமர் நாற்காலியில் மன்மோகனுக்குப் பதிலாக சேடப்பட்டி முத்தையா அமர்ந்திருந்தாலும் அமலாகியிருக்கக்கூடிய கொள்கை இதுதான். வல்லரசுக் கனவில் மிதக்கும் இந்தியாவின் பிரதமர் முதல், சின்னஞ்சிறு ஆப்பிரிக்க நாட்டை ஆளு கின்ற யாரோ ஒரு பழங்குடி யுத்தப்பிரபு வரையிலான அனைவரின் தலையிலும் அணிவிக்கப்பட்டிருக்கும் தொப்பி அது. அத்தொப்பிக்கு ஏற்ப தலையைச் செதுக் குவதும், தனியார்மயம் என்ற கார்ப்பரேட் பகற் கொள்ளைக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் பொதுக் கருத்தை உருவாக்குவதும்தான், ஓட் டுக்கட்சிகளுக்கும் ஊடகங்களுக்கும் ஏகாதிபத்தியங்கள் ஒதுக்கியிருக்கும் பணி. எனவே, ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவ னங்கள் மென்று துப்பியதைத் தின்று எடுக் கும் வாந்திதான், தனியார்மயத்துக்கு ஆத ரவாக மன்மோகன் சிங் முதலானோர் தயா ரித்துப் பரிமாறும் வாதங்கள்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கத் தொடங்குவதற்கு முன், அரசும் ஆளும் வர்க்கங்களும் முன்வைத்த வாதங்களை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 'நட்டம் வரும் பொதுத் துறைகளை முட்டுக் கொடுத்து நிறுத்துவ தால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என் றும், அதனால் அவற்றை மட்டும் தனியா ருக்கு விற்கப்போவதாகவும்' சொல்லித் தான் தனியார்மயத்தை துவக்கத்தில் நியா யப்படுத்தியது அரசு. ஆனால், அரசின் புள்ளிவிவரங் களின் படியே 1992-98 காலத்தில் பொதுத்துறையின் இலாப விகிதம் 20.9% ஆகவும், தனியார் துறையின் இலாப விகிதம் 14.7% ஆகவும் இருந்தது. 1997-98 இல் அரசுத்துறையின் இலாப விகிதம் 26.9%. தனியார் துறை யின் இலாபம் 2.5%.

இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் புதைத்து விட்டு, அரசுத் துறைகள் நட்டத்தில் நடப்பதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்து, நாட்டை ஏமாற்றித்தான் அன்றைய நிதி மந்திரியாக இருந்த மன்மோகன் சிங் முதல் பா.ஜ.க. ஆட்சியில் தனியார்மயமாக்கலுக்கான அமைச்சராக நியமிக்கப்பட்ட அருண்ஷோரி வரை யிலான எல்லா யோக்கிய சிகாமணிகளும் தனியார் மயத்தை நியாயப்படுத்தினர்.

முதன் முதலாக 1991-92 - இல் (மன்மோகன் நிதி யமைச்சராக இருந்தபோது) விற்கப்பட்ட பொதுத் துறைப் பங்குகள் அனைத்தும் சந்தை விலையை விடக் குறைவான விலைக்குத் தனியார் முதலாளிகளுக்கு விற் கப்பட்டதால், இந்த விற்பனையை ஒரு 'மோசடி' என்று அன்றைய தலைமைக் கணக்குத் தணிக்கையாள ரின் அறிக்கை குற்றம் சாட்டியிருக்கிறது. பொதுத்துறை பங்கு விற்பனை குறித்த கணக்குத் தணிக்கையாளரின் 20 ஆண்டு அறிக்கைகளைத் தொகுத்தால், ஆண்டு தோறும் நடத்தப்பட்ட இந்த மோசடியின் மொத்தத் தொகை பல இலட்சம் கோடிகளாக இருக்கும்.

இலாபத்தில் நடக்கும் பொதுத்துறை நிறுவனங் களை விற்றால், அந்த அயோக்கியத்தனத்தை மக்கள் மத் தியில் நியாயப்படுத்துவது கடினம் என்பதால், அத் தகைய நிறுவனங்களின் உபரியை உறிஞ்சிக் கொள்வ தன் மூலம் அவற்றை நட்டத்தில் தள்ளும் சதிகளில் அரசு இறங்கியது. விற்கப்படும் பொதுத்துறை நிறுவனங் களின் மதிப்பை நிர்ணயம் செய்யவும், விற்பனையை நியாயப்படுத்தும் வகையில் நட்டக் கணக்கு காட்டவும்



அரசின் சேவைகள் மற்றும் பொதுச் சொத்துக்களைத் தனியார்மயமாக்குவதற்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

மெக்கின்சி, பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் போன்ற உலக வங்கியால் சிபாரிசு செய்யப்படும் ஆலோசனை நிறு வனங்கள் அரசால் அமர்த்திக் கொள்ளப்பட்டன. இந் துஸ்தான் லீவருக்கு மாடர்ன் ஃபுட்ஸ் பங்குகளும், ஸ்டெரிலைட்டுக்கு பால்கோவின் பங்குகளும், டாடா வுக்கு வி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் பங்குகளும் அடி மாட்டு விலைக்கு விற்கப்பட்டன. வாங்கிய மறு கணமே இந்நிறுவனங்களின் சில சொத்துகளை மட்டுமே விற்று, போட்ட முதலுக்கு மேல் அவர்கள் காசு எடுத்து விட்டார்கள்.

இன்று, ''2-ஜி அலைக்கற்றை உரிமங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்றுக் கொள்ளையடிக்க சில நிறுவனங்களுக்கு உதவினார்'' என்பதுதான் ராசா மீது கூறப்படும் குற்றச்சாட்டு. ஆனால், இந்த 'ராசா தந்திரம்'தான் எல்லாப் பொதுத் துறை நிறுவனங்களின் விற்பனையிலும் நடந்திருக் கிறது. சில -று கோடிகளுக்குப் பொதுத்துறை பங்கு

களை வாங்கி, கம்பெனியின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொண்டு, அதன் மூலம் பல ஆயிரம் கோடி மதிப்புள்ள அந்நிறுவனங்களின் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கும், விற்றுக் காசு பார்ப்பதற்கும் ஏற்ற 'கொள்கையை' வகுத்துத் தருவதற்காகவே 'டிஸ்இன் வெஸ்ட்மென்ட் கமிட்டி' என்றொரு கமிட்டி (அதாவது பொதுத்துறை முதலீடுகளை விற்பதற்கான கமிட்டி) நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டது. அந்தக் கொள்கையை வகுத்துத் தந்த கோமான், ரங்கராஜன் என்பவரின் பெயரால் அது ரங்கராஜன் கமிட்டி என்று அழைக்கப்பட்டது.

இந்தியாவின் அந்நியக் கடன்களை அடைப்பது, உலக வங்கியின் ஆணைப்படி பொதுத்துறையைத் தனியார்மயமாக்குவது என்ற இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு குறுக்கு வழியை இவர் முன்வைத்தார். சர்வதேசக் கடன் நிறுவனங்களி



இரும்புக் கனிம வளத்தை வெட்டியெடுப்பது என்ற பெயரில், சுரங்க மாஃபியாக்களான ரெட்டி சகோதரர்களால் மொட்டையடிக்கப்படும் வனப்பகுதி. (கோப்புப் படம்)

டம் இந்திய அரசு வாங்கிய கடனுக்கு ஈடாக, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை அவர்களுக்கு விற்றுவிடலாம் என்பதே அந்த யோசனை. சில ஆயிரம் கோடி மதிப்புள்ள பங்குகளை வாங்குவதன் மூலம் பல இலட்சம் கோடி பெறுமானமுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் ஆலைகளையும் சொத்துக்களையும் அந்நிய நிறுவனங்கள் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது என்பதே இந்த யோசனையின் விளைவு.(இப்பேர்ப்பட்ட அரிய யோசனையை வழங்கிய அந்த ரங்கராஜன்தான் இன்று பிரதமர் மன்மோகன் சிங்கின் முதன்மை பொருளாதார ஆலோசகர்!)

பிறகு வந்த பா.ஜ.க. ஆட்சி பொதுத்துறை தொழில்களை விற்பதற்கு ஒரு அமைச்சரையே நியமித்தது. டிஸ்இன்வெஸ்ட்மென்ட் துறை என்றழைக்கப்பட்ட இந்த அமீனாத் துறையின் அமைச்சராக இருந்தவர் அருண் ஷோரி. 1999 முதல் 2003 வரை அருண் ஷோரியின் அமைச்சகத்துக்கு செயலராகவும், 2004 முதல் 2006 வரை தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராகவும் இருந்து 'கொள்கைபூர்வமாக' பொதுத்துறையை முதலாளிகளுக்கு உடைமையாக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பெயர் பிரதீப் பெய்ஜால். பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 2007-இல் இவர் நீரா ராடியாவிடம் வேலைக்குச் சேர்ந்து, 2-ஜி அலைக்கற்றைகளை டாடாவுக்குச் சகாய விலையில் வாங்கிக் கொடுத்திருக்கிறார். இப்போது சி.பி.ஐ. அவரைத் துருவித்துருவி விசாரிக்கிறதாம். பெய்ஜால் என்ன பதில் சொல்வார்? ''1999 முதல் 2006 வரை அரசு அதிகாரி என்ற முறையில் நான் தனியார்மயக் கொள்கை வழி நடந்தேன். ஓய்வு பெற்ற பின்னரும் கொண்ட கொள்கையிலிருந்து மாறாமல் தனிப்பட்ட முறையில் அதனை அமல்படுத்தினேன்'' என்று தனது வரலாற்றுக்கு அவர் சீர் பிரித்து இலக்கணம் கூறக்கூடும். ஓய்வு பெற்றபின் அவர் நீரா ராடியாவின் நிறுவனத்தில் மட்டும் பணியாற்றவில்லை; நெஸ்லே, ஜி.வி.கே. பவர்ஸ் அண்டு இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ், பட்னி கம்ப்யூட்டர் சிஸ்டம்ஸ் போன்ற நிறுவனங்களிலும் அவர் பதவி வகிக்கிறார்.

பொதுத்துறை விற்பனைகளுக்கு விலை நிர்ணயம் செய்த முறை குறித்து அவரிடம் சி.பி.ஐ. கேட்குமானால், அந்த சூத்திரத்தை சொல்லிக் கொடுத்தவர் ரங்கராஜன்தான் என்று அவர் வாக்குமூலம் தருவார்; ரங்கராஜனைக் கேட்டால் தனது பொருளாதார ஞானகுரு என்று மன்மோகன் சிங்கை அடையாளம் காட்டுவார்; மன்மோகன் சிங்கோ ''நான் ஐ.எம்.எஃப். - க்குப் பிறந்தவன் என்ற உண்மையை எந்தக் கமிட்டியின் முன்னாலும் சொல்லத் தயார். இதைத் தவிர என்னிடம் மறைப்பதற்கு ஏதுமில்லை'' என்று பதிலளிக்கக்கூடும்.

நேற்று தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக இருந்த பெய்ஜால், இன்று நெஸ்லே என்ற ஏகாதிபத்திய தொழில் நிறுவனத்தின் இயக்குநர். நேற்று ஐ.எம்.எஃப். என்ற ஏகாதிபத்திய கந்து வட்டி நிறுவனத்தின் அதிகாரியாக இருந்த மன்மோகன் சிங், இன்று பிரதமர். இரண்டுக்கும் என்ன வேறுபாடு? தனியார்மயத்துக்கும் ஊழல்மயத்துக்கும் என்ன வேறுபாடோ அதே வேறுபாடுதான்! ஒழுக்க சீலர் மன்மோகனுக்கும் அயோக்கியன் பெய்ஜாலுக்கும் என்ன வேறுபாடு? சங்கிலியைத் திருடுவதற்காக பெண்ணின் கழுத்தை மட்டும் அறுக்கும் 'நல்லவனுக்கும்', கற்பழித்துவிட்டு அதன்பின் கழுத்தை அறுக்கும் 'அயோக்கியனுக்கும்' உள்ள வேறுபாடு!

### விலையைக் குறைப்பது ஊழல் – வரியைக் குறைப்பது?

2-ஜி அலைக்கற்றைகளைச் சரியான விலைக்கு விற்றிருந்தால் அரசுக்கு கிடைத்திருக்கக் கூடிய வருவாய் 1,76,000 கோடி ரூபாய் என்று அனுமானமாகக் கூறுகிறது,

தலைமைக் கணக்காளரின் அறிக்கை. வருவாய் இழப்பு 30,000 கோடி ரூபாய்தான் இருக்கும் என்பது அருண் ஷோரியின் அனுமானம். இத்தகைய அனுமானங்கள் எதற்கும் இடம் வைக்காமல் கடந்த பத்தாண்டுகளுக் கும் மேலாக ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் கோடி முதல் 5 இலட்சம் கோடி ரூபாய் வரையில் புதிது புதி தான நேர்முக வரித் தள்ளுபடிகள், ஒவ்வொரு பட்ஜெட் டிலும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தரகு முதலாளி களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வரி வருவாய் பற்றாக்குறை என்று காரணம் சொல்லி, விவசாயிகளுக்கான மானியங்கள் வெட்டப் பட்டு அவர்கள் தற்கொலைக்குத் தள்ளப்படுவதையும், அதே நேரத்தில் முதலாளிகளுக்கு ஆண்டுதோறும் வழங் கப்படும் இத்தகைய வரித் தள்ளுபடிகளையும் அம் பலப்படுத்திப் பத்திரிகையாளர் சாய்நாத் பல கட்டுரை களை எழுதியிருக்கிறார்.

''வரிகளை எந்த அளவு குறைக்கிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக முதலாளிகள் அனைவரும் வரியைச் செலுத்துவார்கள்; எனவே அரசின் வரி வரு வாயைக் கூட்டுவதற்காகத்தான் முதலாளிகளுக்கு வரியைக் குறைக்கிறேன்'' என்று தத்துவ விளக்கம் அளித்தார் ப.சிதம்பரம். ''அலைக்கற்றைகளின் விலையை முதலாளி களுக்குக் குறைத்துக் கொடுத்தால் கட்டணத்தை யும் குறைப்பார்கள்; செல் பேசிகளின் பயன்பாடு பன் மடங்கு அதிகரிக்கும்; அத னால்தான் விலையைக் குறைத்தேன்'' என்று கூறுகிறார், ராசா. சிதம்பரம் ஆங் கிலத்தில் விளக்குவதைத்தானே ஆ.ராசா அழகு தமிழில் விளக்குகிறார். தமிழ் ஊழலென்றால் ஆங்கிலமும் ஊழல்தானே!

''செல்பேசிகள் 60 கோடியாக அதிகரித்து விட்டன'' என்று காட்டுவதற்கு ஒரு கணக்காவது ராசாவிடம் இருக் கிறது. ஆனால், கார்ப்பரேட் முதலாளிகள் மீது விதிக் கப்பட்டு வந்த எல்லா வகையான நேர்முக வரிகளை யும் தள்ளுபடி செய்த 1991-2008 காலகட்டத்தில் மட் டுமே 6,37,296 கோடி ரூபாய் இந்தியாவிலிருந்து வெளி நாட்டு வங்கிகளுக்கு கடத்தப்பட்டிருப்பதாக ''குளோ பல் பைனான்சியல் இன்டெகிரிடி'' என்ற அமைப்பு ஆதாரங்களுடன் விளக்குகிறது. அலைக்கற்றை விற் பனையை ஊழல் என்று அழைத்தால், வரித் தள்ளு படியை என்ன பெயரிட்டு அழைப்பது? ஸ்பெக்ட்ரம் விவகாரம் தி.மு.க.வைப் பேயாய்ப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கும்போதே, நோக்கியாவுக்கு 600 கோடி ரூபாய் வரி மானியத்தை வாரி வழங்குகிறார், கருணா நிதி. இதனை ஊழல் என்று சொல்வாரில்லை. தயாளு அம்மாளுக்கு தயாநிதி மாறன் கொடுத்ததாக ராடியா கூறும் 600 கோடி மானியம் மட்டும்தான் ''சோ'' வுக்கு ஊழலாகத் தெரிகிறது.

ராடியா டேப் அதை மட்டுமா சொல்கிறது? வரித் தள்ளுபடி குறித்த முடிவுகள் நாடாளுமன்றத்தில் எப்படி நிறைவேறுகின்றன என்ற இரகசியத்தையும்தான் விளக்குகிறது. முகேஷ் அம்பானிக்குத் தாரை வார்க்கப் பட்ட எரிவாயு வயல்களின் உற்பத்தியின் மீது முன் தேதி யிட்டு 91,000 கோடி ரூபாய் வரித்தள்ளுபடி செய்வதற்கு 2009 - ஆம் ஆண்டு பட்ஜெட்டில் சிதம்பரம் வைத்த முன் மொழிதலை, எதிர்க்கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு தீவிரமாக ஆதரித்துப் பேசுகிறார். 'தேசிய நல னுக்காக' ஆளும் கட்சியுடன் ஒன்றுபட்டு நிற்கும்படி யான இத்தகைய 'தேசிய உணர்வை' பா.ஜ.க.வுக்கு ஊட்டியவர் நீரா ராடியாதான் என்ற உண்மையையும் தான் புட்டு வைக்கிறது.

இந்த 91,000 கோடி என்பது அலைக்கற்றை ஊழல் போல அனுமான இழப்பு அல்ல; பருண்மையான இழப்பு. எனினும், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் நாடாளுமன்றத்தில் இதனைக் கூட்டாக நிறைவேற்றி யிருப்பதனால்தான், இதற்கு ''நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை வேண்டும்'' என்று பா.ஜ.க. கோர வில்லை போலும்! அலைக்கற்றை ஒதுக்கீட்டிலும் பார திய ஜனதா அரசு பின்பற்றிய 'முதலில் வருபவருக்கு முதலில்' என்ற கொள்கையையே தானும் பின்பற்றிய தாகக் கூறுகிறார், ராசா. சில சில்லறைத் தில்லுமுல்லு களை மட்டும் தவிர்த்திருப்பாரேயானால், கருணாநிதி சொன்னதைப் போல ''தி.மு.க.- வின் தகத்தகாயமாக மின்னும் கொள்கைத் தங்கமாகவே'' ராசா நீடித்திருந் திருப்பார். தேசிய நலனை முன்னிட்டு அம்பானிக்குப் படைக்கப்பட்ட 91,000 கோடியைப் போலவே, இந்த 1,76,000 கோடியும் தேசத்துக்கு வைக்கப்பட்ட படை யலாகவும், தனியார்மயக் 'கொள்கை வழியில்' தேச முன்னேற்றம் கருதி எடுக்கப்பட்ட முடிவாகவுமே விளக் கப்பட்டிருக்கும்.

''பா.ஜ.க ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட அலைக் கற்றை விற்பனையால் 1.43 இலட்சம் கோடி இழப்பு'' என்று ஒரு குண்டை தற்போது அமைச்சர் கபில் சிபல் வீசியிருக்கிறார். இந்தத் தொகை மொத்தமுமே தேசிய நலனுக்கு படைக்கப்பட்ட பொங்கல்தானா, அல்லது தம்பி தயாநிதியும், அண்ணன் அருண் ஷோரியும் இதில் கொஞ்சம் வழித்து நக்கியிருப்பார்களா? தரகு முதலாளி களுக்கிடையே சமாதான உடன்படிக்கை எதுவும் ஏற்ப டாமல் யுத்தம் நீடித்தால், மேலும் பல உண்மை கசி யக்கூடும்.

**வரி வருவாயைக் கூட்டத்தான் வரியைக் குறைக்கிறேன் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார் சிதம்பரம். ''அலைக்கற்றை விலையை முதலாளிகளுக்குக் குறைத்துக் கொடுத்தால் கட்டணத்தையும் குறைப்பார்கள்; செல்பேசி பயன்பாடும் அதிகரிக்கும். அதனால்தான் குறைத்தேன்'' என்று தமிழில் கூறுகிறார் ராசா. தமிழ் ஊழலென்றால், ஆங்கிலமும் ஊழல்தானே!**

## ராசா..! அரண்மனைக்கு அடியில் எத்தனை பெரிய பெருச்சாளிப் பொந்து!

'ராசா ஊழல்' என்று சித்தரிக்கப்படும் இந்த அலைக்கற்றை ஊழலுக்குள் கையை விட்டால், அந்தப் பெருச்சாளிப் பொந்து அரண்மனை முழுவதற்கும் நம்மை அழைத்துச் செல்கிறது. ராசாவிடம் அலைக்கற்றை உரிமத்தை வாங்கியிருக்கும் நிறுவனங்கள், அரசு வங்கிகளிடமே ஒரு இலட்சம் கோடி ரூபாயைக் கடனாக வாங்கி, அரசுக்குப் பணம் கட்டியிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்டதும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் அதிர்ந்து விட்டார்களாம். பொதுத்துறை நிறுவனங்களை வளைத்துப் போடும் இந்தியத் தரகு முதலாளிகள், எந்தக் காலத்திலும் தம் கைக்காசைப் போட்டு அவற்றை வாங்கியதில்லை என்ற உண்மை, 'கற்றறிந்த' நீதிபதிகளுக்குத் தெரியாது போலும்! அரசு வங்கிகள்தான் அவர்களுக்குக் கடன் கொடுத்திருக்கின்றன. மருத்துவத்துக்கும் மக்கள் நலத் திட்டங்களுக்கும் செலவிட அரசாங்கத்திடம் பணமில்லையென்பதால்தான் பொதுத்துறைப் பங்குகளை விற்க வேண்டியிருப்பதாகச் சொல்லி தனியார்மயத்தை நியாயப்படுத்தினார், அன்று நிதியமைச்சராக இருந்த சிதம்பரம். முதலாளிகளோ அதே நிதியமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அரசு வங்கிகளின் கையை வெட்டி அரசுக்கே சூப் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இது சிதம்பரம் அறியாத இரகசியமல்ல. மக்களுக்கு மட்டும்தான் இதெல்லாம் சிதம்பர இரகசியம்.

> **''வீட்டுக்கடன் ஊழல் என்பது ஊழலல்ல, அது இலஞ்சம் மட்டுமே'' என்கிறார் அலுவாலியா. ''எத்தனை பூச்சியங்கள் வரை 'இலஞ்சம்', எத்தனைக்குப் பின் 'ஊழல்', எத்தனைக்கு மேல் 'கொள்கை'' என்ற தேசியப் பொதுக்கருத்தை எட்டினால்தான் ஊழல் விவாதங்களினால் களங்கப்பட்டிருக்கும் தேசிய கவுரவத்தைக் காப்பாற்ற முடியும் போலும்!**

தனியார்மய-தாராளமயக் கொள்கைகளின் கீழ் நடைபெறும் ஊழல்களும் மோசடிகளும், ''ஸ்பெக்ட்ரம் ஊழல், வீட்டுக்கடன் ஊழல், கேதன் பரேக் ஊழல்'' என்று வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும், அவை அனைத்தும் ஒரு தாய்ப்பிள்ளைகளே. அலைக்கற்றை ஊழலிலிருந்து ஒரு கிளை வலப்புறம் பிரிந்து வீட்டுக் கடன் ஊழலுடன் இணைகிறது. அங்கிருந்து அது இடப்புறம் திரும்பி அரசு வங்கியுடன் போய் இணைகிறது. அரசு வங்கியிலிருந்து பிரியும் பைபாஸ் சாலை மீண்டும் ஸ்பெக்ட்ரம் நெடுஞ்சாலையில் சங்கமிக்கிறது.

வீட்டுக் கடன் ஊழலில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் டி.பி.ரியால்டீஸ் என்ற நிறுவனம், அலைக்கற்றை ஊழலில் ஈடுபட்டிருக்கும் எடிசாலட் டி.பி. என்ற நிறுவனத்தின் கணிசமான பங்குகளை வைத்திருக்கிறதாம். அதாவது, இல்லாத வீட்டை அடமானம் வைத்து அரசு வங்கியில் வீட்டுக் கடன் வாங்கிய டி.பி.ரியால்டீஸ் நிறுவனம், கடன் வாங்கிய பணத்தை வைத்து, தொலைபேசிச் சேவையே நடத்தாத 'தொலைத்தொடர்புக் கம்பெனியான' எடிசாலட் டி.பி. என்ற தனது பினாமி நிறுவனத்தின் பெயரில் அலைக்கற்றை உரிமத்தை விலைக்கு வாங்குகிறது. அந்த லைசன்சு காகிதத்தை அடமானம் வைத்து மீண்டும் வங்கியில் கடன் வாங்குகிறது. பிறகு அந்த உரிமத்தை வங்கியிலிருந்து மீட்டு, அதனை 4 மடங்கு விலைக்கு விற்று சில ஆயிரம் கோடிகளையும் சுருட்டுகிறது.

அலைக்கற்றை உரிமத்தை வாங்கி வைத்திருக்கும் பினாமி 'உப்புமா' கம்பெனிகள் இழப்பதற்கு ஏதுமற்றவர்கள். உரிமத்தை ரத்து செய்தால் திவாலாகப்போவதும் அவர்களல்ல, உரிமக் காகிதத்தை அடமானம் வாங்கிக் கொண்டு ஒரு லட்சம் கோடி கடன் கொடுத்திருக்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளே. எனவேதான், இவர்களுடைய உரிமத்தை ரத்து செய்வது தேசிய நலனுக்கு உகந்ததல்ல என்று முடிவு செய்துவிட்டார், அமைச்சர் கபில் சிபல்.

விவசாயிகளுக்கும், சிறு தொழில்களுக்கும் கடன் கொடுக்க ஆயிரம் நிபந்தனை விதிக்கும் அரசாங்கத்தின் வங்கிகள்தான், இந்தச் சூதாடிகளுக்குக் கடனை வாரி வழங்கியிருக்கின்றன. தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் அமலாகத் தொடங்கிய காலத்திலிருந்து நடைபெற்ற ஹர்சத் மேத்தா, யூ.டி.ஐ., போலிப்பத்திர ஊழல் என்பன போன்ற எல்லா மோசடிகளுக்கும் மூலதனம் தந்து, அவற்றை பிரம்மாண்டமான ஊழல் காவியமாகப் படைக்க உதவியவை அரசு வங்கிகளே. இப்படிப்பட்ட கடன் வழங்கும் கொள்கையைப் பின்பற்றுமாறு அரசு வங்கிகளுக்கு உத்தரவிடுவது அரசுதான். முதலாளிகளின் வாராக்கடன் தொகையை சுமார் ஒரு இலட்சம் கோடி அளவுக்கு உயர்த்தியதும் இதே தனியார்மய, தாராளமயக் கொள்கைகள்தான்.

## எது இலஞ்சம், எது ஊழல், எது கொள்கை? விடை காண முடியாத தத்துவஞானக் கேள்வி!

ஸ்பெக்ட்ரம் மோசடிக்காக முன்னாள் அமைச்சர் ராசா முதல் அவரது குடும்ப உறுப்பினர்கள் வரை அனைவரின் வீடுகளையும் தேடிச் செல்கிறது சி.பி.ஐ. ஆனால், ஸ்பெக்ட்ரம் பணத்தை விழுங்கிச் செரித்த டாடா, மித்தல், அம்பானி போன்றோரை வீடு தேடிச் சென்று சந்தித்து, புதிய தொலைத்தொடர்புக் கொள்கையை வகுப்பதற்கு அவர்களிடமே ஆலோசனை கேட்கிறார், அமைச்சர் கபில் சிபல். இதுவும் பா.ஜ.க. அரசு ஏற்கெனவே போட்ட பாட்டின் ரீ மிக்ஸ்தான். அரசு வங்கிகளிடம் கடன் வாங்கி ஏப்பம் விட்ட முதலாளிகளைத் தண்டிப்பதற்கு ஒரு சட்டம் இயற்றப் போவதாக 2003 - இல் சொன்னார் வாஜ்பாயி. இந்தச் சட்டத்துக்கான முன்

வரைவைத் தயாரிக்கும் பொறுப்பு, ரூயா, பிர்லா, ராஜீவ் சந்திரசேகர் முதலான தரகு முதலாளிகள் அடங்கிய கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றைய தேதியில் அரசு வங்கிகளுக்கு ரூயா வைத்திருந்த கடன் பாக்கி 1577 கோடி, பிர்லா 212 கோடி, சந்திரசேகர் 56 கோடி. இதுதான் அந்தக் கமிட்டி உறுப்பினர்களின் தகுதி!

திருடர்களுக்குக் கடனை வாரிவழங்குமாறு வங்கிகளுக்கு அரசு கொடுத்த வழிகாட்டுதலாகட்டும், திருடர்களைத் தண்டிப்பதற்கான 'சட்ட முன்வரைவினை' தயாரிக்கும் பொறுப்பைத் திருடர்கள் கமிட்டியிடமே ஒப்படைத்ததாகட்டும்; இவையெல்லாம் சிதம்பரமும், யஷ்வந்த் சின்காவும், வாஜ்பாயியும் மேற்கொண்ட கொள்கை முடிவுகள்தான். 'முதலில் வந்தவர்களுக்கு முதலில்' என்று அலைக்கற்றையை வாரி வழங்கியதும் கூட 'கொள்கை முடிவு' என்றுதான் ராசா சொல்கிறார். மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் 'கொள்கை' முடியும் இடம் எது - 'ஊழல்' தொடங்கும் இடம் எது? இதனை எவ்வாறு கண்டறிவது?

தனியார்மயத்தின் மும்மூர்த்திகளில் ஒருவரான மான்டேக் சிங் அலுவாலியா இதற்கான விடையை சூசகமாகத் தெரிவித்திருக்கிறார். ''40,000 கோடி வீட்டுக் கடன் ஊழலை, 'ஊழல்' என்று அழைப்பது தவறு. அது வழக்கமான இலஞ்சம் மட்டுமே'' என்று விளக்கியிருக்கிறார். நமக்குத் தெரிந்த இலஞ்சங்களான டிராபிக் போலீசு லஞ்சம், தாலுக்கா ஆபீஸ் லஞ்சம், ஆர்.டி.ஓ. ஆபீஸ் லஞ்சம் போன்றவை மூன்று நான்கு பூச்சியங்களைத் தாண்டியதில்லை. நாடு வல்லரசாகி வரும் காரணத்தினாலும், கோடீசுவரர்களின் எண்ணிக்கை பெருகிவரும் காரணத்தினாலும் இலஞ்சத்தின் இலக்கணம் தற்போது மாறியிருக்கக் கூடும். எத்தனை பூச்சியங்கள் வரையில் 'இலஞ்சம்', எத்தனை பூச்சியங்களுக்குப் பின் 'ஊழல்', எத்தனை பூச்சியங்களுக்கு மேல் 'கொள்கை' என்பது குறித்து நாடாளுமன்ற விவாதம் ஒன்றை நடத்தி, தேசிய பொதுக்கருத்தை எட்டினால் மட்டுமே, ஊழல் விவாதங்களினால் சர்வதேச அரங்கில் களங்கப்பட்டிருக்கும் தேசிய கவுரவத்தைக் காப்பாற்ற முடியும் போலும்!

**நீரா ராடியா அல்லது சல்வா ஜுடும்!**

அலைக்கற்றைகளாக இருக்கட்டும், ஆலைகள், சுரங்கங்கள், காடுகள், விளைநிலங்களாக இருக்கட்டும்; அனைத்தையும் கார்ப்பரேட் நிறுவனங்களின் தடையற்ற கொள்ளைக்குத் திறந்து விடுவதுதான் தனியார்மயம் என்ற கொள்கை. காசை வாங்கிக் கொண்டு, கதவைத் திறந்து விடக் காத்திருப்போரிடம் டாடா - அம்பானிகளின் சார்பில் ராடியா பேச்சுவார்த்தை நடத்துவார். ராடியாக்களுடன் பேச மறுக்கும் மாவோயிஸ்டுகள், பழங்குடி மக்கள் போன்றோரிடம் டாடாவின் சார்பில் இந்தியத் துணை இராணுவப்படை பேசுகிறது.

ராடியா ஒரு அதிகாரத் தரகர் என்பதால் அவர் நடத்திய பேரங்கள் ஊழல் என்றும் முறைகேடு என்றும் அழைக்கப்படுகின்றன. இதே நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ரங்கராஜன் கமிட்டி கொடுத்த அறிக்கையையோ, சட்டிஸ்காரில் துணை இராணுவப் படைகள் நடத்தும் காட்டுவேட்டையையோ ஊழல் என்று யாரும் அழைப்பதில்லை.

ஒரு கொள்கைக்குரிய கவுரவத்துடன் அழைக்கப்படுகின்ற 'தனியார்மயம்' என்பதும் கூட தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் நடத்திக் கொண்டிருக்கும் தீவட்டிக் கொள்ளைதான். தீவட்டிக் கொள்ளையர்களைத் தமது நாயகர்களாக எந்த சமூகமும் கொண்டாடியதில்லை. ஆனால் டாடா, அம்பானி, மித்தல் போன்றவர்கள் கொண்டாடப்படுகிறார்கள். ''பில் கேட்ஸை முந்தி முதலிடத்தைப் பிடித்துவிடுவார் முகேஷ் அம்பானி'' என்ற செய்தி, இந்தியா வல்லர




ஒரிசாவில் அமையவுள்ள போஸ்கோ திட்டத்தால், தமது கிராமங்களில் இருந்து விரட்டப்பட்ட பழங்குடியின மக்களை அடைத்து வைப்பதற்காக போஸ்கோ அமைத்துள்ள அகதி முகாம் பற்றிய அறிவிப்புப் பலகை. (கோப்புப் படம்)

சாகிக் கொண்டிருக்கிறது என்ற நற்செய்தியாக மொழிபெயர்க்கப்பட்டு மக்களின் காதில் ஓதப்படுகிறது.

''இந்திய முதலாளிகளின் தொழில் முனைப்பைத் தனியார்மயக் கொள்கை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது'' என்று போற்றப்படுகிறது. அதே கொள்கைதான் டில்லியில் ராடியாவையும் சட்டீஸ்கரில் சல்வாஜுடுமையும் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. கொள்ளையர்கள் கட்டவிழ்த்து விடப்படுவதனால் நேரும் விளைவு பகற்கொள்ளையே அன்றி முன்னேற்றமல்ல. 200 ஆண்டுகள் இந்தியாவைக் கொள்ளையிட்ட வெள்ளையர்களும் கூட ''இந்தியாவை முன்னேற்றுவதே எங்கள் நோக்கம்'' என்றுதான் கூறிக்கொண்டார்கள். 200 ஆண்டுகளில் அவர்கள் அடித்த கொள்ளையை விட, தனியார்மயம் அமலாகத் தொடங்கிய 20 ஆண்டுகளில் இந்தியத் தரகு முதலாளிகள் அடித்திருக்கும் கொள்ளையும், வெளிநாட்டு வங்கிகளில் சேர்த்திருக்கும் பணமும் அதிகம் என்கின்றன ஆய்வுகள்.

### அரசுத் தலையீடின்மை, வெளிப்படைத் தன்மை, திறமை: முதலாளித்துவ மூலமந்திரங்களின் உட்பொருள்!

இவையெதுவும் தம் தொழில் முனைப்பினாலோ, திறமையினாலோ அவர்கள் உருவாக்கிய செல்வம் அல்ல. அமெரிக்காவின் சப் பிரைம் மோசடியில் தொடங்கி இந்தியாவின் ஸ்பெக்ட்ரம் மோசடி வரை கார்ப்பரேட் வர்க்கம் நிரூபித்திருக்கும் திறமை என்பது, சூதாடிகளும் பிக்பாக்கெட் திருடர்களும் கொண்டிருக்கும் திறமையை மட்டும்தான்.

ஐ.பி.எல். என்ற கிரிக்கெட் சூதாட்டத்தைக் கண்டு பிடித்த லலித் மோடி, ''முதன் முதலில் எனது உறவினர்களை வைத்தே கிரிக்கெட் டீம்களை ஏலம் எடுக்க வைத்து, கொள்ளை இலாபம் கிடைத்ததாக அவர்களை 'சாட்சியம்' சொல்லவைத்து, அதைக் காட்டியே மற்றவர்களையெல்லாம் கவர்ந்திழுத்தேன்'' என்று லண்டன்




பத்திரிகையொன்றிற்கு பெருமை பொங்க பேட்டி கொடுத்திருக்கிறார். இதுதானே, நம்மூர் மூணு சீட்டுக்காரன் மக்களைக் கவர்ந்திழுப்பதற்கு அன்றாடம் செய்து கொண்டிருக்கும் தந்திரம்!

பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துகளைச் சூறையாடியதும், வரி விலக்குகளால் கோடி கோடியாக ஆதாயம் அடைந்ததும், அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இலஞ்சம் கொடுத்து காடுகளையும் விளை நிலங்களையும் தம் உடைமையாக்கிக் கொண்டதும் தான் இவர்களது சொத்து மதிப்புகள் குறுகிய காலத்தில் பன்மடங்கு உயர்ந்ததற்குக் காரணம். 1667 கோடிக்கு ராசாவிடம் அலைக்கற்றை உரிமத்தை வாங்கி, அதில் 28 சதவீதத்தை மட்டும் (சுமார் 400 கோடி மதிப்பு) 13,000 கோடி ரூபாய்க்கு டோகோமோ நிறுவனத்துக்கு விற்றிருக்கிறார் டாடா.

இதனைக் கொள்ளை என்பதா, ஊழல் என்பதா அல்லது டாடாவும், அம்பானியும், ராடியாவும் வெளிப்படுத்தியிருக்கும் திறமை என்பதா?

தொழில் - வர்த்தகத் துறைகளில் நிலவும் அரசுத் தலையீடுகள்தான் ஊழலுக்கு அடிப்படை என்றும், அவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, அரசு நடவடிக்கைகள் அனைத்திலும் வெளிப்படைத்தன்மையைக் (transparency) கொண்டுவருவதன் மூலம்தான் ஊழலை ஒழிக்க முடியும் என்றும் அவ்வப்போது பேசி வரும் இந்த கார்ப்பரேட் யோக்கிய சிகாமணிகள்தான், அரசாங்கத்துடன் தாங்கள் போட்டுக்கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை (MoUs) மட்டும் அரசாங்க இரகசியமாகப் பேணச் சொல்கிறார்கள். தமிழக அரசு நோக்கியாவுக்கு வழங்கியுள்ள சலுகைகள் நோக்கியா நிறுவனம் போட்டிருக்கும் மூலதனத்தை விட அதிகம் என்ற உண்மையும், குஜராத்தில் நானோ காருக்கு வழங்கப்பட்டுள்ள சலுகை காரின் உற்பத்திச் செலவுக்கே இணையானது என்ற உண்மையும் தோண்டித் துருவி வெளியே எடுக்கப்பட்ட பின்னர்தானே தெரியவந்தது! தனியார்துறை - அரசுத்துறை கூட்டு என்ற பெயரில் சாலைகள், உள்கட்டுமானங்கள் ஆகியவற்றில் போடப்படும் ஒப்பந்தங்கள், கனிமவளங்களுக்கு நிர்ணயிக்கப்படும் விலைகள் ஆகியவை அனைத்தையும் அரசாங்க இரகசியங்களாக மறைக்கச் சொல்கிறார்கள் கார்ப்பரேட் முதலாளிகள். இந்தத் தடையே ஊழலா, அல்லது இத்தகைய தடைகளின் பின்னால் ஒளிந்து கொண்டு ராடியாக்கள் நடத்தும் தரகு வேலைகள் மட்டும்தான் ஊழலா, எது முதற்பெரும் ஊழல் என்பதே கேள்வி.

''கார்ப்பரேட் நிறுவனங்கள் அடிக்கும் கொள்ளை மக்களுக்குத் தெரியாத இரகசியமாக இருக்க வேண்டும். அந்தக் கொள்ளையை அவர்களுக்குள் பங்கு பிரித்துக் கொள்வது மட்டும் கொள்ளையர்களுக்கிடையே வெளிப்படையாக இருக்க வேண்டும்'' என்பதுதான் அவர்கள் கோருகின்ற வெளிப்படைத் தன்மை (transparency).

'அரசின் தலையீடுகளை அகற்றுதல்' என்ற அவர்களுடைய தாராளமயக் கோரிக்கையின் உட்பொருள், 'கார்ப்பரேட் நிறுவனங்களின் முறைகேடுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான அரசின் தலையீடுகளை' நீக்கவேண்டும் (deregulation) என்பது மட்டும்தான். மற்றபடி, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக நிலத்தைப் பிடுங்கிக் கொடுப்பது, எதிர்த்தால் துப்பாக்கிச் சூடு நடத்துவது, தொழிற்சங்கங்களை ஒடுக்குவது போன்ற விசயங்களில் அவர்கள் அரசின் உறுதியான தலையீட்டை வரவேற்கவே செய்கிறார்கள். டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு கூடினாலும் குறைந்தாலும் அதற்கேற்ப ஏற்றுமதியாளருக்கும் இறக்குமதியாளருக்கும் மானியம் வழங்குவது, பணப்புழக்கத்தை கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் தேவைக்கேற்ப அதிகரிப்பது அல்லது குறைப்பது, கல்வி வியாபாரம், கார் வியாபாரம், ரியல் எஸ்டேட் வியாபாரம் உள்ளிட்ட அனைத்தும் சுறுசுறுப்பாக நடப்பதற்கு ஏற்ப நுகர்வோர் கடன்களை வாரி

வழங்குமாறு அரசு வங்கிகளைத் தூண்டுவது போன்ற விசயங்களிலும் அவர்கள் அரசின் அக்கறையுள்ள தலையீட்டைக் கோரவே செய்கிறார்கள்.

மக்களுடனான முரண்பாட்டில் சிங்குரிலும் நந்திக்கிராமிலும் அரசு தங்கள் சார்பாகத் தலையீடு செய்ததை கார்ப்பரேட் முதலாளிகள் வரவேற்கவே செய்தார்கள். அலைக்கற்றைப் போரில் எழுந்த முரண்பாடோ கார்ப்பரேட் முதலாளிகளுக்கிடையிலானது. டாடா - மித்தலுக்கு இடையிலான இந்த பாரதப் போரில் அரவான் களப் பலி ஆ.ராசா. சாம்ராச்சியச் சண்டையான பாரதப் போர், தரும யுத்தமாகச் சித்தரிக்கப்படுவதைப் போலவே, இந்த கார்ப்பரேட் யுத்தமும் ஊழலுக்கு எதிரான போராக சித்தரிக்கப்படுகிறது. தனியார்மயக் கொள்கையின் அமலாக்கத்திலிருந்து ஊழலை மட்டும் நீக்கிவிட்டால் சொர்க்கலோகத்தைக் கண்டு விடலாம் என்றும், அதற்குத் தடையாக இருப்பவர்கள் ஊழல் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்தான் என்றும் கயிறு திரிக்கிறார்கள், கார்ப்பரேட் வியாசர்கள். முதலாளித்துவத்திடமிருந்து ஊழலை நீக்குவதென்பது அதன் இதயத்தையே நீக்குவதாகும். இலாபம்தான் அதன் இலட்சியம். அதனை அடைவதற்கு எத்தகைய வழிமுறையையும் பின்பற்றலாம் என்பதே முதலாளித்துவ நிர்வாகவியலின் முதல் விதி.

**கார்ப்பரேட் கொள்ளையர்கள் தமக்கிடையிலான போட்டியில் யுத்த தருமத்தை எந்தக் காலத்தில் பின்பற்றியிருக்கிறார்கள்? டாடா - மித்தலுக்கு இடையிலான இந்த பாரதப் போரில் அரவான் களப்பலி ஆ.ராசா. பாரதப் போர் என்ற சாம்ராச்சிய சண்டை , தரும யுத்தமாகச் சித்தரிக்கப்படுவது போலவே, இந்த கார்ப்பரேட் யுத்தமும் ஊழலுக்கெதிரான போராகச் சித்தரிக்கப்படுகிறது.**

மோதிக் கொள்ளும் கார்ப்பரேட் கொள்ளையர்கள் தமக்கிடையிலான போட்டியில் யுத்த தருமத்தையும், ஒழுக்கத்தையும் எந்தக் காலத்தில் பின்பற்றியிருக்கிறார்கள்? ஒரு விமானக் கம்பெனி தொடங்க விரும்பியதாகவும், அதற்கு 15 கோடி ரூபாய் லஞ்சம் கேட்டதால், விமானக் கம்பெனி தொடங்கும் யோசனையையே கைவிட்டு விட்டதாகவும் கூறி, தனக்குத் தானே ஒளிவட்டம் சூட்டிக்கொண்டார் ரத்தன் டாடா. அடுத்த வந்த நாட்களில் நல்லொழுக்க சீலர் டாடாவின் யோக்கியதையை ராடியா டேப்புகள் நாட்டுக்கே ஒளிபரப்பின.

பா.ஜ.க.-ராடியா கள்ள உறவு குறித்த செய்திகளைக் கசியவிட்டு பதிலடி கொடுக்கிறது காங்கிரசு. ராடியாவை ஆளாக்கி வளர்த்ததே பா.ஜ.க. அமைச்சர் ஆனந்த்குமார் தான் என்றும், பா.ஜ.க. வின் ஆட்சிக் காலத்தில்தான் ராடியா தனது தொழிலில் கொடி நாட்டினார் என்றும், டில்லியில் ராடியாவின் ஸ்பான்சர்ஷிப்பில் பேஜாவர் ஸ்வாமிகள் நடத்திய வைபவத்துக்கு அத்வானி வருகை புரிந்தார் என்றும் செய்திகள் வெளியாகத் தொடங்கியிருக்கின்றன. தனியார்மயத்தின் முதல் பத்தாண்டுக்கு, ஹவாலா ஊழல் - ஜெயின் டயரி. இரண்டாவது பத்தாண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கு ஸ்பெக்ட்ரம் ஊழல் - ராடியா டயரி!

இந்திய நாடாளுமன்றத்துக்கு கீழே ஒரு நிலவறை இயங்குவதும், நிஜ உலக ஜனநாயகத்தில் பரிமாறப்படும் கதை - வசனங்கள் அனைத்தும் நிலவறையின், கார்ப்பரேட் சமையலறையில் தயாராவதும் அம்பலமாகிச் சந்தி சிரிப்பதைக் கண்டு இந்திய ஜனநாயகத்தின் புனிதப் பூசாரிகள் சங்கடத்தில் நெளிகின்றனர். 'முழுதும் நனைந்த பின்னே முக்காடு எதற்கு?' என்று எண்ணிய கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், ''லாபியிங் (தரகு வேலை) ஒரு ஜனநாயக உரிமை. அதை முறைப்படுத்த முடியுமே தவிர, தடை செய்ய முடியாது'' என்று பிரகடனமே செய்து விட்டார். ''வரி ஏய்ப்பு அதிகரித்தால் அதற்குத் தீர்வு, வரிகளை நீக்குதல்; கறுப்புப் பணம் அதிகரித்தால் அதற்குத் தீர்வு, அவற்றை வெள்ளையாக்கும் திட்டத்தை அறிவித்தல்'' — இதுதானே புதிய தாராளவாதக் கொள்கையின் ஒழுக்கவிதி!

எனவே, லாபியிங் உரிமையை முறைப்படுத்துதவதற்கான வழிமுறைகள் விவாதிக்கப்படுகின்றன. ''அமெரிக்காவில் இருப்பதைப் போல, எந்த நாடாளுமன்ற உறுப்பினர் எந்த கார்ப்பரேட் நிறுவனத்திடம் பணம் வாங்குகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை இந்திய மக்களுக்கும் இருக்கவேண்டும்'' என்று ஊழல் ஒழிப்புக்கான 'அமெரிக்க வழி'யை முன்மொழியத் தொடங்கிவிட்டனர், முதலாளித்துவ அறிவுஜீவிகள். 'கட்டுப்பாடுகளை நீக்குதல்' என்ற புதிய தாராளவாதத்தின் பொருளாதாரக் கொள்கைக்கு, 'ஒழுக்கத்தை நீக்குதல்' என்ற கலாச்சார கொள்கை பொருந்தித்தான் வருகிறது

மற்றெல்லா உரிமைகளையும் பறித்துக் கொண்டாலும், புதியதோர் உரிமையை மக்களுக்கு வழங்கியிருக்கிறது தனியார்மயம்! நமக்கு வழங்கப்படவிருக்கும் இந்த உரிமைக்குப் பொருள்தான் என்ன?

எந்த எம்.பி., எந்த கார்ப்பரேட் முதலாளியிடம் பணம் வாங்குகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை! அல்லது டாடா-அம்பானி-மித்தல்-அகர்வால்-ரூயா போன்ற கார்ப்பரேட் கொள்ளையர்கள், எந்த அமைச்சரின் உதவியுடன் நமது சட்டைப் பைக்குள் கை விடுகிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் உரிமை. அரசு அதிகாரத்தின் உண்மையான பொருள் கார்ப்பரேட் முதலாளிவர்க்கத்தின் அதிகாரம்தான் என்று தெரிந்து கொள்ளும் உரிமை!

இனி இந்தக் கட்டுரையின் முதல் வரிக்கு மீண்டும் செல்வோம். அட, இந்த உரிமையை தனது நாட்டு மக்களுக்கு சென்ற -ற்றாண்டிலேயே வழங்கியிருக்கிறாரே முசோலினி!

● மருதையன்

### சுக்ராம் முதல் ராசா வரை ...
### அம்பானி முதல் டாடா வரை ...

# டெலிகாம் ஊழலின் வரலாறு

**தனியார்மயத்தின் பின், கார்ப்பரேட் முதலாளிகளுக்கும், ஆளுங்கட்சிகளுக்கும் பொன் முட்டையிடும் வாத்தாகத் தொலைத்தொடர்புத் துறை இருந்து வருகிறது.**

அலைக்கற்றை ஊழலின் தொகை கற்பனைக்கு எட்டாததாகவும் பிரம்மாண்டமானதாகவும் இருப்பதே, அந்த ஊழல் மக்கள் மத்தியில் பெரும் முக்கியத்துவம் பெறுவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. ஆனால், தொலைபேசித் துறையில் கிடைக்கின்ற வருவாயின் பிரம்மாண்டத்தைக் காட்டிலும், இந்தத் துறையின் போர்த்தந்திர ரீதியான முக்கியத்துவம்தான் ஏகாதிபத்தியங்கள் இதன் மீது தங்கள் கவனத்தைக் குவிப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

தாராளமயக் கொள்கைகளில் தலையாயது நிதித்துறை தாராளமயம். உலகெங்கிலும் உள்ள பங்குச்சந்தைகள் மற்றும் நாணயச்சந்தைகள் உள்ளிட்ட நிதிச்சந்தையை ஒன்றிணைப்பதற்கும், ஏகாதிபத்திய நிதிமூலதனத்தின் சூதாட்டத் தேவைக்கு ஏற்ப, பல இலட்சம் கோடி டாலர் பணம் அன்றாடம் உலகின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு மின்னலைக் காட்டிலும் வேகமாகப் பாய்வதற்கும் அடிப்படையாக இருப்பது தகவல் தொழில்நுட்பத்துறை. நிதிச்சந்தையில் மட்டுமின்றி பல்வேறு சேவைத்துறைகளிலும், உற்பத்தித் துறையிலும் உலகமயமாக்கத்தை அமல்படுத்துவதற்கும்; உற்பத்தி, உழைப்புப் பிரிவினை, சந்தை ஆகியவற்றை உலகளவில் ஒன்றிணைப்பதற்கும் அடிப்படையாக இருப்பது தகவல் தொழில்நுட்பத் துறை.

எனவேதான் தனியார்மய, தாராளமயக் கொள்கைகளில், தொலைபேசி மற்றும் தகவல் தொடர்புத் துறையை தனியார்மயமாக்குவதற்கு ஏகாதிபத்தியங்களும் ஆளும் வர்க்கங்களும் முதன்மை முக்கியத்துவம் அளித்தன என்பதுடன், மிகப்பெரும் அளவு இலாபத்தைத் தரக்கூடியதாகவும் இருப்பதால் இந்தத் துறை முதலாளி வர்க்கத்தைக் கவர்ந்திழுத்தது.

கடந்த 15 ஆண்டுகளாக உள்நாட்டு - வெளிநாட்டுப் பெரு முதலாளிகளின் கொள்ளைக்கும் சூறையாடலுக்குமான களமாகவும் தொலைத் தொடர்புத் துறை இருந்து வந்துள்ளது.

காட் ஒப்பந்தத்தின்படி, தொலைத் தொடர்புத் துறையில் பன்னாட்டு நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் நுழைந்து சூறையாடுவதற்கேற்ப தேசியத் தொலைத் தொடர்புக் கொள்கை நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. அரசுத்துறையாக இருந்த தொலைத் தொடர்புத் துறையை அரசின் முழுக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்ததுடன், டெல்லி மற்றும் மும்பை நகரங்களின் சேவைக்கென எம்.டி.என்.எல். உருவாக்கப்பட்டது. தொலைபேசித்துறை என்ற அரசுத் துறை, பி.எஸ்.என்.எல் என்ற பெயரில் கார்ப்பரேட் நிறுவனமாக்கப்பட்டது.

நாடெங்கும் பூமிக்கடியில் செயற்கைஇழைக் கம்பி வடங்களை அமைப்பது போன்ற அடிக்கட்டுமானப் பணிகளைச் செய்வதற்குப் பகிரங்க ஏலத்தை நடத்தி, 1995-இல் இத்துறையில் தனியார்மயத்தைத் துவக்கி வைத்தது ராவ் அரசு. ரூ. 85,000 கோடியை ஏலத் தொகையாகக் குறிப்பிட்ட ஹிந்துஸ்தான் ஃப்யூச்சரிஸ்டிக் கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் எனும் நிறுவனத்துக்கு உரிமம் அளித்தார், தொலைபேசித்துறை அமைச்சர் சுக்ராம். உரிமத் தொகையைக்கூடச் செலுத்த முடியாத அந்நிறுவனத்துக்காக ஏல விதிகளைத் திருத்தினார். மற்றவர்களைக் காட்டிலும் மிக அதிகமாக ஏலத்தொகையைக் குறிப்பிட்டு, 9 மாநிலங்களுக்கான அடிக்கட்டுமான பணிகளை ஏலமெடுத்த இந்நிறுவனம், வருவாய் வரக்கூடிய டில்லி உள்ளிட்ட 3 மாநிலங்களைத் தவிர, பிற மாநிலங்களின் கட்டுமானப் பணியிலிருந்து விலகிக் கொண்டது. இதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 20,000 கோடி ரூபாய்.

இந்நிறுவனத்தின் மூலம் அமைச்சர் சுக்ராம் ரூ.1,500 கோடிகளைச் சுருட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, 1995 - இல் அவரது வீடுகளிலிருந்து கத்தைகத்தையாக ரூ.3.62 கோடிப் பணத்தை மையப் புலனாய்வுத் துறையினர் வாரிச் சென்றதுடன் வழக்கும் தொடுத்தனர். 2009-இல் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி, சுக்ராமுக்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தது சிறப்பு நீதிமன்றம்.

அடுத்த பத்தாண்டுகளில் ரூ.9,45,000 கோடி வருவாய் தந்திருக்கக் கூடிய பல்வேறு தொலைத்தொடர்பு சேவைப் பிரிவுகள் நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் வெறும் ரூ.1,15,000 கோடிக்கு அடிமாட்டு விலையில் விற்கப்பட்டதையும், அரசுக்குச் செலுத்த வேண்டிய உரிமத் தொகை பாக்கியைக்கூடச் செலுத்தாத இத்தனியார் நிறுவனங்களின் நிலுவைத் தொகை ரூ.8000 கோடி தள்ளுபடி செய்யப்பட்டதையும் அப்போதைய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை சுட்டிக் காட்டியது.






ராசாவுக்கு முன்னர், கார்ப்பரேட் கொள்ளைக்கும் ஊழலுக்கும் விசுவாச சேவை செய்த முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர்கள்: (கடிகாரச் சுற்றுப்படி) சுக்ராம், பேனி பிரசாத் வர்மா, பிரமோத் மகஜன், தயாநிதி மாறன்.

தனியார்மயக் கொள்கையின் கீழ் அரசுத் துறை நிறுவனங்களைக் கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் விழுங்க வகை செய்வது மட்டுமின்றி, தொலைபேசி, மின்சாரம் போன்ற அரசுத்துறைகளை படிப்படியாக ஒழித்துக் கட்டுவதற்கான ஏற்பாட்டை எல்லா துறைகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதும், உலக வர்த்தகக் கழகத்தின் விதியாகும். இதன்படி 'ஏற்கெனவே அரசு ஏகபோகமாக இருந்து வந்த தொலைபேசித் துறை, வலிமையான உள்கட்டுமானத்தையும் மூலதன பலத்தையும் பெற்றிருப்பதால், புதிதாக இத்துறையில் நுழைந்துள்ள தனியார் முதலாளிகள் அதனுடன் போட்டி போட இயலாது என்றும், எனவே கட்டண விகிதத்தையும் ஒதுக்கீடுகளையும் முறைப்படுத்திக் கொடுத்துச் சமமான ஆடுகளத்தை உத்திரவாதம் செய்யவேண்டுமென்றும்' கூறிக்கொண்டு தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையம் (ட்ராய்-TRAI) ஏற்படுத்தப்பட்டது.

கார்ப்பரேட் முதலாளிகள் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்ட இந்த அமைப்பு 1997-இல் தேவகவுடா ஆட்சியில் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட நாள் முதல் அரசுத் தொலைபேசித் துறையின் கால்களை உடைத்து முடமாக்குவதே இதன் பணியாக இருந்தது. மொபைல் தொலைபேசிச் சேவை தொடங்கப்பட்ட ஆரம்ப நாட்களில் ஒரு நிமிடத்துக்கு 15 ரூபாய், 16 ரூபாய் எனக்கட்டணம் வசூலித்து கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தபோதே, சி.டி.எம்.ஏ. தொழில் நுட்பத்தின் மூலம் மலிவான கட்டணத்தில் கைபேசி சேவையை வழங்கும் தொழில்நுட்பத்தை பி.எஸ்.என்.எல். பெற்றிருந்தது.

எனினும், தனியார் முதலாளிகளின் கொள்ளையை ஊக்குவிக்கும் பொருட்டு, கைபேசி சேவையில் பி.எஸ்.என்.எல். நுழையக்கூடாது என்று ட்ராய் அமைப்பின் மூலம் தடுத்து நிறுத்தினார்கள் கார்ப்பரேட் முதலாளிகள். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துப் போராடிய பின்னரே கைபேசி சேவையில் பி.எஸ்.என்.எல். அனுமதிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் நுகர்வோரிடமிருந்து தனியார் முதலாளிகள் அடித்த கொள்ளை பல்லாயிரம் கோடிகள் ஆகும்.

இது போதாதென்று உரிமக் கட்டணங்கள் மிக அதிகமென்றும், தாங்கள் மூலதனத்தைத் திரும்பப் பெறப் போவதாகவும் மிரட்டின அமெரிக்க தொலைபேசி நிறுவனங்கள். உடனே, தேவகவுடா ஆட்சியில் (1996-98) தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த பேனி பிரசாத் வர்மா (காங்.), முன்பணமே வாங்காமல் பல நிறுவனங்களுக்கு அலைக்கற்றை உரிமங்களை வழங்கினார். பன்னாட்டு நிறுவனங்கள் கொடுக்கும் ஒவ்வொரு நிர்ப்பந்தத்துக்கும் ஏற்ப அவர்களுக்குச் சலுகைகள் வாரி வழங்கப்பட்டன.

பின்னர் பா.ஜ.க. ஆட்சியில் அமைச்சராக இருந்த அருண்ஷோரி, அரசுத்துறை நிறுவனங்களைக் கரப்பான் பூச்சிகள் என்று வெறுப்பைக் கக்கியது மட்டுமின்றி, பி.எஸ்.என்.எல்.-இன் பங்குகளை விற்றபோது அவற்றின் உண்மை மதிப்பை வேண்டுமென்றே குறைத்துக் காட்டினார். வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், புதிய தொலைத் தொடர்புக் கொள்கை அறிவிக்கப்பட்டபோது, இக்கொள்கையால் அரசுக்கு அடுத்த பத்தாண்டுகளில் ரூ.50,000 கோடி வருவாய் இழப்பு ஏற்படும் என்று கணக்குத் தணிக்கை அறிக்கை குற்றம் சாட்டியது. இருப்பினும், இந்தக் கொள்கைகூட மேலும் தளர்த்தப்பட்டது. குறிப்பிட்ட தொகையை உரிமக் கட்டணமாகச் செலுத்துவதாகக் கூறிப் பல்வேறு மாநிலங்களில் கைபேசி சேவையைத் தொடங்கிய தனியார் நிறுவனங்கள், தாங்கள் எதிர்பார்த்த அளவு வருவாய் வரவில்லை என்று கூறி ஒப்புக்கொண்ட உரிமக் கட்டணத்தை செலுத்த மறுத்தனர். உடனே, தமக்கு எவ்வளவு வருவாய் வருகிறதோ, அதில் குறிப்பிட்ட சதவீதத்தை மட்

டும் செலுத்தினால் போதும் என்று தனியார் முதலாளிகளுக்கு சலுகை வழங்கி, பல்லாயிரம் கோடி கொள்ளைக்கு கால்கோள் இட்டது பா.ஜ.க. அரசு. அப்போது தொலைத்தொடர்புத்துறை அமைச்சராக இருந்தவர், ராம்விலாஸ் பஸ்வான்.

அதன் பின் அமைச்சரான பிரமோத் மகஜன், ரூ.100 வருவாய் ஈட்டினால் ரூ.2 செலுத்தினால் போதும் என வருவாய்ப் பகிர்வை 2 சதவீதமாகக் குறைத்தார். கைபேசி சேவைகளில், ஜி.எஸ்.எம். தொழில்நுட்பச் சேவைக்கு வாடிக்கையாளர்களிடம் வரவேற்பு இருந்ததால், ஏற்கெனவே சி.டி.எம்.ஏ. தொழில்நுட்பத்தில் இயங்கிவந்த நிறுவனங்கள் ஜி.எஸ்.எம். தொழில்நுட்பத்துக்கு மாறிக் கொள்ள முயற்சித்தன. ஆனால், விதிப்படி இப்புதிய சேவைக்குப் புதிய உரிமம் பெற வேண்டும். இருப்பினும், சி.டி.எம்.ஏ. தொழில்நுட்பத்தில் இயங்கி வந்த ரிலையன்ஸ் நிறுவனம், ஜி.எஸ்.எம். தொழில் நுட்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்குச் சட்டவிரோதமாக தொழில் நடத்த அரசு தாராள அனுமதி அளித்தது. தொலைத்தொடர்புத் துறை தாவாவுக்கான தீர்ப்பாயம் இது சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்த பின்னர், மிக அற்பமாக ரூ.485 கோடி மட்டுமே அபராதமாக விதிக்கப்பட்டது. பின்னர், சி.டி.எம்.ஏ. தொழில்நுட்பத்தைக் கொண்ட நிறுவனங்கள் கொல்லைப்புறமாக ஜி.எஸ்.எம். செல்போன் சேவையை வழங்க 2001-ஆம் ஆண்டில் தாராள அனுமதி வழங்கப்பட்டது. ரிலையன்சின் ஆதாயத்துக்காகவே அமைச்சர் பிரமோத் மகஜனால் இந்தக் கொள்கை கொண்டுவரப்பட்டது.

வெளிநாடுகளுக்கான தொலைத் தொடர்புச் சேவையை அளித்து வந்த வி.எஸ்.என்.எல். எனும் இலாபமிக்க அரசுத்துறை நிறுவனத்திடம் ஏறத்தாழ ரூ.3,000 கோடி உபரி இருந்த போதிலும், இந்நிறுவனத்தின் 25 சதவீதப் பங்குகள் அடிமாட்டு விலையில் ரூ.1439 கோடிகளுக்கு டாடாவுக்கு விற்கப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு, அதன் 25 சதவீதப் பங்குகளை வாங்கும் தனியார் முதலாளிகளுக்கே தரப்படும் என்று பா.ஜ.க அரசு 'கொள்கை' முடிவு எடுத்திருந்ததால், டாடாவின் பிடியில் வி.எஸ்.என்.எல். சிக்கிக் கொண்டது. நிர்வாகம் தன் கைக்கு வந்த மறு கணமே, அந்நிறுவனத்தின் கையிருப்பிலிருந்து ரூ.1200 கோடிகளை எடுத்து, பங்குச்சந்தையில் கவிழ்ந்து கிடந்த டாடா டெலிசர்வீசஸ் என்ற தனது நிறுவனத்தின் பங்குகளை அதிக விலை கொடுத்து வாங்கும் மோசடியைப் பகிரங்கமாக செய்தார், டாடா.

இந்த முறைகேடுகள் அனைத்தும் தொலைத்தொடர்புத் துறையில் நடந்துள்ள கொள்ளைக்கு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. இவையன்றி, நேரடியான கிரிமினல் நடவடிக்கைகளிலும் கார்ப்பரேட் கொள்ளையர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். வாடிக்கையாளர்களை மோசடி செய்வது, கேட்டால் அச்சுறுத்துவது, பி.எஸ்.என்.எல்.-இன் தொலைத் தொடர்பு இணைப்புகளையும் நிலத்தடி கம்பித் தடங்களையும் சேதப்படுத்துவது, இதை எதிர்க்கும் அரசுத்துறை ஊழியர்களைத் தாக்குவது - என ரிலையன்ஸ், ஏர்டெல் நிறுவனங்களின் குண்டர்கள் எண்ணற்ற அட்டூழியங்களில் ஈடுபட்ட போதிலும், இக்கிரிமினல் நிறுவனங்களின் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புகளை உள்நாட்டு அழைப்புகளாகக் காட்டும் கிரிமினல் வேலையைச் செய்து வந்த திருட்டு கால் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தைக் கையும் களவுமாக ஆதாரத்துடன் பிடித்துக் கொடுத்தனர் வாடிக்கையாளர்கள். பொருளாதார மோசடியாக மட்டுமின்றி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவது உள்ளிட்ட பாரிய கிரிமினல் குற்றப் பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய இந்தக் குற்றத்துக்கு, அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.1600 கோடி என்று மதிப்பிடப்பட்டது. இந்தத் தொகையைக் கூட முழுமையாக வாங்காமல் 600 கோடி ரூபாய் வாங்கிக் கொண்டு நீதிமன்றத்துக்கு வெளியே பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டது அரசு. அம்பானியுடன் இந்தக் கட்டப் பஞ்சாயத்தைப் பேசி முடித்தவர், இத்துறையின் அமைச்சராக இருந்த தயாநிதி மாறன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 15 ஆண்டுகளில் இத்துறையில் நடைபெற்றுள்ள கொள்ளைகளுக்குக் கணக்கு வழக்கில்லை. உயர் தொழில்நுட்பத் துறையாக இருப்பதால் இதில் நடைபெறும் கொள்ளைகளை வல்லுநர்கள் மட்டுமே கண்டுபிடிக்க முடியும் என்ற நிலையையும் முதலாளிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். எனினும், அரசுத் தொலைபேசித் துறையின் தொழிற்சங்கங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வலது, இடது போலி கம்யூனிஸ்டுகள் இத்தகைய கொள்ளைகளுக்கு எதிராக ஊழியர்களைத் திரட்டி போராடியதோ, மக்கள் மத்தியில் கொண்டு சென்றதோ இல்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு இவர்கள் வெளியிலிருந்த ஆதரவு கொடுத்த காலத்தில்தான் தற்போதைய அலைக்கற்றை ஊழல் உள்ளிட்ட அனைத்தும் நடந்துள்ளன. எனினும், தற்போது கணக்குத் தணிக்கை அறிக்கை வெளிவந்ததை ஒட்டி இப்பிரச்சினை பெரிதானவுடன், ''நாங்கதான் பிரதமருக்கு இதுபற்றி முதலில் கடிதம் எழுதினோம்'' என்று வெட்கங்கெட்டுப்போய், கருணாநிதி பாணியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அரசுத்துறையான பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல். ஆகியவற்றை நிர்வகிக்கத் தலைமை இயக்குனர் பதவிக்குத் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த இயக்குனர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. 'திருடன் கையில் பெட்டிச் சாவியைக் கொடுப்பது' என்பது கொள்கை முடிவாகவே எடுக்கப்படுவதால், இனி கார்ப்பரேட் திருடர்கள் அரசு சொத்தைக் 'களவாட' வேண்டிய அவசியம் இருக்காது. அதற்கு ஆ.ராசா போன்ற அமைச்சர்களின் தயவும் அவர்களுக்குத் தேவைப்படாது என்பதால், 'ஊழல்' குறித்த பேச்சும் இனி எழாது என்று நம்புவோமாக!

● பாலன்

## கமாஸ் வெக்ட்ரா ஊதிய ஒப்பந்தம்:

# தொழிலாளர் வர்க்க ஒற்றுமையின் வெற்றி!




ஓசூரில் இயங்கிவரும் கனரக வாகன உற்பத்தி நிறுவனமான கமாஸ் வெக்ட்ரா எனும் பன்னாட்டு நிறுவனம், தனது ஆலையில் நீண்டகாலமாகப் பணியாற்றி வந்த 62 தொழிலாளர்களைச் சட்டவிரோதமாக வேலைநீக்கம் செய்ததை எதிர்த்து, அவ்வாலைத் தொழிலாளர்கள் பு.ஜ.தொ.மு. தலைமையில் சங்கமாகத் திரண்டு அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களின் பேராதரவோடு தொடர்ந்து போராடி, கடந்த ஆண்டு ஏப்ரலில் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு முதற்கட்ட வெற்றியைச் சாதித்தனர். (பார்க்க: புதிய ஜனநாயகம், ஏப்ரல்-2010)

அதன் தொடர்ச்சியாக பு.ஜ.தொ.மு.-வுக்கும் ஆலை நிர்வாகத்துக்குமிடையே நடந்து வந்த ஊதிய உயர்வு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை கடந்த நவம்பர் மாதத்தில் இறுதியாகி, ஓசூர் வட்டாரத்தில் இதுவரை எந்தச் சங்கமும் சாதித்திராத வகையில் இவ்வாலைத் தொழிலாளர்கள் ஊதியமாக ரூ.11,000/- மற்றும் பல்வேறு நிதிப் பயன்களைப் பெற்றுள்ளனர்.

பேச்சுவார்த்தையின்போது ஆலை நிர்வாகமோ தொழிலாளிகளுக்கு ரூ.2500-க்கு மேல் தரமுடியாது என்றும், இல்லையேல் கதவடைப்பு செய்யப் போவதாகவும் எச்சரித்தது. இதர தொழிற்சங்கங்கள் இத்தகைய நிலை வரும்போது, இன்னுமொரு 500 அல்லது 1000 ரூபாய் சேர்த்துத் தரச் சொல்லி மல்லுக்கட்டிவிட்டு, அடிமை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதுதான் வாடிக்கை. தற்காலிகத் தொழிலாளிகளைப் பற்றியோ, ஒப்பந்தத் தொழிலாளிகளைப் பற்றியோ இதர சங்கங்கள் போடும் ஒப்பந்தத்தில் எதுவும் இருக்காது. அதற்காக இந்தச் சங்கங்கள் வாதிடுவதும் கிடையாது. எந்த ஆலையிலும் ஒப்பந்தத் தொழிலாளிக்கு போனஸ் கொடுக்கப்பட்டதுமில்லை.

ஆனால், பு.ஜ.தொ.மு., ஒப்பந்தத் தொழிலாளிக்கு முதன்முதலாக போனஸ் பெற்றுத் தந்ததோடு, தற்காலிகத் தொழிலாளிக்குக் குறைந்தபட்ச ஊதியமாக ரூ.6000 வழங்க வைத்துள்ளது. இந்த ஆலையில் தொடக்கத்திலிருந்தே நிரந்தரத் தொழிலாளிகளையும் ஒப்பந்தத் தொழிலாளிகளையும் சங்கமாக்கி வர்க்க ஒற்றுமையைக் கட்டி வளர்த்ததாலேயே, ஆலை நிர்வாகம் பணிந்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

முதலாளித்துவக் கொத்தடிமைத்தனத்துக்கும் வரம்பற்ற சுரண்டலுக்கும் முடிவு கட்டும் வகையில் ஓசூர் வட்டாரத்தில் கமாஸ் வெக்ட்ரா ஆலைத் தொழிலாளர் போராட்டத்தை முன்னுதாரணமாக்குவது, இதர ஆலைகளில் இந்த அளவுக்கு ஊதியமும் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் எனத் தொடர்ந்து போராடி இவ்வட்டாரமெங்கும் தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் கட்டி வளர்ப்பது என்ற நோக்கத்தோடு பு.ஜ.தொ.மு. செயல்பட்டதுதான் இந்த ஒப்பந்தத்தின் சாதனை. அதனால்தான் இந்த ஊதிய உயர்வு ஒப்பந்தம் இவ்வட்டாரமெங்கும் தொழிலாளிகளிடம் பேருற்சாகத்தையும் புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இம்மகத்தான வெற்றியைப் பறைசாற்றும் விதத்திலும், உலகமயமாக்கச் சூழலில் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் ஓரணியில் திரள வேண்டிய அவசியத்தை விளக்கியும், கடந்த 19.12.10 அன்று ஓசூர்-ராம்நகரில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தை பு.ஜ.தொ.மு. நடத்தியது. பு.ஜ.தொ.மு. மாவட்டத் தலைவர் தோழர் பரசுராமன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், கமாஸ் வெக்ட்ரா தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும், புதுவை மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பு.ஜ.தொ.மு. கிளை நிர்வாகிகளும் முதலாளித்துவப் பயங்கரத்தை வீழ்த்தத் தொழிலாளர்கள் புதிய பாதையில் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கி உரையாற்றினர். தொழிலாளர்களின் உணர்வை எதிரொலித்த ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, குடும்பத்தோடு இக்கூட்டத்தில் பங்கேற்ற திரளான தொழிலாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

-பு.ஜ. செய்தியாளர், ஓசூர்

### தோழர் சதாசிவத்தின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டைச் சேர்ந்த, கால்நடை மருத்துவப் பட்டம் பெற்ற 26 வயதான இளம் தோழர் சதாசிவம், கடந்த டிசம்பர் 6-ஆம் தேதியன்று எதிர்பாராத விபத்தில் சிக்கி அகால மரணமடைந்து விட்டார்.



கல்லூரிப் பருவத்தில் மார்க்சிய-லெனினிய அரசியலால் ஈர்க்கப்பட்டு மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஆதரவாளராகச் செயல்பட்ட அவர், வேலை கிடைக்காமல் தவித்த போதிலும் புரட்சிகர உணர்வு குன்றாமல் ஊக்கமுடன் செயல்பட்டார்.

புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க வேண்டுமென்ற அவரது புரட்சிகர உணர்வை நெஞ்சிலேந்தி, அவரது புரட்சிகர கனவை நனவாக்கத் தொடர்ந்து போராட உறுதியேற்போம்.

-மனித உரிமை பாதுகாப்பு மையம், நாமக்கல்.

# தனியார்மயம்:

# ஊழலை உற்பத்தி செய்யும் சாக்கடை

**தனியார்மயம்–தாராளமயத்தின் பின் நடந்துள்ள ஊழல், கார்ப்பரேட் பகற்கொள்ளையின் பட்டியல்.**

தனியார்மயமும் தாராளமயமும் புகுத்தப்பட்டபோது, இக்கொள்கைகள் ஊழலின் கதவை இறுக்கிச் சாத்தப்போகின்றன என என ஆளும் வர்க்க எடுபிடிகள் அனைவரும் தம்பட்டமடித்தனர். ஆனால் அதற்கு மாறாக, கடந்த 20 ஆண்டுகளில் நடந்துள்ள, பல்லாயிரம் கோடிகளை விழுங்கிய பிரபலமான ஊழல்களின் சுருக்கமான பட்டியல் இவை.

● 1991 **ஜெயின் டயரி – ஹவாலா ஊழல்:** 1991-இல் தில்லியில் தற்செயலாகப் பிடிபட்ட ஹவாலா தரகன் ஜே.கே. ஜெயினிடம் அவன் இலஞ்சக் கணக்கு எழுதி வைத்திருந்த டைரி பிடிபட்டது. இன்று ஸ்பெக்ட்ரம்-ராடியா விவகாரத்தில் சிக்கியிருக்கும் காங்கிரசு, பாஜக தலைவர்களின் இரகசியங்களைக் கசியவிட்டு, 'எல்லோரும் திருடர்கள்தான்' என்று நிரூபிக்க முயல்வதைப் போலவே, அன்று பல்வேறு ஊழல்களில் சிக்கித் திணறிக்கொண்டிருந்த பிரதமர் நரசிம்ம ராவ் ஜெயின் டயரியைக் கசியவிட்டார். கமிஷன் பெற்றவர்களின் பட்டியலில் 115 பேர் இருந்தனர். ரூ.68 கோடி வரை கமிஷன் தரப்பட்டிருந்தது. ராஜீவ் காந்தி, நரசிம்ம ராவ், தேவிலால், அத்வானி, சுக்லா எனப் பெருந்தலைகள் எல்லாம் இந்த ஊழலில் கை நனைத்திருந்தனர். சட்டப்பூர்வமான ஆதாரங்கள் ஏதுமில்லை எனக்கூறி 1997 ஏப்ரலில் அத்வானிக்கும் சுக்லாவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடியானது. பின்னர் அனைவருமே சிறப்பு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.




ஜெயின் டைரி ஊழலில் சிக்கிய அத்வானி.

● 1992 **அர்சத் மேத்தா ஊழல்:** ஒவ்வொரு அரசுடைமை வங்கியும் வாடிக்கையாளர்கள் முதலீடு செய்யும் தொகையில் குறிப்பிட்ட சதவீதத்துக்கு அரசாங்கப் பத்திரமாக மாற்றி வைத்திருக்க வேண்டும் என்பது ரிசர்வ் வங்கியின் உத்தரவு. தரகர்கள் வழியாக வாங்கப்படும் இந்தப் பத்திரங்களுக்கு வங்கிகள் வழங்கும் அத்தாட்சி ரசீதை, முப்பது நாள் அவகாசத்துக்குள் வங்கிகளில் பிணையாக வைத்துப் பொதுமக்கள் பணத்தைக் கடனாகப் பெற்ற பங்குச் சந்தைத் தரகரான அர்சத் மேத்தா, பங்குச் சந்தையில் சூதாடி கோடிகோடியாகச் சுருட்டியதுதான் இந்த ஊழலாகும். வங்கி அதிகாரிகளும் ஓட்டுக்கட்சிகளும் பெரும் தரகு முதலாளிகளும் மேத்தாவைப் பினாமியாகக் கொண்டு நடத்திய இக்கொள்ளையில் ஏறத்தாழ ரூ.2500 கோடிக்கு மேல் சுருட்டப்பட்டது. அர்ஷத் மேத்தாவுக்கு எதிராக 72 கிரிமினல் வழக்குகளும், 600-க்கும் மேற்பட்ட சிவில் வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒரு வழக்கில் 7 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டு, மற்ற வழக்குகள் ஆமை வேகத்தில் வழக்குகள் நகர்ந்து கொண்டிருக்கும்போதே 2002-இல் மேத்தா மரணமடைந்தான்.



அர்சத் மேத்தா

● 1995 **ரிலையன்சின் போலிப் பத்திரங்கள்:** ரிலையன்சு ரூ 1.06 கோடிக்குப் போலிப் பங்குகளை வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்றது கண்டறியப்பட்டதால் மூன்று நாட்களுக்கு ரிலையன்சின் பங்கு வர்த்தகம் பம்பாய் பங்குச் சந்தையில் நிறுத்திவைக்கப்பட்டது. இதே போல அரசு நிறுவனமான 'யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா'வுக்கு 47 கோடி ரூபாய்க்கு போலிப் பங்குகளை ரிலையன்சு விற்றிருந்ததும் தெரியவந்தது. உடனே கொதித்தெழுந்த அம்பானி, பம்பாய் பங்குச் சந்தையில்



திருபாய் அம்பானி

இருந்து விலகி தில்லிச் சந்தையோடு இணையப் போவதாக மிரட்டினார். உடனே பம்பாய் சந்தை சமரசப் பேச்சு நடத்தி அம்பானிக்குப் பணிந்தது.

● 1996 **காலணி ஊழல்.** 1982 முதல் மராட்டிய கூட்டுறவுச் சங்க காலணித் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 25000 கடனாக வழங்கப்பட்டு வந்தது. நொடித்துப் போன சங்கங்களை மோசடி - தில்லுமுல்லுகள் மூலம் அதிகாரிகள் துணையோடு பெருமுதலாளிகள் கைப்பற்றி, போலியாக தொழிலாளர் எண்ணிக்கையைக் காட்டி கடன்களைச் சுருட்டினர். ஆண்டுதோறும் ரூ 500 கோடி வரை இவ்வாறு சுருட்டப்பட்டது. தாவூத் ஷூ, மெட்ரோ ஷூ, மிலானோ ஷூ முதலான கார்ப்பரேட் நிறுவனங்களின் முதலாளிகளும் சிட்டி பேங்க், மராட்டிய மாநில நிதிக் கழகம், ஓமன் வங்கி, பஹ்ரைன் வங்கி, தேனா வங்கி ஆகியவற்றின் உயரதிகாரிகளும் குற்றப்பத்திரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், 15 ஆண்டுகளாகியும் வழக்கு இன்னும் நகரவேயில்லை.

● 1997 **சி.ஆர்.பி. நிதி நிறுவன ஊழல்:** மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டியங்கிய சி.ஆர்.பி. நிதி நிறுவனத்தின் தலைவரான சி.ஆர்.பன்சாலி, போலி ஆவணங்கள் - போலி நிறுவனங்களின் பெயரால் முத்திரைத் தாள் தயாரிப்பதில் திறமைசாலி. இதனையே மூலதனமாகக் கொண்டு சி.ஆர்.பி. நிதி நிறுவனத்தைத் தொடங்கி, பங்கு பத்திர வியாபாரத்தை நடத்தினான். அடிமாட்டு விலைக்கு மொத்தமாகப் பங்குகளை வாங்கி, விற்பதென்பது இவனது தொழில் உத்தி. பன்சாலியின் முறைகேடுகளைப் பற்றி பங்கு பரிமாற்றக் கழகம் முன்னரே அறிந்திருந்தபோதிலும் சி.ஆர்.பி.யை அங்கீகரித்தே வந்தது. ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவரான எம்.கே. சின்ஹா, இந்நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவர். இந்த நம்பிக்கையில் பங்குகளை வாங்கிய நடுத்தர வர்க்கத்தினருக்கு 1997-இல் பட்டை நாமம் சாத்தி ரூ.1200 கோடியை பன்சாலியும் அவனது கூட்டாளிகளான பெருமுதலாளிகளும் அதிகாரிகளும் சுருட்டினர். 1997-இல் கைதான பன்சாலி மூன்று மாதங்களைச் சிறையில் கழித்துவிட்டு, பிணையில் வெளிவந்து தலைமறைவாகிவிட்டான்.

● 2001 **கேதான் பரீக் மோசடி:** கேதான் பரீக் எனும் பங்கு சந்தைத் தரகன், பிரபலமான 10 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின்(கே10) பங்குகளை 2000-வது ஆண்டில் வாங்கிக் குவித்ததன் மூலம் பங்குகளின் விலை மடமடவென உயர்ந்தன. ''கே10'' பங்குகளை ஊதிப் பெருக்குவதற்காக 4 அந்நிய நிதி நிறுவனங்கள் பரீக்குடன் சேர்ந்து கொண்டு, ரூ 1,47,000 கோடி ரூபாயை பரீக் நடத்திய ஊக வணிகத்தில் முதலீடு செய்து, பங்குச் சந்தை சூதாட்டத்தில் கோடிகோடியாகச் சுருட்டின. 2001-இல் டாட்.காம் வீழ்ச்சியின்போது மும்பை போட்டித் தரகர்கள் ''கே10'' பங்குகளைக் கொத்துக் கொத்தாக விற்று விலையை வீழ்த்தினர்.

இச்சரிவைத் தடுத்து நிறுத்த பல்வேறு வங்கிகள் கோடிக்கணக்கில் கடனாகக் கொடுத்தன. இக்கடன்களுக்குப் பிணையாக பரீக் கொடுத்திருந்த பங்குப் பத்திரங்கள் சந்தை வீழ்ச்சியால் வெறும் காகிதமாகிப் போயின. ரூ.4669.50 கோடிகளை கேதானின் பங்குகளில் முதலீடு செய்திருந்த யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா எனும் அரசுத்துறை பரஸ்பர நிதி நிறுவனம் இதனால் திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டது. நம்பிக்கையோடு யூனிட் டிரஸ்டில் முதலீடு செய்திருந்த நடுத்தர வர்க்கத்தினர் பணம் கரைந்து போனது. 1992-இல் ஏற்கெனவே கேத்தன் பரீக் செய்த வேறொரு ஊழல் விசாரிக்கப்பட்டு 2008-இல் ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. 2001-இல் செய்த ஊழல் விசாரணை இன்னும் முடியவில்லை. 2017 வரை பங்கு வர்த்தகத்தில் ஈடுபட இவனுக்குத் தடை விதிக்கப்பட்ட போதிலும், கேத்தான் பரீக் இன்னமும் பங்குச்சந்தையில் சூதாடுவதாகக் கூறியிருக்கிறது செபி.




கேதான் பரீக்

● 2003 **போலிப் பத்திர ஊழல்:** பத்திரங்கள் விற்பனையாளனான தெல்கி என்பவனுடன் அரசு அச்சுக் கூடத்தின் அதிகாரிகள், அமைச்சர்கள், போலீசு அதிகாரிகள் சேர்ந்து நடத்திய மோசடி இது. அரசு அச்சகத்தில் இருந்து பழைய அச்சு எந்திரம், அரசு அச்சகத்தின் தொழில்நுட்பங்கள்,இறக்குமதி செய்யும் காகிதம், மை, அச்சிடப்போகும் பத்திரத்தின் எண்வரிசை என அனைத்தும் தெல்கிக்காகக் கடத்தப்பட்டது. 9 மாநிலங்களில் விற்பனை



தெல்கி


தெல்கியின் கூட்டாளி முகம்மது அலி.

வலைப்பின்னலை உருவாக்கி போலிப் பத்திரங்களை விற்றதோடு, ஒரிஜினல் பத்திரங்களுக்குச் சந்தையில் செயற்கையாக தட்டுப்பாட்டை உருவாக்கி, இக்கும்பல் வியாபாரத்தை விரிவுபடுத்தியது.

இந்த விசயம் மெதுவாகக் கசிந்து 2001-இல் கர்நாடக போலீசு தெல்கியைக் கைது செய்த போதிலும், அவனது வியாபாரம் சிறைக்குள் இருந்தபடியே தொடர்ந்தது. அன்னா ஹசாரே எனும் காந்தியவாதி போட்ட பொதுநல வழக்குக்குப் பின்னர்தான் தெல்கியின் ஊழல் அவசரமாக விசாரிக்கப்பட்டது. தெல்கியிடமிருந்து 90 லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு அவனுக்குத் துணையாக இருந்த போலீசு இணை கமிஷனர் சிறீதர் வாகய், மும்பய் நகர போலீசு கமிஷனர் ஆர்.எஸ். சர்மா, தமிழக போலீசு உயரதிகாரி முகம்மது அலி போன்ற பெருந்தலைகள் கைதாகினர். இவர்கள் விற்ற போலிப் பத்திரங்களின் மதிப்பு ரூ.30,000 கோடி. ஆனால், 53 லட்சம் பெறுமானமுள்ள பத்திரத்தாள்களை மட்டுமே கைப்பற்றியதாக பெயருக்கு ஒரு வழக்கு கர்நாடகத்தில் போடப்பட்டது. பிற மாநிலங்களில் பல்வேறு வழக்குகள் போடப்பட்டுள்ள நிலையில், கர்நாடகத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என 2010-இல் விடுவித்தது கர்நாடக உயர் நீதிமன்றம்.

● 2009 **சத்யம் மோசடி:** சர்வதேச அளவில் சிறந்த கார்ப்பரேட் நிர்வாகத்திற்கான ''தங்க மயில்'' விருது பெற்ற சத்யம் மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் ராமலிங்க ராஜு, தன் நிறுவனத்திற்கு ரொக்க சேமிப்பு ரூ.5040 கோடி இருப்பதாக 2001 முதல் பொய்க்கணக்கு காட்டி, முதலீட்டாளர்களைக் கவர்ந்து பத்து ரூபாய் மதிப்புள்ள பங்கினை ரூ 188.70-க்கு உயர்த்தி, பங்குகளில் பெரும்பகுதியை விற்று 2003 டிசம்பர் முதல் 2007 மார்ச்சுக்குள் ரூ.1252 கோடியைச் சுருட்டினார். உண்மையில் அந்நிறுவனத்திடமிருந்த கையிருப்பு ரூ.320 கோடிதான்.


ராமலிங்க ராஜு

கணக்கு காட்டிய 5040 கோடிக்கும், 320 கோடிக்குமான இடைவெளியை நிரப்ப, தனது மகன்கள் பெயரில் ரியல் எஸ்டேட் நிறுவனங்களை ஆரம்பித்து, அவற்றை சத்யம் ரூ.7000 கோடி கொடுத்து விலைக்கு வாங்குவதாக செட்டப் செய்தார். அதாவது, இல்லாத ரொக்கத்தை கொடுத்து இரண்டு கம்பெனிகளை வாங்கியதாகக் காட்டி மோசடி செய்வதே ராஜுவின் திட்டம். சில முதலீட்டாளர்களின் எதிர்ப்பால் தில்லுமுல்லுகள் வெளியாகி கைது செய்யப்பட்டார். இவரது கள்ளக் கணக்குக்குத் தணிக்கை சான்றிதழ் கொடுத்து பங்குச்சந்தை முதலீட்டாளர்களைக் கழுத்தறுக்கத் துணை நின்றது பிரபல பன்னாட்டு தணிக்கை நிறுவனமான பிரைஸ்வாட்டர் கூப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜு, தனது மோசடிக்கு ஆதாரமான ஆவணங்களை அழித்து விட அவகாசம் கொடுக்கப்பட்டுப் பின்னர்தான் கைது செய்யப்பட்டார். சொகுசு மருத்துவமனையில் 'சிறைவாசம்' புரிந்த ராமலிங்க ராஜுவுக்கு பிணையும் வழங்கப்பட்டது. வழக்கு நடந்து வருகிறது.


கேதான் தேசாய்

● 2010 **கேதான் தேசாய் கொள்ளை:** இந்திய மருத்துவ கவுன்சில் தலைவரான டாக்டர் கேதான் தேசாய், பஞ்சாப் மருத்துவக் கல்லூரி ஒன்றுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக ரூ.2 கோடி லஞ்சம் வாங்கும் போது பிடிபட்டார். அவரது வீட்டிலிருந்து ரூ.1800 கோடி ரொக்கம், 1500 கிலோ தங்க நகைகளை சி.பி.ஐ. கைப்பற்றியது. அங்கீகாரமளிப்பதற்கு கல்லூரி ஒன்றுக்கு ரூ.30 கோடி லஞ்சம் வாங்கியதுடன், நாட்டிலுள்ள 200 சுயநிதிக் கல்லூரிகளிடமிருந்து தலா 5 சீட்டுகளை ஒதுக்கீடாகப் பெற்று அவற்றை இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்பனை செய்தும் பணம் குவித்துள்ளான் தேசாய். 2010 ஜூனில் பிணையில் வந்த இந்த கிரிமினலை, 2010 நவம்பரில் குஜராத் பல்கலைக்கழகம் தனது செனட்டிற்குத் தேர்ந்தெடுத்தது.

- இவை சில உதாரணங்கள் மட்டுமே. இவை தவிர 1996-இல் நடந்த நரசிம்ம ராவின் மகன் பிரபாகர் ராவின் யூரியா ஊழல், கர்நாடக ரெட்டி சகோதரர்களின் சுரங்க ஊழல், அண்மையில் நடந்துள்ள ஆதர்ஷ் ஊழல்.. எனத் தொடரும் ஊழல்களையும், மாநில அளவில் நடைபெற்றுள்ள ஊழல்களையும் பட்டியலிட பக்கங்கள் போதாது. இவற்றில் பங்குச்சந்தை, போலிப்பத்திரங்கள், ஹவாலா மற்றும் நிதிநிறுவன ஊழல்கள் போன்றவை தாராளமயக் கொள்கைகளின் நேரடி விளைவுகள். கேதான் தேசாய், காலணி ஊழல் போன்றவை தனியார்மயத்தின் விளைவுகள்.

● அப்துல்லா

# கார்ப்பரேட் கொள்ளைக்கேற்ற அரசின் கொள்கைகள்!

**மைய அரசின் நிதி–வர்த்தக–தொழிற் கொள்கைகள் கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கே வழிவகுத்துள்ளன.**

**மின்சாரம்:**

2003-ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வந்த புதிய மின்சாரச் சட்டத்தின்படி மாநிலங்களின் கட்டுப்பாட்டிலிருந்த மின்சார வாரியங்கள் கலைக்கப்பட்டு, உற்பத்தி, பகிர்மாணம், விநியோகம் என மூன்று தனித்தனி நிறுவனங்களாகப் பிரிக்கப்பட்டன. ஆகஸ்ட் 2003 -இல் தில்லியின் மின் விநியோகம் தனியார்மயமாக்கப்பட்டு டாடா, ரிலையன்ஸ் ஆகிய நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனங்கள், அரசிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ1.32 வீதம் மின்சாரத்தை வாங்கி அரசு நிறுவனமான குடிநீர் வாரியத்துக்கு ரூ 6.52-க்கும், நகராட்சிக்கு ரூ.6.92-க்கும் விற்றன. இதில் டாடாவும் ரிலையன்சும் சுருட்டியது ரூ.2ஆயிரம் கோடி. ஒரிசாவில் தனியார் நிறுவனங்கள் அரசிடம் இருந்து மின்சாரம் வாங்கி மக்களுக்கு விற்று இலாபம் பார்த்துவிட்டு, வாங்கிய மின்சாரத்துக்குக் காசு கொடுக்காமல் ரூ.3,240 கோடியை அரசுக்கு நாமம் போட்டன.

தனியார்மயமாக்கப்படும் மின்சாரத் துறையின் லட்சணத்திற்கு என்ரான் ஒரு உதாரணம். அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான என்ரான், மராட்டிய மாநிலத்தில், தபோலில் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்தது. இதற்கு போட்ட ரூ.9,000 கோடி முதலீட்டில் ஏறத்தாழ 40 சதவீதம் (3,600 கோடி) இந்திய வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்பட்டது. என்ரானின் மின்சாரத்துக்கு மாநில அரசு கொடுத்த விலை யூனிட் ஒன்றுக்கு 7ரூபாய். இதுவன்றித் திறன் கட்டணம் என்ற பேரில் மாதம் ரூ.95 கோடியை மாநில அரசு கொடுத்தது. போட்ட முதலுக்கு 16% இலாப உத்திரவாதமும் கொடுத்தார் வாஜ்பாயி. நிதி மோசடியில் ஈடுபட்ட என்ரான் அமெரிக்காவிலேயே திவால் ஆனது. என்ரான் நிர்வாகிக்கு அங்கே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இங்கேயோ என்ரானின் வக்கீலாகப் பணியாற்றி வந்த ப.சிதம்பரம், பின்னர் நிதி அமைச்சராகி, திவாலான என்ரானை ரூ.9000 கோடி விலை கொடுத்து வாங்கினார்.

**எண்ணெய் - எரிவாயு:**

1990-க்குப் பின் எண்ணெய் - எரிவாயுத் துறையில் தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் அனுமதிக்கப்பட்டனர். அரபிக்கடல் பகுதியில் அமைந்துள்ள ரூ.20,000 கோடி ரூபாய் பெறுமானமுள்ள முக்தா மற்றும் பன்னா என்ற இரு எண்ணெய் வயல்களை, ரிலையன்சும், அமெரிக்காவின் என்ரான் நிறுவனமும் கூட்டணி கட்டிக் கொண்டு வெறும் 12 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தன. முதலில் வந்தவருக்கு முதலில் என்ற 'ஸ்பெக்ட்ரம் கொள்கைதான்' அன்றும் பின்பற்றப்பட்டது. இதேபோல 40-க்கும் மேற்பட்ட எண்ணெய் வயல்கள் விற்கப்பட்டன. அரசுத்துறை நிறுவனமான எண்ணெய் எரிவாயுக் கழகத்தின் கோதாவரி ஆற்றுப்படுகை எண்ணெய் வயலை ரிலையன்சுக்கு விற்ற முறைகேடுகளை விசாரிக்க முடியாது என்று தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்

**காடுகள்:**

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு - 46, இந்தியப் பழங்குடியினரின் வாழ்விடங்களின் மீதான அவர்களின் உரிமையையும், அது பறிக்கப்பட்டால் மீட்டுக் கொடுப்ப

பன்னாட்டு நிறுவனமான வேதாந்தாவிடம் நியம்கிரி மலை விற்கப்படுவதை எதிர்த்துப் போராடும் கோந்த் பழங்குடியின மக்கள். (கோப்புப் படம்)



தையும் உறுதி செய்கிறது. ஆனால், மறுகாலனியாக்கம் எல்லாவற்றையும் குப்பையில் கடாசிவிட்டது. ஒரிசாவில் இரும்புக் கனிம நிறுவனங்களும், பிற முத லாளிகளும் பெரும்பகுதி நிலங்களைப் பறித்து விட் டனர்.

சட்டீஸ்கரில் பழங்குடியினரின் நிலங்கள் அபகரிக் கப்பட்டதைக் குறிப்பிட்டு, 2009-ஆம் ஆண்டு கிராமப் புற வளர்ச்சிக்கான அமைச்சகத்தின் அறிக்கை, டாடா மற்றும் எஸ்ஸார் குழுமத்தையும், இந்திய அரசையும் மிகப் பெரிய நில அபகரிப்பு கும்பல் என்று குற்றம் சாட்டுகிறது. இவையெல்லாமே அரசியல சட்டத்தை மீறி வெளிப்படையாகச் செய்யப்பட்ட கிரிமினல் நட வடிக்கைகள். இவற்றின் மூலம் பல லட்சம் கோடி மதிப்புள்ள கனிம வளங்கள் தனியார் - பன்னாட்டு முத லாளிகளின் கைகளுக்கு மாற்றிவிடப்பட்டுள்ளன.

**தண்ணீர்க் கொள்ளை:**

சட்டீஸ்கர் சியோனாத் ஆறு தனியாருக்கு விற்கப்பட் டது. அதனைப் பொதுமக்கள் பயன்படுத்துவது போலீசு துணையுடன் தடுக்கப்பட்டது. ஆற்றிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிலிருந்த கிணறுகள் அனைத் தும் வலுக்கட்டாயமாக மூடப்பட்டன.

இவ்வாறு, மகாராஷ்டிராவின் நிரா ஆறு உள்ளிட்டு தமிழகம், கர்நாடகா, கேரளா என நாடு முழுவதும் 40-க் கும் மேற்பட்ட இடங்களில் ஆறுகளும் குளங்களும் பா.ஜ.க., காங்கிரசு ஆட்சிகளின் போது அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுவிட்டன. தாமிரபரணியில் தண் ணீர் எடுக்க லிட்டருக்கு 1.2 பைசா மட்டுமே அரசுக்குத் தருகிறது, கோகோ கோலா.

**சுரங்கங்கள்:**

சுற்றுச்சூழல் விதிகள் அனைத்தும் காற்றில் பறக்கவி டப்பட்டு, ஒரிசாவின் நியம்கிரி மலையில் பன்னாட்டு நிறுவனமான வேதாந்தாவிற்குச் சுரங்கம் தோண்ட அனு மதி கொடுக்கப்பட்டதை ஆகஸ்டு 2010-இல் அம்பலப் படுத்தினார் என்.சி.சாக்சேனா என்பவர். 2006-இல் சட் டீஸ்கரில் ராமன் சிங் தலைமையிலான பா.ஜ.க. அரசு, பன்னாட்டு நிறுவனங்கள் நிலக்கரிச் சுரங்கம் அமைக்க ஏதுவாக யானைகள் சரணாலயத்திற்கான அனுமதியை ரத்து செய்தது.

தாமிரபரணி தண்ணீரைக் கொள்ளையிட்டு வரும் கோக்கை வெளியேறக் கோரித் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை பாளையங்கோட்டையில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



இரும்புத் தாதுவின் சந்தை விலை ஒரு டன் 1000 ரூபாய்க்கும் மேல் உள்ளது. ஆனால், அரசுக்குத் தனி யார் சுரங்கங்கள் கொடுப்பதோ வெறும் 27 ரூபாய். இந்த விலையும் 2004-இல் மாற்றியமைக்கப்பட்ட அடிமாட்டு விலை ஆகும்.

கர்நாடகாவில் மட்டும் 600 சட்டவிரோத இரும்புச் சுரங்கங்கள் செயல்படுகின்றன. இந்தியா முழுவதும் 15,000 சட்டவிரோத சுரங்கங்கள் இருக்கின்றன (8,700 சுரங் கங்கள் மட்டுமே அனுமதி பெற்று இயங்குபவை).

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்:**

சி.பொ.மண்டலங்களுக்கு, சுங்க வரிச் சட்டம் அல் லது பிற எந்த வகைச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் ஏற்றுமதி/இறக்குமதிக்கான வரிகளிலிருந்து முழு விலக்கு; வருமான வரிச் சட்டம் 1961 பிரிவு 10-அ மற் றும் பிரிவு 80-IAB - ன்படி 100% வருமான வரிச் சலுகை; மத்திய கலால் வரி, சேவை வரி , மத்திய விற்பனை வரி, மாநில விற்பனை வரி இவற்றிலிருந்து முழு விலக்கு. மேலும், வெளிநாட்டு வணிகக் கடன் (External Commercial Borrowing) எனப்படும் குறைந்த வட்டி வெளிநாட்டுக் கடன்கள் 12 லட்சம் கோடி டாலர்கள் வரை பெற்றுக் கொள்ளும் வசதி சிறப்புச் சலுகைகளு டன் அளிக்கப்பட்டுள்ளன.

இவையன்றி அந்தந்த மாநில அரசுகள் அளிக்கும் சிறப்புச் சலுகைகள் தனி. நோக்கியா ஆலைக்குத் தமி ழக அரசு வழங்கியுள்ள சலுகைகள் ஒரு எடுத்துக்காட்டு. வாட் வரி, மத்திய விற்பனை வரியாக மத்திய அரசுக்கு நோக்கியா கட்டும் வரிகளை தமிழக அரசு திருப்பிக் கொடுக்கும். அந்த வகையில் 2005 முதல் இன்று வரை ரூ.650 கோடி திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது. நோக் கியா இந்தத் தொழிற்சாலையில் போட்ட முதலீடே ரூ.650 கோடிதான். அதுவும் வரிச்சலுகை என்ற பெயரில் வழங்கப்பட்டுவிட்டது. மொத்தமாக 1,024 கோடி ரூபாய்க்கு சலுகைகள் வழங்கியுள்ளது தமிழக அரசு. குறைந்த விலையில் மின்சாரம், தண்ணீர், அடி மாட்டு விலைக்கு நிலங்கள் எனச் சிறப்புப் பொருளாதார மண் டலங்கள் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாயைக் கொள் ளையடித்துள்ளனர் தனியார் - பன்னாட்டு முதலாளிகள்.

டாடா நிறுவனத்தின் நேனோ கார் உற்பத்தி சி.பொ. ம.விற்கு மேற்கு வங்க சி.பி.எம். அரசு 1% வட்டிக்கு ரூ.200 கோடி கடனுதவி தருவதாகவும், அதுவும் 20 வரு டங்கள் கழித்துதான் வட்டி கணக்கிட்டு வசூலிக்கப்ப டும் என்றும் ஒப்பந்தமிட்டது. தற்போது அதனினும் அதிகமான சலுகைகளை குஜராத் அரசு வழங்கியுள்ளது. இதுவரை சி.பொ.ம.-வால் மத்திய அரசுக்கு மட்டும் ரூபாய் ஒரு இலட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட் டுள்ளது. மாநில அரசுகள் இழந்த தொகை எத்தனை இலட்சம் கோடி என்பதற்கு கணக்கு இல்லை.

### சட்டப்பூர்வ வரி ஏய்ப்பு - மொரிஷியஸ் வழி:

இந்தியாவில் மூலதனமிட்டிருக்கும் அந்நிய நாடுகளில் முதலிடத்தில் இருப்பது அமெரிக்காவோ, ஜெர்மனியோ, ஜப்பானோ அல்ல. இந்து மாக்கடலில் உள்ள மொரிஷியஸ் என்னும் குட்டித்தீவுதான். காரணம், அந்த நாட்டுடன் இந்தியா போட்டிருக்கும் இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம். இதன்படி, மொரிஷியஸ் தீவைச் சேர்ந்தவர் இலாபத்திற்கான வரியை மொரிஷியஸில் கட்டினாலே போதும். மொரிஷியஸ் அரசோ அப்படி ஒரு வரியே விதிக்கவில்லை. எனவே, இந்தியாவில் முதலீடு செய்யும் பன்னாட்டு நிறுவனங்களும், இந்தியத் தரகு முதலாளிகளும் மொரிஷியஸில் தங்கள் நிறுவனத்தைப் பதிவு செய்து கொண்டு, அதன் மூலமாக தமது மூதலீட்டை கொண்டு வருவதன் மூலம் வரியே கட்டாமல் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ரூ.2000 கோடி சுருட்டுகின்றனர்.

ஏப்ரல் 2000-இல் நேரடி வரிகளுக்கான மத்திய அமைப்பு இந்த முறைகேடுகளை விசாரிக்கத் தொடங்கியவுடன், இந்தியப் பங்குச் சந்தையில் சரிவை உண்டாக்கி மிரட்டினர், இம்முதலாளிகள். நிதி அமைச்சகமும் நிரந்தரமாகப் பின்வாங்கியது.


### அந்நியச் செலவாணிச் சட்டத்திருத்த மோசடிகள்:

கடத்தல் மற்றும் அந்நியச் செலவாணி மோசடிகளினால் நாட்டின் பொருளாதாரம் சீர்கெடுவதைத் தடுப்பதற்காகக் கொண்ட வரப்பட்ட அந்நிய செலாவணி ஒழுங்குமுறை சட்டம் (ஃபெரா) 2000-இல் முற்றிலும் நீக்கப்பட்டு, அதன் இடத்தில் அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (ஃபெமா) கொண்டு வரப்பட்டது. இதன்படி, ஃபெராவின் கீழ் கிரிமினல் குற்றங்களாகக் கருதப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்ட அந்நியச் செலவாணி மோசடிகளுக்கு, ஃபெமாவில் வெறும் அபராதம் மட்டுமே என்று தண்டனை மாற்றப்பட்டது. அதாவது ஹவாலா உள்ளிட்ட மோசடிகள் இனி கிரிமினல் குற்றங்களல்ல என்று ஆக்கப்பட்டுவிட்டது.

ஜெயலலிதாவின் தோழி சசிகலா மீதும் தினகரன் மீதும் ஃபெராவின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்த போதிலும், இப்புதிய சட்டத்தினால் அபராதம் மட்டுமே கட்டச் சொல்லி 2008-இல் தீர்ப்பளிக்கப்பட்டது. இது நாம் அறிந்த ஒரு உதாரணம் மட்டுமே. கறுப்புப் பணத்தை வெளிநாட்டுக்குக் கடத்தும் எல்லா கிரிமினல்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்குவதே இந்த சட்டத் திருத்தத்தின் சாரம்.

### வரிச்சலுகைகள்:

தொழில் வளர்ச்சிக்கு அரசின் சலுகைகள் அவசியம் என்று நியாயவாதங்களை அடுக்கி, பல்வேறு நேர்முக வரித் தள்ளுபடிகள், தீர்வைத் தள்ளுபடிகள் மூலமாக கடந்த 15 ஆண்டுகளில் ஆண்டுக்கு 3 முதல் 5 இலட்சம் கோடி ரூபாய் வரை பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் இந்திய அரசு சட்டபூர்வமாகவே அள்ளிக் கொடுத்துள்ளது.




இவற்றின் விளைவாக, பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் வருவாயில் 2008-09-இல் ஏற்பட்டுள்ள இழப்பு ரூ.68,914 கோடிகள் என பட்ஜெட் மதிப்பீட்டிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. நேரடி வரிகளின் மீதான சலுகைகள் மூலம் 2007-08-இல் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.62,199 கோடி. தீர்வை வரிச் சலுகைகள் மூலம் இழப்பு ரூ.87,468 கோடி. சுங்கவரியின் மூலம் இழப்பு ரூ.1,53,593 கோடி. ஆகமொத்தம் ரூ. 3,03,260 கோடிகள். இதில் ஏற்றுமதி வரவைக் கழித்து விட்டால் கூட, இது 2 இலட்சம் கோடிகளைத் தாண்டுகிறது. இதுவே 2008-09-இல் 3 இலட்சம் கோடிகளைத் தாண்டுகிறது. இதுகூடக் குறைத்துக் காட்டப்பட்ட உத்தேச மதிப்பீடுதான். கடந்த 15 ஆண்டுகளில், சராசரியாக நாளொன்றுக்கு ரூ.700 கோடி வீதம் இம்முதலாளித் துவக் கும்பல்களுக்கு சட்டபூர்வமாகவே தீனிபோடப்பட்டுள்ளது.

### இது ஊழல் அல்ல, கொள்ளை!

மேற்சொன்ன வரிச்சலுகைகள் மற்றும் இதரச் சலுகைகள் காரணமாக இந்திய அரசுக்கு 2009-10 - இல் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு மட்டும் ரூ.4 இலட்சம் கோடிகளுக்கும் மேல். இது 2008-09ல் இந்திய அரசுக்கு வந்த வரி வருவாயில் 69% ஆகும். இந்தத் தொகை முழுவதும் முதலாளிகளுக்கு இலாபம்.

வரிவருவாய் இழப்பைக் காரணம் காட்டித்தான் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட மக்கள்நலச் செலவுகளை வெட்டுகிறது அரசு. இதன் விளைவாக, அவற்றிலும் புகுந்து கொள்ளையடிக்கிறார்கள் முதலாளிகள். இதுவும் முதலாளிகளுக்கு இலாபம். பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்டத்தான் பொதுச்சொத்துகளைத் தனியார்மயமாக்குவது அவசியம் என்கிறது அரசு. அடிமாட்டு விலைக்கு பொதுச்சொத்துகளை வாங்கும் முதலாளிகளுக்கு அதிலும் மீண்டும் இலாபம். ஆண்டொன்றுக்கு 3 ஸ்பெக்ட்ரம் ஊழல் அளவுக்கு முதலாளிகள் அடிக்கும் இந்தக் கொள்ளை, சட்டபூர்வமாகச் செய்யப்படுவதால், இது 'ஊழல்' என்ற கணக்கில் சேருவதில்லை.

• அழகு

## ராடியா விவகாரம்:

# "லாபியிங்" சட்டபூர்வமாகிறது! ஊழல் ஒழிகிறது!!

**ஊழலையும், இலஞ்சத்தையும் காட்டி அதிகாரத் தரகு வேலையைச் சட்டபூர்வமாக்க முயலுகிறது, மன்மோகன் அரசு.**

இந்திய அரசு நடுநிலையானதாகவும், சுயேச்சையானதாகவும், சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பாகவும் சித்தரிக்கப்படுகிறது. மேலும், அரசு செல்வாக்குமிக்க ஒரு பிரிவினரின் நலன்களைச் சார்ந்து இயங்குவதைத் தடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் - நீதிமன்றம் போன்றவை - கொண்ட அமைப்பென்றும் கூறிக் கொள்கிறார்கள் இந்தப் போலி ஜனநாயகத்தின் ஆதரவாளர்கள். வெளித்தோற்றத்திற்கு உண்மையைப் போலத் தெரியும் இந்த மோசடியை, அலைக்கற்றை ஊழலும், அதையொட்டி கசியவிடப்பட்டுள்ள நீரா ராடியா ஒலிநாடாக்களும் பாமரன்கூடப் புரிந்துகொள்ளும்படி அம்பலப்படுத்திவிட்டன. இந்திய அரசு, ஆளும் வர்க்கமான தரகு முதலாளிகள், பன்னாட்டு முதலாளிகளின் நலனுக்காக எப்படியெல்லாம் சேவை செய்கிறது என்பதை இவ்விவகாரம் காட்டிவிட்டது.

ஆனால், ஊடகங்களும், முதலாளித்துவ அறிஞர்களும் அம்பலமாகிவிட்ட இந்த உண்மையை மூடிமறைத்துவிட முயலுகிறார்கள். நீரா ராடியா என்ற தனியொரு பெண் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ஆட்டிப் படைத்து வந்ததைப் போலவும், அவரை மனோகரா என்ற பழைய தமிழ்த் திரைப்பட வில்லியான வசந்த சேனையைப் போலவும் வாசகர்களின் மூளையில் பதிய வைக்க ஊடகங்கள் முயலுகின்றன. நீரா ராடியா டாடாவின் வியாபார நலனுக்காகத்தான் தரகு வேலை செய்து வந்தார் என்பது அம்பலமான பின்னும், சோ ராமஸ்வாமி போன்றோர் டாடா போன்ற தொழில் அதிபர்களெல்லாம் நீரா ராடியாவிடம் அறியாமல் மாட்டிக் கொண்டு விட்டதைப்போலப் பேசி வருகிறார்கள்.

அதிகாரத் தரகு வேலை ஏதோ சமீப காலத்தில்தான் திடீரென முளைத்து நடந்து வருவதைப் போலவும், நீரா ராடியாவைப் போன்று -ற்றுக்கணக்கானோர் அதிகாரத் தரகு வேலை செய்து வருவது தமக்குத் தெரியாதது போலவும் ஊடகங்கள் பசப்புகின்றன

தொழில் ஆலோசனை நிறுவனங்கள், சட்ட ஆலோசனை நிறுவனங்கள், மக்கள் தொடர்பு நிறுவனங்கள், சுற்றுப்புறச் சூழல் மேலாண்மை நிறுவனங்கள் என்ற பெயர்களில் தலைநகர் டெல்லியில் மட்டும் 30-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அதிகாரத் தரகு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

நீரா ராடியா, ரத்தன் டாடா, அம்பானி போன்ற தனது வாடிக்கையாளர்களுக்குத் தரகு வேலை பார்ப்பதற்காக, தி.மு.க.வைச் சேர்ந்த ராசா, கனிமொழி, முதல்வர் மு.க.வின் மனைவி ராசாத்தி அம்மாள்; ஐக்கிய ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த என்.கே. சிங்; பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த முன்னாள் தலைவர்கள், முன்னாள் அரசு உயர் அதிகாரிகள்; கர்நாடகாவைச் சேர்ந்த பேஜாவர் சுவாமிகள்; பத்திரிகையாளர் வீர் சிங்வி, பர்கா தத் எனப் பல தரப்பினரோடும் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்திருக்கிறார். இதனை ஒரு உதாரணமாகக் கொண்டு பார்த்தால், இந்த அதிகாரத் தரகுத் தொழில் ஆலமரம் போல் கிளைகளையும் விழுதுகளையும் கொண்டு, ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து பரந்து விரிந்து கிடப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மைய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக நீரா ராடியாவின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டுப் பதிவு செய்து வந்தாலும், அவை அனைத்தும் வெளியே கசியவிடப்படவில்லை. தரகு முதலாளிகளுக்கு இடையே நடந்து வரும் கழுத்தறுப்புப் போட்டியின் விளைவாக, எதிராளியைப் போட்டுப் பார்த்து விட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, நீரா ராடியா - ராசா - கனிமொழி - டாடா இடையே நடந்துள்ள உரையாடல்களில் ஒரு பகுதி மட்டும் வெளியே கசியவிடப்பட்டிருக்கின்றன.

இதன் தொடர்விளைவாக, நீரா ராடியா - பா.ஜ.க. தொடர்பும் தற்பொழுது அம்பலமாகி வருகிறது. முகேஷ் அம்பானி, கிருஷ்ணா - கோதாவரி படுகையில் உள்ள தனது இயற்கை எரிவாயு நிறுவனத்திற்கு 2009-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் 91,000 கோடி ரூபாய் பெறுமான வரிச் சலுகைகளைப் பெறுவதற்கு நீரா




ராடியா மூலமும், ஐக்கிய ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் என்.கே.சிங் மூலமும் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார். நாடாளுமன்ற மேலவையில் பட்ஜெட் விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசவிருந்த பா.ஜ.க.வின் அருண் ஷோரி, இந்த வரிச் சலுகையை எதிர்க்கக்கூடும் என இவர்கள் சந்தேகித்தனர்.

எனவே, அனில் அம்பானியின் ஆளான அருண் ஷோரிக்குப் பதிலாக, பா.ஜ.க.வின் முன்னாள் தலைவர் வெங்கையா நாயுடுவை இந்த வரிச் சலுகைக்கு ஆதரவாகப் பேசி விவாதத்தைத் தொடங்கி வைக்கச் செய்வதில் நீரா ராடியாவும், என்.கே.சிங்கும் வெற்றிபெற்றனர். நாடாளுமன்ற மேலவையில் அருண் ஷோரிக்குப் பதிலாக பட்ஜெட் விவாதத்தைத் தொடங்கிவைத்துப் பேசிய வெங்கையா நாயுடு, ''நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு கருதி இந்த வரிச் சலுகையினை அளிக்கலாம்'' என நியாயப்படுத்தினார்.

அலைக்கற்றையை அடிமாட்டு விலைக்கு விற்று அரசுக்கு வருமான இழப்பை ஏற்படுத்தியது ஊழல் என்றால், பட்ஜெட் பற்றாக்குறை நிலவும் சமயத்தில் தனியொரு முதலாளிக்கு 91,000 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளிக்க பா.ஜ.க. சிபாரிசு செய்ததும் ஊழல்தான். இந்த விவகாரம் ஊடகங்களில் வெளியாகியிருந்தாலும், ஊழலாக அடையாளப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நீரா ராடியாவும், டாடாவும் ஆ.ராசாவைத் தொலைபேசித் துறை அமைச்சராக்க ''லாபி '' செய்தனர் என்றால், தற்பொழுதுள்ள மைய அமைச்சரவையில் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த கமல் நாத்தை நெடுஞ்சாலைப் போக்குவரத்து அமைச்சராக்கவும், ஆனந்த ஷர்மாவை வர்த்தகத் துறை அமைச்சராக்கவும் சி.ஐ.ஐ. என்ற தரகு முதலாளிகள் சங்கம் ''லாபி'' செய்திருக்கிறது.

சி.ஐ.ஐ. சங்கத்தின் முன்னாள் தலைவரான தருண் தாஸ், ''கமல் நாத் திறமையாகப் பணியாற்றக் கூடியவர்தான். ஆனால், நாட்டிற்குச் சேவை செய்வதன் ஊடாகவே, தனக்கு உரிய 15 சதவீத கமிஷனைக் கறந்துவிடக் கூடியவர்'' என கமல்நாத்தின் ஊழலைப் பற்றி பச்சையாகவே நீரா ராடியாவிடம் கூறியிருக்கிறார்.

விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் பிரஃபுல் படேல், ஜெட் ஏர்வேஸ் நிறுவன அதிபர் நரேஷ் கோயலுக்கும் கிங் ஃபிஷர் விமான நிறுவன அதிபர் விஜய் மல்லையாவுக்கும் நெருக்கமானவர் என்கிறது ராடியா டேப்பின் உரையாடல். பதிலுக்கு, நீரா ராடியாவைப் 'பொருளாதார பயங்கரவாதி' எனச் சாடுகிறார் பிரஃபுல் படேல்.

-இவையனைத்தும் அம்பலமாகியிருக்கும் ராடியா டேப்பில் பேசப்படும் விவரங்கள். மீதமுள்ள பதிவுகள் அனைத்தும் அம்பலமாகும் பட்சத்தில் இந்த அரசமைப்பின் அங்கங்கள் அனைத்தும் ஆளும் வர்க்கங்களுடன் எவ்வாறு பிணைக்கப்பட்டிருக்கின்றன என்பது இழை இழையாக வெளிவந்திருக்கக் கூடும்.

அமைச்சர்களின் நியமனம் மற்றும் அமைச்சரவையின் உருவாக்கத்தில் கார்ப்பரேட் முதலாளிகள் நேரடியாகத் தலையிடுவதை ராடியா டேப்புகள் அம்பலப்படுத்தியவுடன், பெரிதும் அதிர்ச்சியுற்றவர்களைப் போல நடிக்கின்றனர் ஆளும் வர்க்க அறிவுத்துறையினர். எம்.எல்.ஏ க்களை விலைக்கு வாங்கி அரசை அமைப்பதிலும் அரசைக் கவிழ்ப்பதிலும், அமைச்சரவை நியமனங்களிலும் ஆளும் வர்க்கம், சாராய மாஃபியா, சுரங்க மாஃபியா போன்ற பலவகையான மாஃபியாக்கள், முதலாளிகளின் சிண்டிகேட்டுகள் ஆகியவை ஆற்

றும் பாத்திரம் அம்பலமான எடுத்துக்காட்டுகள் பல இருக்கின்றன.

அவ்வளவு ஏன்? 1990-களில் நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகவே இல்லாத மன்மோகன் சிங்கை நிதியமைச்சராக்க வேண்டும் என அமெரிக்காவும் உலக வங்கியும்தான் ''லாபி'' செய்தன. இன்று பிரதமராகப் பதவி உயர்வு பெற்றுள்ள அந்தக் கனவான் ஒரு அமெரிக்கத் தரகர் என்பது கடந்த ஆண்டுகளில் பல வேறு சந்தர்ப்பங்களில் அம்பலமாகியிருக்கிறது.

**அரசின் உறுப்புகளைத் தத்தம் நலனுக்கு ஏற்ப வளைக்கவும், தமது காரியங்களை விரைந்து முடித்துக் கொள்ளும் பொருட்டு, அவற்றுக்கு 'எண்ணெய்' ஊற்றவும், ஊடகங்கள் மூலம் தமக்குச் சாதகமான பொதுக்கருத்தை உருவாக்கவும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அதிகாரத் தரகர்கள் தேவைப்படுகிறார்கள்.**

1980 - களுக்கு முன்பு, தனி நபர்கள் மூலம் நடந்து வந்த இந்தத் தரகுத் தொழில் இப்பொழுது நிறுவனமயமாக வளர்ந்திருக்கிறது. மேலும், தாராளமயத்திற்குப் பின் அமைச்சர்களும் அதிகாரிகளும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத் தரகு வேலை பார்ப்பதும் அதிகரித்து வருகிறது.

எடுத்துக்காட்டாகச் சொன்னால், போபால் விஷவாயுப் படுகொலை வழக்கில் தொடர்புடைய டௌ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் மீதான வழக்கைத் திரும்பப் பெற்றால், அந்நிறுவனம் இந்தியாவில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாக முன்னாள் வர்த்தகத் துறை அமைச்சர் கமல் நாத், முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், திட்டக் குழுத் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா ஆகியோர் தங்கள் பதவியைப் பயன்படுத்திக் கொண்டு ''லாபி'' செய்தனர்.

இந்தியாவில் அமெரிக்க முதலாளிகளுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொடுப்பதற்காகவே இந்திய அரசின் அங்கீகாரத்தோடு இந்திய - அமெரிக்கத் தொழில் அதிபர்கள் மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. அதுபோல் அமெரிக்காவில் இந்தியா தனக்குத் தேவையான காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்காக அதிகாரத் தரகு நிறுவனங்களை நியமித்துக் கொண்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் அதிகாரத் தரகு வேலைகளில் ஈடுபடுவது இருக்கட்டும். தொகுதி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி என்ற பெயரில் எம்.எல்.ஏக்கள் எம்.பிக்களும் அமைச்சர்களும் தொழிலதிபர்களின் தரகர்களாகத்தான் செயல்பட்டு வருகின்றனர். சர்வகட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தரகு முதலாளிகள் விலைக்கு வாங்கி வைத்திருப்பதும், அவர்கள் மூலம் தமக்குச் சாதகமான கொள்கை முடிவுகளை எடுக்க அரசைப் பயன்படுத்துவதும் இந்திய அரசியலில் புதிய விசயங்கள் அல்ல.

அரசின் உறுப்புகளைத் தத்தம் நலனுக்கு ஏற்ப வளைக்கவும், தமது காரியங்களை விரைந்து முடித்துக் கொள்ளும் பொருட்டு, அவற்றுக்கு 'எண்ணெய்' ஊற்றவும், ஊடகங்கள் மூலம் தமக்குச் சாதகமான பொதுக் கருத்தை உருவாக்கவும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அதிகாரத் தரகர்கள் தேவைப்படுகிறார்கள். தனியார் வங்கிகள் மிரட்டிக் கடன் வசூலிக்கும் வேலைக்கு வெளி நிறுவனங்களை அமர்த்திக் கொள்வதைப் போல சதிகளையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும் முடித்துத் தரும் பொறுப்பை கார்ப்பரேட் நிறுவனங்கள் அதிகாரத் தரகு நிறுவனங்களிடமே ஒப்படைக்கின்றன. பொதுநலனுக்காகப் போராடுபவர்களைப் போலக் காட்டிக் கொள்ளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் கூடத் தமது தரகு நிறுவனங்களாக கார்ப்பரேட் முதலாளிகள் தீனி போட்டு வளர்க்கிறார்கள் என்ற உண்மையும் ராடியா டேப்பில் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1980-களில் போஃபர்ஸ் ஊழல் அம்பலமான பொழுது, அரசாங்கம் நடத்தும் ஆயுதக் கொள்முதல்களில் இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும் என்ற கூச்சல் எழுப்பப்பட்டது. இராணுவ உயர் அதிகாரிகள் ஓய்வு பெற்றதும் இத்தகைய தரகு நிறுவனங்களை நடத்துவதும், உளவு வேலை பார்ப்பதும் அம்பலமான பிறகும் ஆயுதத் தரகு நிறுவனங்கள் கூட ஒழிக்கப்படவில்லை எனும்போது மற்ற தரகு நிறுவனங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இப்போது, இந்த கார்ப்பரேட் தரகு வேலையைச் சட்டபூர்வமாக்கும் வேலைகளில் அரசாங்கமே இறங்கியிருக்கிறது. குறிப்பாக, கம்பெனி விவகாரங்களுக்கான அமைச்சர் சல்மான் குர்ஷீத் தரகு முதலாளிகள் சமீபத்தில் நடத்திய ''கார்ப்பரேட் வீக்'' என்ற கூட்டத்தில், ''அதிகாரத் தரகு வேலைகளில் ஈடுபடுவதை ஜனநாயக அமைப்பின் அங்கமாகக் குறிப்பிட்டு''ப் பேசியிருக்கிறார். அதிகாரத் தரகு வேலையைச் சட்டபூர்வமாக்கிவிட்டால், இலஞ்சம் - ஊழல் போன்றவை பெருமளவு குறைந்துவிடும் என வாதிடுகிறார்கள் தனியார்மயத்தின் ஆதரவாளர்கள்.

மான்டேக் சிங் அலுவாலியா தலைமையில் இயங்கும் திட்ட கமிசன் அதிகாரத் தரகு வேலை வெளிப்படைத் தன்மையோடு இயங்குவதை உறுதி செய்வதற்காக, அதிகாரிகளையும், தொழில் அதிபர்களையும் கொண்ட குழுவொன்றை அமைத்துத் தொழில் அதிபர்கள் சங்கங்களிடம் கருத்துக் கணிப்பை நடத்தி வருகிறது. ராடியா டேப் இரகசியங்கள் வெளி வந்ததனால் நீரா ராடியாவுக்கு இனி வெளிப்படையாக இயங்குவதற்கான சுதந்திரம் கிடைத்திருக்கிறது.

● செல்வம்

# அயோத்தி தீர்ப்புக்கு எதிராக ...

## – புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம், ஆர்ப்பாட்டம், கருத்தரங்கம்.

அயோத்தி தீர்ப்பு வெளியானதும், அலகாபாத் நீதிமன்றத்தின் பார்ப்பனப் புரட்டைத் திரைகிழித்தும் இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகப் போராட அறைகூவியும் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரத்தை மேற்கொண்ட ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், தாங்கள் செயல்படும் பகுதிகளில் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. கடந்த 4.12.10 அன்று சிவகங்கை பேருந்து நிலையம் அருகே ஆர்.எம்.ஆர். திருமண மண்டபத்தில் ''அயோத்தி தீர்ப்பு முதல் இராமன் பாலம் வரை'' என்ற தலைப்பில் பார்ப்பன சதிகளை அம்பலப்படுத்தி ம.க.இ.க. சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் பார்ப்பனத் தீர்ப்பை எதிர்த்தும், இந்துவெறி பயங்கரவாதிகளால் இடிக்கப்பட்ட மசூதியை மீண்டும் அதே இடத்தில் கட்டித்தரக் கோரியும், இந்துத்துவத்துடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்துள்ள காங்கிரசைத் தோலுரித்தும், கள்ள மவுனம் சாதிக்கும் திராவிட ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தியும் பாபர் மசூதி இடிக்கப்பட்ட கருப்பு நாளான டிசம்பர் 6-ஆம் தேதியன்று தடையை மீறி விழுப்புரம், தஞ்சை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் இப்புரட்சிகர அமைப்புகள் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

''அயோத்தி தீர்ப்பு - இந்து மதவெறிக்கு சட்ட அங்கீகாரம்'' என்ற தலைப்பில் கடந்த 19.12.10 அன்று மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் திருச்சி கிளை சார்பில் தேவர் ஹாலில் அரங்கக் கூட்டம் நடைபெற்றது.

ம.உ.பா.மையத்தின் திருச்சி கிளைத் தலைவர் காவிரிநாடன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தான் கடவுள் நம்பிக்கையுள்ள பிராமணனாக இருந்த போதிலும் அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பு அயோக்கியத்தனமானது என்று கூறிய திருச்சி வழக்குரைஞர் சங்கத் தலைவரான திரு.வி.சீனிவாசனும், தில்லையிலும் திருவரங்கத்திலும் பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்தப் போராடிய இவர்களுக்குத்தான் இந்தச் சட்டவிரோதத் தீர்ப்பை எதிர்த்துப் போராடும் ஆற்றல்



விழுப்புரத்தில்...

உண்டு என்று கூறிய வழக்குரைஞர் சங்க முன்னாள் செயலாளர் கங்கைசெல்வனும், இத்தீர்ப்பை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் ம.உ.பா.மையத்தினரை வாழ்த்தினர்.

''நீதித்துறை பேசும் காவிமொழி'' என்ற தலைப்பில் பெங்களூரு உயர் நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் பாலனும், ''அயோத்தி தீர்ப்புக்கு எதிராகத் தீ பரவட்டும்'' என்ற தலைப்பில் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜுவும் சிறப்புரையாற்றினர். இறுதியில் பார்வையாளர்களின் கேள்விகளுக்கு ம.உ.பா.மையத்தின் மதுரைக் கிளை துணைச் செயலர் வாஞ்சிநாதன் விளக்கங்கள் அளித்தார். ஏறத்தாழ 500 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இக்கூட்டம் அலகாபாத் நீதிமன்றத்தின் பார்ப்பனப் புரட்டை அம்பலப்படுத்தி, இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகப் போராட அறைகூவுவதாக அமைந்தது.

-பு.ஜ. செய்தியாளர்கள்.

# காக்கை, குருவிகளா விவசாயிகள்?

## – மின்சார வாரியத்தின் அலட்சியப் போக்கை அம்பலப்படுத்தி வி.வி.மு. ஆர்ப்பாட்டம்.

ஓசூர் அருகிலுள்ள பாகலூரில், அண்மைக்காலமாக விவசாய நிலங்களில் மின்சாரக் கம்பிகள் அறுந்து தொங்கி, மின்சாரம் தாக்கிப் பல விவசாயிகள் படுகாயமடைந்துள்ளனர். இது பற்றிப் பலமுறை முறையிட்டும் மின்சார வாரியம் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருவதோடு, மீட்டர் பொருத்த இலஞ்சம் வாங்கி இழுத்தடிப்பது, டிரான்ஸ்பார்மர் பழுதடைந்தால் சீரமைக்காமல் புறக்கணிப்பது, மின்வாரிய ஊழியர்கள் அல்லாமல் புரோக்கர்களை வைத்துச் சீரமைப்பது முதலான முறைகேடுகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இதனால் பாகலூர், பெலத்தூர், அலசபள்ளி, கக்கனூர் முதலான பகுதிகளில் தொடர்ந்து மின்தடையும் பாதிப்புகளும் விபத்துகளும் நடக்கின்றன. இதைக் கண்டித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு விவசாயிகளிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி பாகலூர் மின்வாரிய அதிகாரிகளிடமும் போலீசு நிலையத்திலும் முறையிட்டது. ஆனால், மாதங்கள் பலவாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அதிகார வர்க்கம் தொடர்ந்து அலட்சியப்படுத்தியதால், இவ்வட்டார விவசாயிகளைத் திரட்டி விவசாயிகள் விடுதலை முன்னணியும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் இணைந்து 15.12.10 அன்று பாகலூரில் ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

மின்துறை தனியார்மயமாக்கப்பட்டு வருவதன் விளைவுதான் இந்த அலட்சியம் என்றும், இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பையும் விளக்கி முன்னணியாளர்கள் உரையாற்றினர். -ற்றுக்கணக்கான விவசாயிகள் திரண்டு போர்க்குணத்துடன் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, மின்வாரிய அதிகாரிகள் பாதிக்கப்பட்ட சில இடங்களில் பழுது பார்த்துச் சீரமைத்துள்ளனர்.

-பு.ஜ.செய்தியாளர், ஓசூர்.

# உச்ச நீதிமன்றம்:

# ஆளும் வர்க்கம் அணைத்துப் போட்ட பீடி!

**உச்ச நீதிமன்றம் கார்ப்பரேட் வெள்ளுடைக் குற்றவாளிகளைத் தண்டித்துவிடும் என நம்புவதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது.**

ஜனநாயகத்தைத் தாங்கி நிற்பதாகக் கூறப்படும் நான்கு தூண்களில் மூன்றை - நாடாளுமன்றம், அதிகார வர்க்கம், பத்திரிகை ஆகியவற்றை அலைக்கற்றை ஊழலும், வெளியே கசியவிடப்பட்டுள்ள நீரா ராடியா தொலைபேசி உரையாடல்களும் சந்தி சிரிக்க வைத்துவிட்ட நிலையில், இப்போலி ஜனநாயகத்தை ஊழலில் இருந்து காத்து ரக்ஷிக்கும் கடவுளர்களாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஊடகங்களால் முன்னிறுத்தப்படுகின்றனர். இவ்வூழலை விசாரிக்கும் சாக்கில் நீதிபதிகள் உதிர்த்து வரும் விமர்சனங்களைக் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டு, அதன் மூலம் நீதிமன்றம் பற்றிய பிரமையை மக்களின் மனதில் திணிக்கின்றன ஊடகங்கள்.

அலைக்கற்றை ஊழல் தொடர்பாக இன்றுவரை யார் மீதும் வழக்குகூடப் பதிவாகவில்லை. ஆனாலும் ஊடகங்கள், இவ்வூழல் தொடர்பாக உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் வாயிலிருந்து வெளியே வரும் ஒவ்வொரு வார்த்தையையும் இந்த ஊழலுக்கு எதிரான தீர்ப்புகளைப் போல உருவேற்றி வெளியிடுகின்றன. உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் பத்திரிகைகளுக்குத் தீனி போடும் விதத்தில், ''ராசா பிரதமரை மதிக்கவில்லை'' என்பது போன்ற இந்த விசாரணைக்குத் தொடர்பற்ற பல விமர்சனங்களைத் தமது மனம்போனபடிக் கொளுத்திப் போட்டு வருகின்றனர்.

அரசும் அதிகார வர்க்கமும் உச்ச நீதிமன்றத்தின் இந்த சவடால்களையெல்லாம் கேட்டு ஒன்றும் நடுநடுங்கிப் போய்விடவில்லை. வழக்கு விசாரணையின்பொழுது நீதிபதிகளிடமிருந்து பொங்கும் தார்மீக கோபத்திற்கும், இறுதியில் அவர்கள் வழங்கும் தீர்ப்புகளுக்கும் எந்தவொரு தொடர்பும் இருக்காதென்பது ஆளும் கட்சிக்கும் அதிகார வர்க்கத்திற்கும் நன்கு தெரியும். ஜார்கண்ட் முக்தி மோர்சா எம்.பி.-களை நரசிம்ம ராவ் விலைக்கு வாங்கிய வழக்கில், இலஞ்சத்திற்கு ஆதரவாகத் தீர்ப்புக் கொடுத்த உத்தமர்கள்தான் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் என்பது நமக்கும் தெரிந்த விசயம்தானே!

முன்சீப் கோர்ட் நீதிபதி தொடங்கி உச்ச நீதிமன்ற நீதிபதி உள்ளிட்டு அனைவரும் தத்தம் பதவி உயர்வு, இடமாற்றம் முதல் குறைந்த விலையில் வீட்டு மனைகள், ஓய்வு பெற்ற பிறகு ஏதேனுமொரு கமிசன் தலைவர் பதவி போன்ற சன்மானங்களை அரசிடமிருந்து பெறுவதற்குத்தான் காத்திருக்கிறார்கள். தமது பதவியைப் பயன்படுத்தி தாங்கள் அனுபவிக்கும் சுகங்கள் அனைத்திற்கும் - அலுவலக வேலையாகச் செல்லும் வெளியூர்ப் பயணம் முதல் குடும்பச் சுற்றுலா வரையில் தங்களைப் பேணுவதும் பராமரிப்பதும் இலஞ்ச - ஊழலில் ஊறித்திளைக்கும் போலீசும் வருவாய்த் துறையும்தான் என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல.

நீதிமன்றங்களும் நீதிபதிகளும் ஊழல் புரையோடிப் போன இந்த அரசின் ஓர் அங்கம்தான் என்பதுடன் நீதிபதிகள் அனைவரும் ஊழலோடு சமாதான சகவாழ்வு வாழ்பவர்கள்தான். அது மட்டுமல்ல, நீதிபதிகள் போக்குவரத்து போலீசின் தரத்துக்கு இறங்கி இலஞ்சம் வாங்கவும் தயங்காதவர்கள்.

அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதிகளுள் பெரும்பாலோர் பணம் வாங்கிக்கொண்டு தீர்ப்பு எழுதுகிறார்கள் எனச் சமீபத்தில் உச்ச நீதிமன்றமே ஒப்புக்கொண்ட செய்தியும்; இதற்கு முன்னர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிகளாக இருந்த 16 நீதிபதிகளுள் 8 நீதிபதிகள் நிச்சயமாக ஊழல் பேர்வழிகள் என முன்னாள் சட்ட அமைச்சர் சாந்தி பூஷண் பல்வேறு ஆதாரங்களோடு உச்ச நீதிமன்றத்திடமே மனு அளித்திருப்பதும் நீதித்துறையின் யோக்கியதையை அம்பலப்படுத்துகின்றன.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்திய சாந்தி பூஷணின் மகனும் வழக்குரைஞருமான பிரசாந்த் பூஷண் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உச்ச நீதிமன்றம் நடத்தி வருகிறது. இவ்வழக்கு விசாரணையின்பொழுது சாந்தி பூஷண், ''தனது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருப்பதாகவும், தன் மனு மீதான விசாரணையை நீதிமன்றம் நடத்த வேண்டும்'' எனக் கூறிய பின்னரும், ''மன்னிப்புக் கோருங்கள், வழக்கை முடித்துக் கொள்வோம்'' என்று மன்றாடுகிறார்கள் நீதிபதிகள். மன்னிப்பு கேட்க சாந்தி பூஷண்

தயாராக இல்லாததால், அவர் மனு மீதான விசாரணையையே கிடப்பில் போட்டுள்ளனர்.

மைய ஊழல் கண்காணிப்பு ஆணையர் தாமஸ் கேரள மாநிலத்தில் பணியாற்றிய போது அவர் மீது பாமாயில் இறக்குமதி ஊழல் குறித்த வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருப்பது தெரிந்ததும், அவரை அந்தப் பதவியில் நியமித்தது எப்படி என்ற கேள்வியை எழுப்பிய உச்சநீதிமன்ற நீதிபதிகள், '' இத்தகைய பதவிகளில் நியமிக்கப்படுபவர்கள் அப்பழுக்கற்ற நடத்தை உள்ளவர்களாக இருக்கவேண்டாமா?'' என்று கேள்வி எழுப்பினர்.

''அப்பழுக்கற்றவர்களை மட்டும்தான் நியமிக்கமுடியும் என்பதை ஒரு விதியாகக் கொண்டால், பல நீதிபதிகளின் நியமனங்களே கேள்விக்குள்ளாகிவிடும்'' என்று நீதிபதிகளின் கேள்விக்கு மைய அரசின் அட்டார்னி ஜெனரல் வாகன்வதி பதில் அளித்தார். கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிவது தங்களுக்கே ஆபத்தாக முடிந்து விடும் என்பதால், அட்டார்னி ஜெனரலின் அவமதிப்பை மவுனமாக சகித்துக் கொண்டார்கள் மாட்சிமை தங்கிய நீதிபதிகள்.



இது தான் நீதிபதிகளின் யோக்கியதை. ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிக் கொண்டால் கூடத் தங்களைப் பதவி நீக்கம் செய்யவோ, தண்டிக்கவோ முடியாத அளவுக்கு சட்டப் பாதுகாப்பைப் பெற்றிருப்பவர்களும், தமது சொத்துக் கணக்கைக்கூடப் பொது மக்களின் பார்வைக்குத் தர முடியாது எனத் திமிரோடு அறிவிக்கின்றவர்களுமான உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஊழலைப் பற்றி உபதேசம் செய்யும் தகுதி அறவே கிடையாது.

நீதித்துறையில் நிறைந்திருக்கும் ஊழலைக் காட்டிலும் கொடியது அவர்களது வெறி கொண்ட ஆளும் வர்க்கக் கண்ணோட்டமே ஆகும். யூனியன் கார்பைடு, என்ரான், போஸ்கோ, வேதாந்தா, கோக் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவாகவும், பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்குத் தனியார் முதலாளிகளுக்கு விற்பதற்கு ஆதரவாகவும் உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் கடந்த இருபதாண்டுகளில் அளித்திருக்கும் எண்ணற்ற தீர்ப்புகளை அலசிப் பாருங்கள். அவர்கள் அனைவரும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் பங்காளிகள் என்பது பளிச்சென தெரியவரும்.

''தனியார்மயக் கொள்கையில் தலையிட மாட்டோம்'' என வெளிப்படையாகவே அறிவித்து, பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்குத் துணை நின்று வரும் உச்ச நீதிமன்றம், அலைக்கற்றை ஊழலில் குற்றவாளிகளைத் தண்டித்துவிடும் என நம்புவதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது.

அலைக்கற்றை ஊழலை விசாரிப்பதாக பாவ்லா காட்டிக் கொண்டிருந்த சி.பி.ஐ.-யிடம்தான் மீண்டும் விசாரணை செய்யும் பொறுப்பை உச்ச நீதிமன்றம் ஒப்படைத்திருக்கிறது. ஆனால் முன்பு போலின்றி, தற்பொழுது உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் சி.பி.ஐ.-யின் விசாரணை நடைபெறுவது குறித்து ஊடகங்கள் பெரிதும் நம்பிக்கையூட்டி எழுதுகின்றன. சி.பி.ஐ யின் யோக்கியதையோ பல்வேறு வழக்குகளில் அம்பலமானதுதான். சி.பி.ஐ யின் விசாரணையும்கூட, எய்தவர்களான கார்ப்பரேட் நிறுவனங்களை விட்டுவிட்டு, வெறும் அம்புகளை மட்டும்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது.

அரசால் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்ட நீரா ராடியாவின் தொலைபேசி உரையாடல்கள் பொது அரங்கில் வெளியிடப்பட்டிருப்பதையொட்டி அரசை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்திருக்கிறார் டாடா. அந்த உரையாடல்களை வெளியிட்ட ஓபன், அவுட்லுக் பத்திரிகைகளை எதிர் மனுதாரர்களாகச் சேர்க்க விரும்பவில்லை என்று டாடாவின் வழக்குரைஞர் கூறிய போதிலும், ''இந்த வழக்கை முழுமையாக நாங்கள் விசாரிக்க விரும்புகிறோம்'' என்று கூறி அந்தப் பத்திரிகைகளையும் எதிர் மனுதாரர்களாகச் சேர்த்திருக்கின்றனர் உச்ச நீதிமன்ற நீதிபதிகள்.

**தனியார்மயக் கொள்கையில் தலையிட மாட்டோம் என வெளிப்படையாகவே அறிவித்து, பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்குத் துணை நின்று வரும் உச்ச நீதிமன்றம், அலைக்கற்றை ஊழலில் குற்றவாளிகளைத் தண்டித்துவிடும் என நம்புவதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது.**

அலைக்கற்றை ஊழல் வழக்கை 'முழுமையாக' விசாரித்து நீதி வழங்க வேண்டுமென்றால் ராடியாவையும், ராசாவையும், பெய்ஜாலையும் மட்டும் விசாரிப்பது போதுமானதல்ல; மன்மோகன் சிங் முதல் டாடா, அம்பானி வரையிலான அனைவரையும்தான் விசாரிக்க வேண்டும். விசாரணையை கண்காணித்து வரும் உச்ச நீதிமன்றம் அப்படியொரு உத்தரவை சி.பி.ஐ.- க்குப் பிறப்பிக்கப் போவதில்லை. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இவ்வழக்கு குறித்து அவ்வப்போது உதிர்த்து வரும் வீர வசனங்களுக்கும் தமிழ்ப் படக் கதாநாயகர்கள் பேசும் ''பஞ்ச் டயலாக்''கிற்கு மேற்பட்ட முக்கியத்துவத்தை அளிக்கத் தேவையில்லை.

● ரஹீம்

# கார்ப்பரேட் கொள்ளை – ஊழல்

## மறைந்துள்ள உண்மைகள்!

**எங்கும் எதிலும் ஊழலும் கொள்ளையும் நீக்கமற நிறைந்திருப்பதை மூடிமறைத்து, தற்போதைய அரசியலமைப்பு முறை மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த அரசும் முதலாளிகளும் முயற்சிக்கின்றனர்.**

''இன்று எங்கும் எதிலும் இலஞ்ச-ஊழல் நிரம்பியுள்ளது. அது அரசியல் அல்லது அதிகார வர்க்க வரம்போடு நின்று விடவில்லை. இலஞ்ச-ஊழலுக்கு அப்பாற்பட்டதென்று ஒரே ஒரு நிறுவனத்தைக் கூட என்னால் சொல்ல முடியாது. சில சமீபகாலச் செய்திகளைப் பார்க்கும்போது செய்தி ஊடகமும் கூட இலஞ்ச-ஊழல் சாக்கடையில் இருந்து விடுபட்டதாக இல்லை. எனக்கு எதிராக உட்கார்ந்திருக்கும் செய்தி ஊடகத் துறையைச் சேர்ந்த உங்களில் யாரும், முன்வினைப் பயன் காரணமாக, இலஞ்ச-ஊழலை விசாரிக்கும் லோகாயுத அமைப்பின் விசாரணை வரம்புக்குள் வராததால் தப்பிவிட்டீர்கள்'' என்று செய்தி ஊடகத்தாரின் முகத்துக்கு நேராகக் காறி உமிழ்ந்தார், கர்நாடகா லோகயுதா தலைவர் சந்தோஷ் ஹெக்டே.

அதிகார நாயகர்களுடன் நெருக்கமான உறவைப் பயன்படுத்தி, வழிமுறைகளுக்கு மாறாகச் சலுகைகள் பெறுவது, கார்ப்பரேட் தரகர்கள் - செய்தி ஊடகத்தார் இரகசிய உறவு, கார்ப்போரேட் சம்பளப் பட்டியலில் அவர்கள் இருப்பது மற்றும் பணத்துக்குச் செய்தி ஆகியவை பற்றி ஏராளமான புகார்கள் அம்பலமாகி வருகின்றன. உள்ளூர் செய்தியாளர்கள் முதல் தலைமை ஆசிரியர்கள் வரை கையூட்டு வாங்கிக் கொண்டுதான் செய்தி போடுகிறார்கள். செய்தி ஊடகம் என்பது நடுநிலையானதோ, மக்களுக்கு உண்மைச் செய்திகளைக் கொடுக்கும் சமூக சேவை அமைப்போ அல்ல. கார்ப்பரேட் மற்றும் அரசு விளம்பரங்களையே முக்கிய வருவாயாகக் கொண்டு நடத்தப்படும் செய்தி ஊடகமே ஒருசில ஏகபோக கார்ப்பரேட் கம்பெனிகளுக்கும் அரசுக்கும் சொந்தமாக உள்ளது. ஆகவே, அரசியல் கட்சிகளும் அரசும் மட்டுமல்ல, கார்ப்பரேட் முதலாளிகளும் முக்கியமாகத் தமக்குச் சாதகமான வகையில் செய்தி ஊடகம் மூலம் உண்மைகளைத் திரித்தும் புரட்டியும் முன்னுரிமைகளை மாற்றியும் மூடிமறைத்தும் கண் பட்டை கட்டப்பட்ட குதிரையைப் போல சமூகத்தை வழிநடத்துகின்றனர்.

கடந்த ஆண்டு நவம்பரில் மட்டும் பல்வேறு இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், மோசடி விவகாரங்கள் வெளிவந்திருக்கின்றன. இந்த விவகாரங்களில் எல்லாம் முழுமையான உண்மைகளை முன்வைப்பதற்குப் பதில், செய்தி ஊடகமும், அரசியல் கட்சிகளும், அரசும், கார்ப்பரேட் முதலாளிகளும் ஒரு தந்திரத்தை மேற்கொள்கிறார்கள். ''மரத்தைப் பார்த்துவிட்டு தோப்பைக் கவனிக்கத் தவறுவது'' பார்வைக் கோளாறை ஏற்படுத்தும். நாட்டு மக்களிடையே அத்தகையதொரு பார்வைக் கோளாறை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிந்தே திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்.

நாளும் வெளிவரும் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், மோசடிகளை முழுமையாகவும் தொகுப்பாகவும் பார்க்கும்போது, அவற்றின் ஆழத்திலும் அளவிலும் பரப்பிலும் பார்க்கும்போது நாட்டின் ஒட்டுமொத்த அரசி

11,000 கோடி ரூபாய் பெறுமான வீடு-வீட்டுமனை ஊழலைச் செய்து சிக்கிக் கொண்ட பொதுத்துறை வங்கி அதிகாரிகள்.





கேரளாவின் பிளாச்சிமடா கிராமத்தைப் பாலைவனமாக்கிய கோகோ-கோலாவின் ஆலையை மூடக்கோரி அக்கிராம மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

யல், பொருளாதார அமைப்பே மீளமுடியாத நெருக்கடியில் சிக்கியுள்ளது என்ற முடிவுக்குத்தான் யாரும் வர முடியும். ஆனால், ஒவ்வொரு விவகாரம் வெளிவரும் போதும், அது ஏதோ தனிப்பட்ட, தற்செயலாக நேரும் விவகாரம், பொதுத் தன்மையாகவோ பொதுவிதியாகவோ மாறிவிடவில்லை என்கிற கருத்து பரப்பப்பட்டு நியாயப்படுத்தப்படுகிறது; அல்லது அது அந்தத் துறைசார்ந்த விவகாரமாகச் சுருக்கி அமுக்கப்படுகிறது; அல்லது சமூகத்தில், மக்களிடையே நிலவும் போக்கைத் தான் அந்த விவகாரம் பிரதிபலிக்கிறது என்று குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மீதே பழி சுமத்தப்படுகிறது.

இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், மோசடிகள் என்பது எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்துவிட்டதை மூடிமறைத்து, விதிவிலக்கான தனியொரு விவகாரமாகச் சித்தரித்து, தற்போதைய அரசியல் - பொருளாதார மற்றும் நீதி-நிர்வாக அமைப்பின் மீது நம்பிக்கை இழந்துவிட்ட மக்களிடம் அவற்றின் மீதே மீண்டும் நம்பிக்கை ஏற்படுத்தும் முயற்சியாக, ''தோப்பைப் பார்க்காதீர்கள்; மரத்தை மட்டும் கவனியுங்கள்'' என்று காட்டப்படுகிறது.

புற்றீசலாக வெளிவரும் பல இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், மோசடி விவகாரங்களில் ஒன்றுதான் 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரம். மற்ற விவகாரங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தின் மீது மட்டும்தான் கவனம் குவிக்கப்படுகிறது. அதிலும் கூட, இந்த ஒதுக்கீடு மோசடியால் பல ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளையிட்ட கார்ப்பரேட் முதலாளிகள் பற்றிய விசயங்கள் புறந்தள்ளப்பட்டு, ராஜாவும் ராடியாவும் மட்டும்தான் எல்லா வற்றுக்கும் காரணமான குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பற்றிக்கூட நாலாந்தர மஞ்சள் பத்திரிக்கைகள் தரத்துக்கு வதந்திகள், கிசுகிசுக்கள், பரபரப்பும், கிளுகிளுப்பும் ஊட்டும் வகையில் மக்களிடையே பரப்பப்படுகிறது.

கருணாநிதியின் குடும்ப ஆதிக்க அரசியலுக்கு எதிராக சுப்பிரமணிய சாமி, ஜெயலலிதா, தா.பாண்டியன், துக்ளக் ''சோ'' போன்றவர்களின் கூட்டணி நடத்தும் தேர்தல் அரசியல் பிரச்சாரத்தின் முக்கிய உள்ளடக்கமாக 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல்-மோசடி விவகாரம் முன்னிறுத்தப்படுகிறது. இதைத் தாண்டி ஒரு முழுமையான பார்வையை மக்கள் பெற்றாக வேண்டியிருக்கிறது.

இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்துள்ள ஊழல்- மோசடி நாடு இதுவரை காணாத அளவு பெரியது, பிரம்மாண்டமானது; இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடு ரூ.1.76 லட்சம் கோடி அளவிலானது என்பதனால் முக்கியத்துவமளிக்கப்படுகிறது என்று கூறி செய்தி ஊடகம் பிரமிக்க வைக்கிறது. அடுத்து வெளிவந்த ஊழல்-மோசடி உத்திரப்பிரதேசத்தில் மட்டும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ், ஏழைக்கும் ஏழைகளான மக்களுக்கு வழங்க வேண்டிய 2 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புடைய உணவுப் பொருட்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தி விற்கப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தில் மட்டும் இந்த அளவு கடத்தல் - ஊழல் - மோசடி நடந்திருக்கிறது என்றால் நாடு முழுவதும் எத்தனை இலட்சம் கோடி ரூபாய் மதிப்புடையவை நடந்திருக்கும். இது குறித்து இன்னமும் முழுமையான விசாரணையும் விவாதமும் தணிக்கை அறிக்கையும் வெளிவரவில்லை.

இதைத் தொடர்ந்து, பிரபலமான வீடு-வீட்டு மனை கார்ப்பரேட் கம்பெனிகள் போலி ஆவணங்கள் தயாரித்து, கையூட்டுக் கொடுத்து ஆயுள் காப்பீடுக் கழகம் மற்றும் பொதுத்துறை வங்கிகளிடமிருந்து கோடிகோடியாகக் கடன் வாங்கி, பங்குச் சந்தையில் போட்டுச் சூதாடியிருப்பதும் வெளிவந்துள்ளது. பல உயரதிகாரிகள் கையும் களவுமாகப் பிடிபட்டுக் கைதாகியுள்ள இந்த

**தாராளமயம் வந்ததும், கொள்கை உருவாக்கும் இடத்திலேயே ஊழல் நுழைந்து விட்டது. ஊழலோடு ஒட்டிக் கொண்டிருந்த திரைமறைவு பேரம் மற்றும் அவமானம் ஆகிய தன்மைகள் மறைந்து விட்டன. உண்மையில் ஊழல் சட்டபூர்வமாக்கப்படுவது ஒன்றுதான் பாக்கி.**

விவகாரத்தில் இலஞ்ச-ஊழல், மோசடியின் அளவும் பிரம்மாண்டமும் இன்னமும் வெளிவரவில்லை.

சமீபத்திய இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், மோசடிகள் மிகப் பிரம்மாண்டமாய் அளவிலும் தன்மையிலும் உயர்ந்திருப்பதற்கான காரணத்தையும் குற்றவாளிகளையும் வேறெங்கும் தேடத் தேவையில்லை. இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீடு மோசடியில் அரசுக்கு 1.76 கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்கிறபோது, அந்தத் தொகை முழுவதையும் ராஜா-ராடியா சுருட்டிக் கொண்டார்கள் என்று யாரும் சொல்லவில்லை. 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு பெற்ற கார்ப்பரேட் கம்பெனிகள் தான் ஆதாயம் அடைந்தார்கள்; அந்தக் கம்பெனிகள் குறைந்த தொகை செலுத்தி ஒதுக்கீடுகள் பெற்று, அவற்றைக் கூடுதலான தொகைக்கு விற்று ஆதாயம் அடைந்தார்கள். அது எவ்வளவு கோடிகள் என்று யாரும் கணக்கிட்டுச் சொல்லவில்லை. 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டை ஏலத்தில் விட்டிருந்தால் எவ்வளவு கிடைத்திருக்கும் என்று மதிப்பிட்டு, அவ்வாறு செய்யாமல் முதலில் வந்தவருக்கு முதலில் ஒதுக்கீடு என்றும், அதிலும் பல மோசடிகள் செய்ததாலும் ரூ.1.76 லட்சம் கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டது என்றுதான் பொதுத் தணிக்கைக் குழு கணக்கிட்டு ராஜா மற்றும் அவரது அதிகாரிகள், பினாமிகள் மீது குற்றஞ் சாட்டுகிறது.

ஆனால், ராஜா மூலம் முறைகேடாகவும், மோசடி செய்தும் ஒதுக்கீடு பெற்று நேரடி ஆதாயம் அடைந்தது தனியார் கார்ப்பரேட் முதலாளிகள்தாம். (இவ்வாறுதான் டாடாகள், மிட்டல்கள், அம்பானிகள் செல்வம் குவித்து உலகப் பணக்காரர்கள் வரிசையில் இடம் பிடிக்கிறார்கள்) இப்படி அவர்கள் ஆதாயம் அடைவதற்காக ஒரு பெருந்தொகையை ராடியாவுக்கு ஊதியமாகவும், அதைவிடப் பெருந்தொகையை ராஜாவுக்கும் அவரது அதிகாரிகளுக்கும் இலஞ்சமாகக் கொடுத்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ராஜாவும், ராடியாவும் பெற்ற தொகை எவ்வளவு, அதை அவர்கள் எங்கே பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதற்குத்தான் சி.பி.ஐ. விசாரணையும் ''அதிரடி'' சோதனை அல்லது சோதனை நாடகமும் நடக்கிறது.

இப்படியான இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மோசடிகள், 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் மட்டுமல்ல, பொதுத்துறை எனப்படும் அரசுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பது, அரசுக்கும் நாட்டுக்கும், மக்களுக்கும் சொந்தமான நீர், நிலம், காடுகள், மலைகள் அவற்றில் புதைந்திருக்கும் கனிம வளங்கள், நாட்டின் அடிப்படைக் கட்டுமானப் பணிகள், மக்களின் உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் அணு சக்தி மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகள் அமைப்பது முதலிய பலவற்றிலும் கார்ப்பரேட் முதலாளிகள் இவ்வாறுதான் ஆதாயம் அடைகிறார்கள்.

● ஒரு லிட்டர் 15 ரூபாய் வரை விற்கப்படும் குடிதண்ணீர் 11 பைசாவுக்கு அந்நிய ஏகபோக கம்பெனிகளான கோகோகோலா, பெப்சிக்கு ''ஒதுக்கீடு'' செய்யப்பட்டுள்ளது.

● ஒரு டன் இரும்புக் கனிமம் 26 ரூபாய் என்ற விலையில் பல கோடி டன்கள் அளவுக்குப் புதைந்துள்ள மலைகள் அந்தத் தொழிலுக்கே சம்பந்தம் இல்லாத பல தனியார் முதலாளிகளுக்கு கர்நாடகா, ஆந்திராவில் ''ஒதுக்கீடு'' செய்யப்பட்டது. அவற்றை அவர்கள் கர்நாடகா ரெட்டி சகோதரர்களுக்கு விற்று ஆதாயம் அடைந்தார்கள். (ரெட்டி சகோதரர்கள் கிரிமினல் ரௌடித்தனம் செய்து அடாவடியாகக் கைப்பற்றிக் கொண்ட சுரங்கங்களும் உண்டு) ரெட்டி சகோதரர்களோ ஒரு டன் இரும்புக் கனிமத்தை 7000 ரூபாய்க்கு ஏற்றுமதி செய்து ஆதாயம் அடைந்தார்கள்.

● ரெட்டி சகோதரர்களுக்கு மட்டுமல்ல, டாடா, மிட்டல், எஸ்.ஆர். வேதாந்தா, போஸ்கோ போன்ற உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளித்துவக் கம்பெனிகளுடன் இரும்பு, அலுமினியம் பாக்சைடு, செம்பு முதலிய கனிமத் தாதுக்களை மிகவும் அற்பமான குத்தகை விலைக்குத் தோண்டி எடுத்துக் கொள்ளும் இரகசியப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஒப்பந்தப்படியான எல்லைக்குள் மட்டுமின்றி, சுற்றியுள்ள பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துச் சுரங்கங்கள் தோண்டி, கனிமப் பொருட்களை எடுத்து அந்தக் கார்ப்பரேட் கம்பெனிகள் கொள்ளையிட்டு வருகின்றன. இந்தக் கொள்ளைக்குப் பாதுகாப்பாக துணை இராணுவத்தையே ஏவி உள்நாட்டுப் போரை நடத்துவதோடு, நாட்டின் இயற்கை வளங்களும் சுற்றுச் சூழலும் நாசமாக்கப்படுவதை வேடிக்கை பார்க்கிறது, அரசு.

● அம்பானியின் ரிலையன்சு நிறுவனம் அரபிக் கடலிலும், கோதாவரிப் படுகையிலும், ஆழ்துளைக் கிணறுகள்

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் புனே நகருக்கு அருகே லாவாஸா நிறுவனம் அமைத்து வரும் தனியார் நகரம். மேட்டுக்குடி கும்பலின் ஆடம்பர வாழ்விற்காக மலைசார்ந்த வனப்பகுதி சூறையாடப்படும் கொடுமை!



தோண்டி, பலகோடி டன்கள் பெட்ரோலிய எண்ணெய், எரிவாயு உறிஞ்சிக் கொள்ள அவ்வயல்கள் சில ஆயிரம் கோடி ரூபாய்க்கு, குத்தகைக்கு விட்டிருக்கின்றன, காங்கிரசு, பா.ஜ.க. அரசுகள். இது போதாதென்று, கொள்ளை இலாபம் அடிக்க பெட்ரோலியப் பொருட்களின் விலை பலமுறை ஏற்றிக் கொடுக்கப்படுகிறது. இதுவும் போதாதென்று, கோதாவரிப் படுகையில் எடுக்கப்பட்ட எரிவாயுக்கு 91,000 கோடி ரூபாய் வரிவிலக்குக் கொடுப்பதற்கு ஆளும் கட்சிகளும் எதிர்க் கட்சிகளும் கைகோர்த்துக் கொண்டன. இதுவும் ராடியா டேப்பில் உள்ளது, ஆனால், இதுபற்றி அந்தக் கட்சிகளும் செய்தி ஊடகமும் வாய் பொத்திக் கிடக்கின்றன.




மகாராஷ்ட்ரா மாநிலத்தில் ஜெய்தாப்பூர் பகுதியில் பிரான்சு ஏகாதிபத்தியத்தின் கூட்டோடு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனுமின் உலையை எதிர்த்து நடக்கும் ஊர்வலம்.

● வேதாந்தா கார்ப்பரேட் கம்பெனி ஒரிசாவில் வேதாந்தா பல்கலைக்கழகம் அமைத்துக் கொள்வதற்கு, 18 கிராமங்களின் எதிர்ப்பையும் மீறி 8000 ஏக்கர் நிலத்தைத் தாரை வார்த்தது, ஒரிசா அரசு. விவசாயிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி விவசாய விளைநிலங்களைக் கட்டாயமாகக் கையகப்படுத்தி கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்கின்றன, மாநில அரசுகள்.விவசாயிகளை வெளியேற்றி, 500-க்கும் மேற்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காக ஒவ்வொன்றிலும் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன.

— இவை எதுவும் திறந்த சந்தையிலோ, ஏலத்திலோ நடக்கவில்லை. இவை பற்றிய விவரங்கள், இரகசியங்கள் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டாலும் மறுக்கப்படுகின்றன. இவற்றுக்குச் சந்தை அல்லது ஏல மதிப்பீடு செய்து கணக்கீடு போட்டு இவற்றால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அல்லது கார்ப்பரேட் கம்பெனிகள் அடித்த கொள்ளை எத்தனை கோடி என்று எந்தத் தணிக்கை அறிக்கையுமில்லை; எந்தப் புலன் விசாரணையும் இல்லை, எந்த உச்சநீதி மன்றமும் சவடால் சாட்டையடியோடு மேற்பார்வை விசாரணையும், தண்டனையும் விதிக்கவில்லை. இந்த விவகாரங்களில் நடந்த இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், மோசடிகள் பற்றி சு.சாமியும், ரா.சாமியும், ஆ.சாமியும் பொது நலக் கூச்சலும் போடவில்லை.

ராசாவோ, ராடியாவோகூட அரசு சட்டநியதிப்படியும், அது அறிவித்துப் பின்பற்றி வரும் கொள்கைப்படியும், தர்க்க நியாயப்படியும் தண்டிக்கப்பட முடியாது. தனக்கு முன்பிருந்த தொலைத்தொடர்புத் துறை அமைச்சர்கள் பின்பற்றிய அடிப்படையில்தான், தான் செயல்பட்டதாக ராசா கூறிய விளக்கத்துக்கு இப்போது ஊழல் ஒழிப்பு நாடக நாயகர்கள் எவரும் பதில் சொல்லவில்லை; அதையும் மீறி வேண்டுமென்றே ''அரசியல் பழிவாங்கலுக்குத்தான்'' தண்டிக்க முடியும்.

அரசுக் கிட்டங்கிகளில் அழுகிப் புழுத்து நாறும் உணவு தானியங்களை ஏழை மக்களுக்கு விநியோகிக்கும்படி உச்சநீதி மன்றம் சொன்னபோது, அரசின் கொள்கைகளில் தலையிட வேண்டாமென்று பதிலடி கொடுத்தார், மன்மோகன் சிங். வாய்மூடிக் கொண்டார்கள், உச்ச நீதி மன்றப் பிரபுக்கள். அதையே ராசா சொன்னால் ஏற்க மறுக்கிறார்கள். உணவு தானிய ஏகபோக மொத்த வியாபாரிகளின் ஏற்றுமதி - இறக்குமதிக்கும், ஏகாதிபத்தியக் கொள்ளைக்கும் ஊக வணிகத்துக்கும் வசதியாகத்தான் அரசின் கொள்கை அப்படி இருக்கிறது. உணவு தானியம் அழுகி நாசமானால் பல ஆயிரம் கோடி அரசுக்கு இழப்பு இல்லையா?

ஆனால், இப்போது, ஒன்று அல்லது இரண்டு இலட்சம் கோடிகள் மட்டுமல்ல; எவ்வளவு இலட்சம் கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு நேரிட்டாலும் உள்நாட்டு, வெளிநாட்டுத் தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அள்ளிக் கொடுப்பதுதான் அரசின் கொள்கையாக உள்ளது. இதுதான் புதிய பொருளாதார, தனியார்மய, தாராளமயக் கொள்கை. இந்த நிறுவனங்கள் திவாலாகி மூடப்படும் நிலையில், மேலும் பல இலட்சம் கோடி அரசுப் பணம் கொடுத்து, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க வேண்டும்; நமது நாட்டில் மட்டுமல்ல, டாலருடன் நமது பொருளாதாரம் பிணைக்கப்பட்டுள்ளதால், அமெரிக்காவில் நெருக்கடி ஏற்பட்டு, நிறுவனங்கள் திவாலானால் கூட நமது நாடும் பல லட்சம் கோடி கொடுத்து மீட்கவேண்டும். இதுதான் சிதம்பரம் - அலுவாலியா - மன்மோகன் மட்டுமல்ல, அத்வானி - ஜெட்லி - ஜஸ்வந்த் சிங்கின் பொருளாதாரக் கொள்கை.

''இலஞ்ச-ஊழல் தொடர்ந்து பெருகி, பிரம்மாண்டமாவதற்கு அடிப்படைக் காரணம் தாராளமயப் பொருளாதாரத்துக்குப் பிந்தைய காலத்தில் சந்தை (முதலாளிகள்) அரசாங்கத்துக்குள் நுழைந்துவிட்டது. அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் கொள்கைகளையும் விலையையும் கார்ப்பரேட் குடும்பங்கள் தீர்மானிக்கத் தொடங்கிவிட்டார்கள். தனிப்பட்ட அதிகாரிகள்

அல்லது அரசியல்வாதிகள் மட்டுமல்ல; அரசியல் கட்சிகள் மற்றும் கட்டமைப்பு முழுவதிலுமாக அவர்கள் கூட்டுறவாடுவதும் தலையீடு செய்வதுமாகி விட்டார்கள். பொருளாதாரத் தாராளமயமாக்கம்தான் ஊழல்மயமான லைசென்சு மற்றும் பர்மிட் ராஜ்ஜியத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் என்று கார்ப்பரேட் குடும்பங்களும் பெரும் செய்தி ஊடகமும் போற்றின. ஆனால், அது இலஞ்ச-ஊழலின் பாதையை மாற்றி விட்டதோடு, அளவிலும் வீச்சிலும்கூட மேலே எகிறிவிட்டது. முன்பு ஊழல் பேரங்கள் மேசைக்கு அடியில் நடந்தன. அவற்றோடு அவமானம் ஒட்டிக் கொண்டிருந்தன. ஆனால், தாராளமயம் வந்ததும், கொள்கை உருவாக்கும் இடத்திலேயே ஊழல் நுழைந்து விட்டது. ஊழலோடு ஒட்டிக் கொண்டிருந்த திரைமறைவு பேரம் மற்றும் அவமானம் ஆகிய தன்மைகள் மறைந்துவிட்டன. உண்மையில் ஊழல் சட்டபூர்வமாக்கப்படுவது ஒன்றுதான் பாக்கி என்பதைத் தவிர ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆகிவிட்டது'' என்கிறார் திட்டக் கமிசன் உறுப்பினர் எஸ்.பி.சுக்லா.

ஒரு உற்பத்தித் தொழில் செய்து இலாபமீட்டுவதை விட, பங்கு சந்தை மற்றும் ஊகவணிகத்தில் ஈடுபடுவதும், அதைவிட அரசின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதும் விரைவாக மூலதனம் மற்றும் செல்வத்தைக் குவிக்கும் வழிகள் என்று ஆகிவிட்டது; இப்போது கொள்கை முடிவில் செல்வாக்குச் செலுத்தி நேரடியாக அரசாங்க அமைப்புகளில் பங்கேற்பது அல்லது அதிகாரத் தரகர்களை அமர்த்திக் கொள்வது என்று கார்ப்பரேட் முதலாளிகள் செயல்படுகிறார்கள். அரசே தனியார், கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளைக்கு வசதி செய்து தரும் வகையில் கொள்கை வகுப்பதுதான் நடைமுறை என்றாகி விட்டது; எனவே, கொள்கை முடிவெடுப்பதிலேயே பங்கேற்பது அல்லது செல்வாக்கு செலுத்தும் வேலையில் கார்ப்பரேட் முதலாளிகள் இறங்கிவிட்டார்கள்.

''கடந்த இருபது ஆண்டுகளில் இலஞ்ச-ஊழல், வரிஏய்ப்பு மற்றும் தொழில் - வர்த்தக - விலை தில்லுமுல்லுகளால் பல இலட்சம் கோடி டாலர்களை இந்தியா இழந்துள்ளது. 2002 முதல் 2006 வரை ஆண்டுக்கு 16 மில்லியன் அமெரிக்க டாலர் பணம் கருப்புப் பணமாக வெளிநாடுகளில் குவிக்கப்பட்டது'' என்கிறது உலக நிதி ஒழுக்கம் (GFI) நடத்திய ஆய்வு. இவ்வளவு நிதி குவியும்போது, அதைக் கொள்கை உருவாக்கம் செய்யும் அரசியல்வாதிகள், அதிகாரிகளோடு ஒரு சிறிய அளவு பகிர்ந்து கொள்கிறார்கள். இந்தியப் பொருளாதாரத்தில் வழமையாகிப்போன இதை இலஞ்ச-ஊழல், மோசடி என்பதாக கார்ப்பரேட் மற்றும் அரசியல் போட்டி காரணமாகக் ''கூச்சல்'' போடுகிறார்கள்.

இந்தக் கூச்சலும் கொஞ்ச நாளில் அடங்கிவிடும். கோடிகோடியாகப் பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கும் இத்தகைய வெள்ளுடைக் குற்றவாளிகளை சி.பி.ஐ., உச்சநீதி மன்றம், நாடாளுமன்றக் கூட்டுக்குழு ஆகிய எந்த அதிகார அமைப்புகளும் விசாரித்து, தண்டித்ததாக வரலாறே கிடையாது. விதிவிலக்காக ஒரு சிலர் தண்டிக்கப்பட்டாலும், சிறையையே அவர்கள் ''சொர்க்கலோகமாக'' மாற்றிக் கொள்கிறார்கள்.

தற்செயலாகக் கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விரைவு நீதிமன்றங்களில் தண்டிக்கப்படுகிறார்கள். தொழில்முறைக் கிரிமினல்களைச் சட்டப்படி தண்டிக்க முடியாது என்கிறபோது, ''என்கவுண்டர்'' செய்து கொன்று விடுகிறார்கள். வெள்ளுடைக் குற்றவாளிகளான கார்ப்பரேட் முதலாளிகளை, அரசுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்காகத் தண்டிப்பதில்லை என்பது அரசின் கொள்கை முடிவாகவும் சட்டமாகவும் ஆகிவிட்டது. தற்போதைய அதிகார அமைப்பும் அவர்களைத் தண்டிக்காது என்கிறபோது, மக்களே எழுச்சியுற்று ஏன் ''என்கவுண்டர்'' செய்யக்கூடாது என்ற ஆத்திரம்தான் எழுகிறது.

**சாமானிய மக்கள், கார்ப்பரேட் வெள்ளுடைக் குற்றவாளிகளின் தவறுகளை ஏதோ அறம்சார்ந்த பெரும் குற்றம் என்பதாகத்தான் பார்க்கிறார்கள். வெள்ளுடைக்குற்றவாளிகள் ''என்கவுண்டர்'' செய்ய வேண்டிய அளவுக்குக் குற்றங்கள் செய்கிறார்கள் என்பதைக் குற்றங்களின் பரிமாணமும் ஆழமும் தெரியாததால், பொது மக்களால் புரிந்து கொள்ள இயலவில்லை.**

ஆனால், அன்றாட வாழ்வில் கீழ்நிலை அதிகாரிகளின் இலஞ்ச-ஊழலை மட்டுமே காணும் சாமானிய மக்கள், இந்தக் கார்ப்பரேட் வெள்ளுடைக் குற்றவாளிகளின் தவறுகளை ஏதோ அறம்சார்ந்த பெரும் குற்றம் என்பதாகத்தான் பார்க்கிறார்கள். ''என்கவுண்டர்'' செய்ய வேண்டிய அளவுக்குக் குற்றங்கள் செய்கிறார்கள் என்பதையும் குற்றங்களின் பரிமாணமும் ஆழமும் தெரியாததால் அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. இந்த வெள்ளுடைக் குற்றவாளிகளால்தான் நகரங்களின் குடிசைகளிலிருந்துகூட சாமானியர்கள் விரட்டப்படுகிறார்கள்; கல்வி, மருத்துவ வசதிகள் பிடுங்கப்படுகின்றன. கிராமங்களில் விவசாயிகள் ஆயிரக்கணக்கில் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள்; பழங்குடிகள், மீனவர்கள், விவசாயிகளின் வாழ்வாதாரங்கள் பிடுங்கப்படுகின்றன. தொழிலாளர்கள் (''ரோபோ'') எந்திரமயமாக்கப்பட்டு, கொத்தடிமைகளாக்கப்படுகிறார்கள்.

அவர்களெல்லாம் இந்த உண்மையை உணரும்போது கார்ப்பரேட் வெள்ளுடைக் குற்றவாளிகள் ''என்கவுண்டர்'' மரண தண்டனைக்குத் தகுதியானவர்தாம் என ஏற்றுக்கொண்டு அதற்குத் தயாராகி விடுவார்கள்.

● ஆர்.கே.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

போராடியது பு.ஜ.தொ.மு. 240 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தவர்களுக்குச் சட்டப்படி பணி நிரந்தரம் கோரும் உரிமை உண்டு என்ற போதிலும், அப்படி ஒரு கோரிக்கைக்கான போராட்டத்தை துரோகத் தொழிற்சங்கத் தலைமகள் நடத்தவேயில்லை. தற்காலிகத் தொழிலாளர்களின் வாக்குரிமைக்காக பு.ஜ.தொ.மு. விடாப்பிடியாகப் போராடவே, ''300 தொழிலாளர்கள் மட்டும்தான் 240 நாட்களுக்கு மேல் வேலை செய்தவர்கள்'' என்று ஒரு பொய்க் கணக்கைக் காட்டித் தொழிலாளர் துறை ஆணையரின் ஒப்புதலைப் பெற்றது நிர்வாகம். இந்த 300 தொழிலாளிகளுக்கு வாக்குரிமையைப் பெற்றதன் மூலம், அவர்களுடைய பணி நிரந்தரத்துக்கான உரிமைக்கு மட்டுமின்றி, மீதமுள்ள 2300 தற்காலிகத் தொழிலாளர்களின் பணிநிரந்தர உரிமைக்கும் கால்கோள் இடப்பட்டிருக்கிறது. தேர்தலுக்கு முன்னரே பு.ஜ.தொ.மு. ஈட்டிய இரண்டாவது முக்கியமான வெற்றி இது.



கோவை முருகன் மில்லில் நடைபெற்ற பு.ஜ.தொ.மு.வின் பிரச்சார இயக்கம்.

மூன்றாவது வெற்றிதான் பு.ஜ.தொ.முவின் தேர்தல் வெற்றி. இந்த வெற்றியும் எளிதில் அடையப்பட்டதல்ல. தேர்தல் நடைபெற்ற 7 மில்களில் ஒரு மில்லில் மட்டுமே கோவை மண்டல பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. அதனுடைய செயல்பாடு ஏற்படுத்திய தாக்கம் எல்லா மில்களிலும் உள்ள தொழிலாளர்களை பு.ஜ.தொ.மு.வை நோக்கி ஈர்ப்பதில் பெரும் பங்காற்றியது.

எனினும், கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கு, நம்பிக்கையையும் போராட்ட உணர்வையும் ஊட்டும் பொருட்டு இடையறாத பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 7 விதமான துண்டறிக்கைகள், ஆலைவாயிற் கூட்டங்கள், சிந்திக்கத் தூண்டும் சுவரொட்டிகள், 7 மில்களிலும் ம.க.இ.க. மையக் கலைக் குழுவினர் நடத்திய கலைநிகழ்ச்சிகள் ... ஆகிய இவை அனைத்தும், துரோகத்தாலும் அடக்குமுறையாலும் துவண்டு கிடந்த தொழிலாளர்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையை முளைவிடச் செய்தன.

மற்ற தொழிற்சங்கங்கள் தமக்குள் பிளவுபட்டிருந்தாலும் பு.ஜ.தொ.மு.வை எதிர்ப்பது என்ற கொள்கையில் ஒன்றுபட்டு நின்றனர். ''அவர்கள் நக்சலைட்டுகள்; அவர்களைத் தேர்ந்தெடுத்தால் மில்லை மூடுவது உறுதி; அவர்கள் வேலை செய்யும் மில்லில் போராட்டம் நடத்தித் தொழிலாளிகளைச் சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்'' என்று பலவாறாக அச்சுறுத்தினர். ஆனால், தமது எதிர்காலத்தைக் குறித்த அச்சத்தைக் காட்டிலும் பெரிய அச்சத்தை இந்தத் தீவிரவாதப் பூச்சாண்டி தொழிலாளர்களிடம் ஏற்படுத்திவிடவில்லை. ''அவர்களுக்கு எம்.எல்.ஏ., எம்.பி. இல்லாததால் அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்திக் கோரிக்கைகளைப் பெற இயலாது'' என்று பிரச்சாரம் செய்து பார்த்தார்கள்; அப்படி எத்தனை கோரிக்கைகளை இவர்கள் நிறைவேற்றித் தந்துவிட்டார்கள் என்று எள்ளி நகையாடினார்கள் தொழிலாளர்கள். ''எம்.எல்.ஏ. இல்லை'' என்பதையும், தொழிலாளிகள்தான் பு.ஜ.தொ.மு.வின் தலைவர்கள் என்பதையுமே நம்பிக்கைக்குரிய தகுதியாக அங்கீகரித்திருக்கிறார்கள் தொழிலாளிகள்.

இத்தேர்தலில் தனது கொள்கையான ''பிரியாணியையும் பாட்டிலையும்'' வைத்து சுமார் 10 இலட்ச ரூபாய் செலவு செய்து தொ.மு.ச. கைப்பற்றியிருக்கும் இடங்கள் 2. பிரியாணியையும், பாட்டிலையும் வைத்து அந்த ஒரு நாளில் மயக்கத்திலாழ்த்தி தொழிலாளிகளின் வாக்கை அவர்கள் அபகரித்திருக்கலாம். ஆனால், தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கையை அவ்வாறு அபகரிக்க முடியாது. தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் யாரோ, போராடக் கற்றுக் கொடுப்பவர்கள் யாரோ, இழப்புகளை முன்வந்து ஏற்பவர்கள் யாரோ - அவர்கள் மட்டும்தான் தொழிலாளியின் நம்பிக்கையைப் பெற முடியும்.

பு.ஜ.தொ.மு. பெற்றிருக்கும் இந்த வெற்றி, கோவையில் உள்ள தனியார் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தோற்றுவித்திருப்பதாகவும், கமுதி - காளையார்கோவில் மில்களில் உள்ள ஏ.ஐ.டியு.சி. சங்கத் தொழிலாளர்களும், மற்ற சில சங்கங்களின் தொழிலாளர்களும் பு.ஜ.தொ.மு.வில் இணைய முன்வந்திருப்பதாகவும் கூறுகிறார், கோவை மண்டல பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் செயலர், தோழர் விளவை இராமசாமி.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கோவையில் நடைபெற்ற ரங்கவிலாஸ், ஸ்டேன்ஸ் ஆலைத் தொழிலாளர்களின் போராட்டமும், சின்னியம்பாளையம் தியாகிகளின் போர்க்குணமும் பழங்கதைகள் அல்ல. காலனியாதிக்கம், இன்று புதிய வடிவில் மறுகாலனியாக்கமாகத் திரும்பியிருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட வரலாறு மட்டும் திரும்பாதா என்ன? திரும்ப வைப்போம்!

-தகவல்: பு.ஜ.தொ.மு; கோவை.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11


# புதிய நூல்கள்... புதிய கருத்துக்கள்... கீழைக்காற்று

## சென்னை புத்தகக் காட்சியில்

## கடை எண் 39, 40

**நாள் : சனவரி 4 - 17 வரை**

**நேரம் : மதியம் 2.30 - 8.30 வரை**

**விடுமுறை நாட்களில் காலை 11.30 - 8.30 வரை**

**இடம் : புனித ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி**


**சென்னை - 30. (பச்சையப்பன் கல்லூரி எதிரில்)**




கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் முக்கிய நாட்குறிப்புகள்




அருந்ததி ராய் / கரண் தபார் விவாதம்




ஈராக்: வரலாறும் அரசியலும்




விடுதலைப் போரின் வீரமரபு




மீண்டும் தொழிலாளி வர்க்கம்



நினைவின் குட்டை கனவு நதி



நிஜத்தின் உரைகல்லில் நிழல் சினிமா



பெண் எப்போது பெண்ணாக இருந்தாள்?



கண்ணை மறைக்கும் காவிப் புழுதி

**மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி போன்ற போராடும் அமைப்புகளின் சீரிய ஆக்கங்கள்... பாடல் / உரை, ஒலி-ஒளி குறுவட்டுகள் மேலும் அரசியல் தேவைகளுக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே கூரையின் கீழ்...**

**வாருங்கள்!**

## கீழைக்காற்று

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002. தொ.பே. 044-28412367